Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

கண்காட்சிக் கூடம் இல:205

Stall No : 205




50 W சமமான ஒளியை எமது 3W LED மின் குமிழினை 1 மாதம் தொடர்ந்து பயன்படுத்தி மின்கட்டணமாக 1.67 மட்டுமே செலவு செய்யுங்கள்.

(C/1251)

வர்த்தகக் கண்காட்சி, துரையப்பா விளையாட்டரங்கு

முரசு – 02 திருவள்ளுவர் ஆண்டு 2042 தை 08 ஞாயிற்றுக்கிழமை (22.01.2012) பக்கங்கள் 16 ஓசை – 112













# கிராமிய வளர்ச்சிக்கு உதவ தயார் என்கிறார் கலாம்


## யாழ்ப்பாணம் நாளை வருகிறார்

(கொழும்பு)

இலங்கையில் கிராமப்புற பிரதேசங்களுக்கு நவீன வசதிகளை பகிர்ந்தளிக்கும் செயற்திட்டத்திற்கு பங்களிப்பு செய்வதற்கு தாம் தயாராக இருப்பதாக இந்தியாவின் முன்னாள் ஜனாதிபதியும், பிரபல விஞ்ஞானியுமான அப்துல் கலாம் தெரிவித்துள்ளார்.

நான்கு நாள் விஜயத்தை மேற்கொண்டு நேற்று முன்தினம் அதிகாலை கொழும்பு வந்த கலாம் நேற்றைய தினம் அலரிமாளிகையில் இடம்பெற்ற மும்மொழி அங்குரார்ப்பண நிகழ்விலும் கலந்துகொண்டார்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடன் இணைந்து மும்மொழித் திட்டத்தை ஆரம்பித்துவைத்த அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில்,



பௌதீக, இலத்திரனியல் மற்றும் அறிவியற்துறைகளை இணைப்பதன் மூலம் இலங்கையில் 15 ஆயிரத்திற்கும் அதிகமான கிராமங்கள் ஊடாக பொருளாதார தொடர்புகளைக் கட்டியெழுப்ப முடியும். ஒரு நாடு என்ற அடிப்படையில் ஒற்றுமையாக முன்னோக்கி செல்வதன் ஊடாக அனைத்து எதிர்பார்ப்புக்களையும்

(15 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்ப்பாண பெண் சென்னையில் மாயம்

(சென்னை)

சென்னை மீனம்பாக்கம் அண்ணா சர்வதேச விமான நிலையத்தில் இருந்து கொழும்புக்கு செல்லவிருந்த யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பெண் ஒருவர் விமான நிலையத்திலிருந்து காணாமற்போயுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 26 வயதான தானுஷா என்பவரே காணாமற்போயுள்ளார். இவர் சுங்க, குடியுரிமை சோதனைகளை முடித்துக்கொண்டு இலங்கைக்குச் செல்லும் விமானத்தில் ஏறத்தயாராக இருந்தார்.

ஆனால் விமானம் புறப்பட இருந்த நேரத்தில் இவர் காணாமற் போய்விட்டார். இதனால் குறித்த விமானம் 15 நிமிட தாமதத்திற்கு பின்னரே புறப்பட்டுள்ளது.

இச்சம்பவம் குறித்து சென்னை விமான நிறுவன அதிகாரிகள் விசாரணைகளை மேற்கொண்டபோது, இவ் விமானம் புறப்பட்டுச் செல்லும் முன் ஒரு பெண் தனது போர்டிங் பாஸ் மற்றும் பயணச்சீட்டை கொடுத்துவிட்டு வெளியே சென்றதை கண்டுபிடித்துள்ளனர். போர்டிங் பாஸ் போட்டபின் ஒரு பயணி வெளியே செல்ல அனுமதி கிடையாது என்பதால் இவரை (15 ஆம் பக்கம் பார்க்க)

## இடமாற்றம் பெற்ற ஆசிரியர்கள் கடமைகளைப் பொறுப்பேற்கவில்லை

### மாணவர்களின் கல்வி பாதிப்பென விசனம்

முல்லைத்தீவு வலயத்திற்குட்பட்ட ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்ட இடமாற்றங்களின் அடிப்படையில் குறித்த ஆசிரியர்கள் தமது கடமைகளைப் பொறுப்பேற்காததால் மாணவர்களின் கல்வி பாதிக்கப்படும் வாய்ப்பு அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

முல்லைத்தீவு வலயத்தில் இடமாற்றம் தொடர்பாக மேற்படி வலயத்தின் இடமாற்றசபை கூடி 133 ஆசிரியர்களின் பெயர்களைச் சிபார்சு செய்து அவர்களுக்கு முல்லைத்தீவு வலயத்தில் இடமாற்றங்களை வழங்கியிருந்தது. இவ்வாறு இடமாற்றம் வழங்கப்பட்ட ஆசிரியர்கள் தமக்கு இடமாற்றம் வழங்கப்பட்ட பாடசாலையில் இதுவரை தமது கடமைகளைப் பொறுப்பேற்காது உள்ளனர்.

இவ்வாறான சில ஆசிரியரின் செயற்பாடு காரணமாக மாணவர்களின் கல்விச் செயற்பாடுகளில் பாதிப்பு ஏற்பட்டிருப்பதாகத் தெரியவருகின்றது. அதேவேளை, பாடசாலை நிர்வாகத்திற்கும் வசதீயினங்களை இவர்கள் ஏற்படுத்துவதாகத் தெரிவிக்கப்படுகிறது. இடமாற்றம் வழங்கப்பட்ட ஆசிரியர்கள் (15 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ் மக்களின் நேர்மையான தலைவராக அமைச்சர் டக்ளஸ் விளங்குகிறார்

### அமைச்சர் றிசாட் புகழாரம்



தமிழ் மக்களின் சிறந்த நேர்மையான தலைவராக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா விளங்கி வருவதுடன் வடபகுதியின் அபிவிருத்தி மற்றும் மேமபாட்டு திட்டங்களையும் துறைசார்ந்தோர் ஊடாக சிறப்பாக முன்னெடுத்து வருகிறார் என கைத்தொழில் மற்றும் வணிகத்துறை அமைச்சர் றிசாட் பதியுதீன் புகழாராம் சூட்டியுள்ளார்.


மன்னாரில் நேற்றைய தினம் இடம்பெற்ற குடும்பப் பொருளாதார மற்றும் போசனை விருத்திக்காக 25 இலட்சம் மனைப் பொருளாதார அலகுகளை அபிவிருத்தி செய்வதற்கான வாழ்வெழுச்சி தேசிய நிகழ்ச்சித் திட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இந்நாட்டில் நிலவிய கொடிய யுத்தத்திற்கு முடிவு கட்டி ஒரு நிலையான சமாதானத்தை ஏற்படுத்தித்தந்தது மட்டுமல்லாமல் இன,மத,மொழி என்ற எவ்விதமான பாகுபாடும் இன்றி மக்களின் மேம்பாட்டுக்காக உழைத்து வருகின்றார்.

இந்த நிலையில் கிடைக்கப் பெற்றுள்ள சமாதான சூழலை இல்லாதொழிக்க வேண்டுமென்பதில் சிலர் திட்டமிட்டு செயற்பட்டு வருகின்றனர் எனவே இவ்வாறான (15 ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.நா. செயலர் பான் கி மூன் இலங்கை விடயத்தில் இரட்டை முகம்

### சாடுகிறது இன்னர் சிற்றி பிறஸ்



இலங்கை விடயத்தில் ஐ.நா. செயலர் சொல்லொன்றாகவும், செயலொன்றாகவுமென இரட்டை முகத்துடன் செயற்படுகிறாரென இன்னர் சிற்றி பிறஸ் கடுமையான விமர்சனத்தை முன்வைத்துள்ளது. இது தொடர்பாக இன்னர் சிற்றி பிறஸின் ஊடகர் மத்தியூ ரஸஸ் லீயின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இலங்கையின் போர்க்குற்றங்கள் குறித்து பான் கி மூன் போர்க்குற்ற விசாரணைகளுக்கான நடவடிக்கைகள் எதனையுமே எடுக்கவில்லை.

இக்குற்றங்களில் இலங்கையின் ஐ.நா. பிரதிநிதி அலுவலகத்தாலேயே மேற்கொள்ளப்பட்டவை என்பது குறிப்பிடத்தக்கது.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடனான சந்திப்பொன்றின்போது, ஐ.நா. செயலாளர் நாயகம், ஆட்சியைக் குறைகூறுவதை விடுத்து, தனது ஊழியர்களையே குறை சொன்னார்.

குற்றப் பொறுப்புக்கள் தொடர்பில் சொல்லுக்கும் செயலுக்கும் இடையில் பெருமளவான வேறுபாட்டை ஐ.நா.செயலாளர் நாயகம் கொண்டிருக்கிறார்.

கடந்த வியாழன் அன்று, சட்டத்தின் மேலாண்மை பற்றிப் பெரிதாகப் பேசிய பான் கி மூன், குற்றச் செயல்களுக்குப் பொறுப்பானவர்களைத் தண்டிப்பதில், தாம் சர்வதேச விசாரணைகளைப் பெரிதும் விரும்புவதாகவும், பொதுவாக மன்னிப்புக்களைத் தாம் எதிர்ப்பதாகவும் குறிப்பிட்டார்.

அப்போது, யேமன் சர்வாதிகாரி அலிசாலே விவகாரத்தில்,

(15 ஆம் பக்கம் பார்க்க)

## நோர்வேயில் வசித்த இலங்கை தமிழ் பெண் குழந்தையுடன் தீயில் கருகி மரணம்



நோர்வேயில் வசித்துவந்த இலங்கையைச் சேர்ந்த இளம் தமிழ்ப் பெண் ஒருவர் தனது குழந்தையுடன் தீயில்கருகி மரணமடைந்துள்ளார்.

இச் சம்பவம் கடந்த திங்கட் கிழமை இடம்பெற்றது. கரலின் நேசராஜா என்னும் இப் பெண் தனது ஒன்றரை வயதுக் குழந்தையுடன் தன்னை எரியூட்டியுள்ளாரெனத் தெரிவிக்கப்படுகிறது.

அவரது வீட்டில் ஏற்பட்ட தீயை அவதானித்த பொலிஸார் உடனடியாக விரைந்து சென்று அவரைக் காப்பாற்ற உலங்கு வானூர்தியின் உதவியை நாடியுள்ளனர்.

பரா மெடிக்ஸ் என்று அழைக்கப்படும் அவசர உலங்கு வானூர்தி மருத்துவச் சேவை மூலம் இவரும் இவரது குழந்தையும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

இருப்பினும் எரிகாயங்கள் காரணமாக இருவரும் பரிதாபமாக உயிரிழந்துள்ளனர். இது

(15 ஆம் பக்கம் பார்க்க)

# வட்டு. மேற்கு கிராமத்தை முன்னேற்ற இந்தியன் வங்கி விசேட நிதித்திட்டம்



(யாழ்ப்பாணம்)

இந்தியன் வங்கியினால் வட்டு. மேற்கு கிராமத்தை சமூக, பொருளாதார ரீதியில் முன்னேற்றுவதற்கு இரண்டாண்டு திட்டத்தின் அடிப்படையில் நிதி மற்றும் நிதிசாரா திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இந்தியன் வங்கியின் முதலாம் ஆண்டு நிறைவையொட்டி நேற்று அறிமுகப்படுத்தப்பட்ட இத் திட்டத்தில் குறித்த முன்மாதிரிக் கிராமத்தைச் சேர்ந்த 463 பயனாளிகளுக்கு 41.15 மில்லியன் வாழ்வாதாரக் கடன் உதவி வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

இதன் முதற்கட்டமாக 101 பயனாளிகளுக்கு 7.64 மில்லியன் ரூபா பெறுமதியான வாழ்வாதாரக் கடன்கள் வழங்கப்பட்டுள்ளது. நேற்று முற்பகல் 11.00 மணிக்கு யாழ்.ஸ்ரான்லி வீதியில் அமைந்துள்ள இந்தியன் வங்கிக் கிளையில் நடைபெற்ற இந்நிகழ்வு வங்கியின் யாழ்.கிளையின் சிரேஷ்ட முகாமையாளர் எஸ்.சந்திரசேகர் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினர்களாக இந்திய துணைத் தூதர் வி.மகாலிங்கம், யாழ். மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் ஆகியோர் கலந்து கொண்டு 30 பயனாளிகளுக்கு கடன் தொகைகளை வழங்கி வைத்ததுடன், இந்தியன் வங்கியின் இந்திய முறையிலான மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கான சேமிப்பு புத்தகங்களையும் வழங்கி வைத்தனர்.

தொடர்ந்து இந்தியத் துணைத் தூதர், யாழ். அரச அதிபர் ஆகியோர் சிறப்புரையாற்றினர். வரவேற்புரையை இந்தியன் வங்கியின் யாழ். கிளையின் சிரேஷ்ட முகாமையாளர் எஸ்.சந்திரசேகர் நிகழ்த்தினார்.

மேலும் இந்நிகழ்வில், வட்டு.மேற்கு கிராம மக்கள், அரச அதிகாரிகள், யாழ்.வணிகர் கழகத்தினர், இந்தியன் வங்கியின் கொழும்பு உதவிப் பொதுமுகாமையாளர் மற்றும் இந்தியன் வங்கி ஊழியர்கள் முதலானவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர். (பா)

# நீதிமன்றச் செய்திகள்

(யாழ்ப்பாணம்)

கடத்தல் செய்தவரிடம் வாகனத்தைக் கொள்வனவு செய்தார் என குற்றஞ்சாட்டப்பட்ட நபரை ஒருவார விளக்கமறியலில் வைப்பதுடன், நுவரெலியா நீதிமன்றில் ஆஜர்படுத்துமாறு யாழ்.நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கடந்த காலங்களில் நுவரெலியா மாவட்டத்தில் இடம்பெற்ற கொலைக்குப் பயன்படுத்தப்பட்ட வாகனம் மிகக் குறைந்த விலைக்கு வாங்கப்பட்டது. வாகன்த்தை குறைந்த விலைக்கு வாங்கிய யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சந்தேக நபரை, 3 நாட்கள் யாழ்.பொலிஸார் தடுப்புக் காவலில் வைத்து விசாரணை மேற்கொண்டனர்.

விசாரணையின் பின்னர் கடந்த செவ்வாய்க்கிழமை யாழ்.நீதவான் நீதிமன்றில் வாகனமும், சந்தேக நபரும் யாழ்.பொலிஸாரினால் ஆஜர்படுத்தப்பட்டது.

மேற்படி வழக்கினை விசாரித்த யாழ்.நீதவான் நீதிமன்ற நீதிபதி மா.கணேசராசா வாகனத்தை நுவரெலியா நீதிமன்றுக்கு அனுப்பி வைக்குமாறு உத்தரவிட்டார்.

அதேவேளை, சந்தேக நபரை நாளை மறுதினம் நுவரெலியா நீதிமன்றில் ஆஜர்படுத்துமாறு யாழ்.சிறைச்சாலை அத்தியட்சகருக்கு நீதவான் உத்தரவிட்டார். (எஸ்)

# மாணவன் செலுத்திய ஆட்டோ விபத்தில் சிக்கியதில் சேதம்

(யாழ்ப்பாணம்)

ஆட்டோ மரத்துடன் மோதி விபத்துக்குள்ளான சம்பவத்தில் ஆட்டோவைச் செலுத்தி வந்த மாணவன் அதிர்ஷ்டவசமாகத் தப்பியுள்ளார்.

யாழ்.மத்திய கல்லூரிக்கு முன்பாக கடந்த புதன்கிழமை காலை 11.15 மணியளவில் இவ் விபத்துச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக தெரியவருவதாவது, குறித்த வீதியில் தனியார் பேருந்து வண்டி வந்து கொண்டிருந்த வேளை அதை விலத்தி வழி கொடுக்க முற்பட்ட ஆட்டோ கட்டுப்பாட்டை இழந்து மரத்துடன் மோதியுள்ளது.


இதில் ஆட்டோ பலத்த சேதமடைந்துள்ளது. வாகனச் சாரதி அனுமதி பெறுவதற்கு வயது கட்டுப்பாடு உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (எஸ்)

# யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மருத்துவ உபகரணங்கள் அன்பளிப்பு

கொழும்பு தெற்கு றோட்டறிக் கழக ஏற்பாட்டில் கனடாவிலுள்ள கனேடிய மருத்துவ மற்றும் பல்அபிவிருத்திச் சங்கத்தினால் 12.379 மில்லியன் ரூபா பெறுமதியான எதிரொலி இதயத் துடிப்பு பதிவு கருவி, ஈ.சி.ஜி இயந்திரம், தானியங்கி இரத்த அழுத்த கண்காணிப்புக் கருவிகள் என்பன யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளது. இப் பொருட்களை வைபவ ரீதியாக கையளிக்கும் நிகழ்வு நாளை காலை 10.00 மணிக்கு வைத்தியசாலை பணிப்பாளர் தலைமையில் இடம் பெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக இலங்கைக்கான கனடா தூதுவர் புரூஸ் லீவி; சிறப்பு விருநிதினர்களாக சுகாதார அமைச்சின் மேலதிகச் செயலாளர் டாக்டர் பி.ஜி.மகிபாலா, றொட்டேறியன் பி.ஏச்.எப். ஜெகான் ஸ்ரீ பத்தனா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இவ் உதவி ஏற்பாட்டாளராக கனடா மருத்துவ மற்றும் பல்



அபிவிருத்தி சங்கத்தின் முன்னாள் தலைவரும், இதய மருத்துவருமான டாக்டர் வி.சந்தகுமார் செயற்பட்டு இருந்தமை குறிப்பிடத்தக்கது.

# நடமாடும் சேவை

கரவெட்டி ஸ்ரீ சாரதா வித்தியாலயத்தில் நடமாடும் சேவை இன்று இடம்பெறவுள்ளது.

காலை 8.00 மணி தொடக்கம் மாலை 4.00 மணி வரை இடம் பெறும் இச்சேவையில் நெல்லியடிப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, கரவெட்டிப் பிதேச செயலர், கிராம சேவையாளாகள் மற்றும் திணைக்கள அதிகாரிகள் கலந்துகொண்டு மக்களின் பிரச்சினைகளுக்கு ஆலோசனைகளும், தீர்வுகளையும் வழக்கவுள்ளனர்.(18)

# அமாவாசையில் முழு நிலவு அபிராமி அன்னையின் அற்புதம்



பக்தனின் வாய்மொழி மெய்மொழியே என மெய்ப்பித்து பக்தனை அபிராமிபட்டராக்கினாள் அன்னை ஆதிபராசக்தி.

இன்று தை அமாவாசை ஆனால் அமாவாசையை முழு நிலவு ஆக்கிய அன்னை அபிராமியின் பக்தனுக்கு அருளும் மாண்பினை விளக்கும் காட்சியொன்று எல்லா ஆலயங்களிலும், திருக்கடவூர் அன்னை அபிராமியின் திருமுன்னும் நடப்பது வழக்கம்.

மார்க்கண்டனுடைய உயிரைக கவர வந்த காலனை காலால் உதைத்த கால காலர் வாழும் பதி திருக்கடவூரில் ஒரு முறை சரபோஜி மன்னர் தை அமா வாசையன்று கோயிலுக்கு வந்தார். நிஷ்டையிலிருந்த சுப்பிர மணியன் என்ற பக்தரை நோக்கி இன்று என்ன திதி என்று கேட்டார். அன்னையின் முழுநிலவு போன்ற திருமுகத்தையே மனக் கண்ணால் கண்டு கொண் டிருந்த அவர், பௌர்ணமி திதி என்று சொல்லி விட்டார். ஆனால் அன்று தை அமாவாசை.

தன்னை அவமதித்தாக எண்ணிய மன்னன், அந்தணரை நோக்கி இன்று இரவு முழு நிலவு தோன்றவில்லை என்றால் உமக்கு சிரச்சேதம் என்று கட்டளையிட்டார்.

உதிக்கின்ற செங்கதிர்... என்று முதலாவது பாடலுடன் ஆரம்பித்து, விழிக்கே அருள் உண்டு... என்று அவளது கடைக்கண் பெருமையைக் கூறி, 79ஆவது பாடலை முடிக்க அன்னை அபிராமி தன் மகன் அபிராமிபட்டருக்காக நிலவை வானில் தவழவிட்டாள்.

அதன் பின்னர் அந்தாதியைத் தொடர்ந்து 100 பாடல் பாடி முடித்தார் பட்டர்.

மதி (நிலவு) வரா நாளிலும்.. மதி (சிந்தனை) செயல் புரியா வேளையிலும்.. விதியே சதி செய்த நிலையிலும் கூட.... அம்பிகையின் அருள் மேலான வாழ்வை.. வெற்றியை தரும் என்று நிறுவும் திருநாள் இன்றைய தை அமாவாசை... இத்திருநாளை போற்றுவோம்.

# நாட்டுப்புறக் கலையை மேம்படுத்த நடவடிக்கை

(குருநகர்)

குருநகர் நாட்டுக் கூத்து மன்றத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் அண்மையில் இடம்பெற்றது. இதில் கூத்துக் கலையை மேம்படுத்த எதிர்காலத்தில் செய்ய வேண்டிய நடவடிக்கைகள் பற்றி முக்கிய தீர்மானங்கள் எடுக்கப்பட்டது.

மன்றத்தால் தாயாரிக்கப்பட்ட 'ஆளுமை' வீடியோ திரைப்படத்தைப் போன்று புதிய படங்களை உருவாக்குவதற்கு வேண்டிய நிதி வழங்கலை திரட்ட முயற்சி எடுக்கும் முக்கிய தீர்மானம் எடுக்கப்பட்டது.

மேலும் எடுக்கப்பட்ட தீர்மானங்களில் இளைய தலைமுறையினரை இணைத்துச் செயற்படல், வளர்த்தல், குடாநாட்டின் பல்வேறு கிராமங்களுக்கும் சென்று தேசிய நாட்டுக் கூத்தான தென்மோடியை பயிற்றுவித்தல் என்பனவும் அடங்கும்.

நடப்பாண்டு நிர்வாகிகளாக கீழ்க்கண்டோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவராக கி.கிறிஸ்தோப்பர், உபதலைவராக ம.ஆரோக்கியநாதர், செயலாளராக செ.யூலன், உப செயலாளராக சே.சுவைணஸ், பொருளாளராக அ.மரியதாஸ், நிர்வாக சபை உறுப்பினர்களாக கி.மக்ஸிமஸ், அ.அருளானந்தம், இ.செறிங்ரன், கி.சுமேலன் ஆகியோர் தெரிவாகினர்.(68)


## சிறு விளம்பரம்

**டயானா பிளாஸ்ரிக் தொழிலகம்**

சகல விதமான மோட்டார் சைக்கிள், வாகனங்கள் என்பவற்றின் உடைந்த பிளாஸ்ரிக் பொருட்கள் உத்தரவாதத்துடன் ஒட்டித்தரப்படும். உற்பத்திகளும் உண்டு.

கனகசபை லேன், சிவலிங்கப்புளியடி, யாழ்ப்பாணம். Tel - 021 222 8680, 0775925088 (C/1186)


# அனுமதிப் பத்திரம் கண்டெடுப்பு

சங்கானையைச் சேர்ந்த என். புவனேந்திரன் என்பவரின் மோட்டார் சைக்கிள் அனுமதிப் பத்திரம் வீதியில் கண்டெடுக்கப்பட்டு தினமுரசு காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் ஆதாரம் காட்டிப் பெற்றுக் கொள்ளவும்.

# பொதுக்கூட்டம்

யாழ்.மாவட்ட கால்பந்தாட்ட மத்தியஸ்தர்களுக்கான கூட்டம் இன்று காலை 11.00 மணிக்கு நாவாந்துறை சென். நீக்லாஸ் கழக மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

எனவே சகல மத்தியஸ்தர்களும் இக் கூட்டத்துக்கு தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (20)




**அவுஸ்ரேலியா குடும்ப விசா**

**இதுவரை எம்மிடம் ஆலோசனை பெற்று அவுஸ்ரேலியா 5 வருட விசா பெற்று குடியேறியோர் (3) குடும்பங்கள் விபரங்களைப் பார்வையிடலாம்.**

**திசைகாட்டி (பிறைவேட்) லிமிட்டெட்,**
**37, சிவகுருநாதர் ஒழுங்கை,**
**யாழ்ப்பாணம்.**
**தொலைபேசி இல : 021 221 9016** (C/1254)





**புங்குடுதீவு மேற்கு இறுப்பிட்டி அரிய நாயகன்புலம்**
**அருள்மிகு ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலயம்**

**கர வருஷ மஹோற்சவ விஞ்ஞாபனம் - 2012**

கொடியேற்றம் 29.10.2012

தீர்த்த திருவிழா 07.02.2012

தேர்த்திருவிழா 06.02.2012

காலை
கும்பபூஜை 8.00 மணி
கொடித் தம்ப பூஜை 9.30 மணி
வசந்த மண்டபப் பூஜை 11.00 மணி
சுவாமி வீதியுலா

மாலை பூஜை 5.00 மணி
கொடித் தம்ப பூஜை 5.30 மணி
கூட்டு வழிபாடு 6.00 மணி
மங்கள வாத்தியம் 6.30 மணி
வசந்த மண்டப பூஜை 8.00 மணி
சுவாமி வீதியுலா

அனைவரும் வருக அருள் பெறுக

ஆலய பரிபாலன சபையினரும்
விழா உபயகாரர்களும்

(C/1253)

**மற்றவர்களுடைய துன்பத்தைக் கண்டு இரக்கப்படு; ஆனால் உன்னுடைய சொந்த துன்பங்களை உன்னிடமே வைத்திரு!**

- அகிடன் பிரபு -

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212221811
thinamurasu@live.com

## உரையாடல்களைத் திறப்போம்!

எங்கள் கஷ்டங்கள் தீர வேண்டுமென்றால், சுதந்திரமாக நாம் உலவ, விரும்பிய தொழிலொன்றைப் பெற்றுக் கொள்ள, கல்வி கற்க, மற்றைய சமூகங்களோடு நாமும் சமமானவர்கள் என்றுணர, அதிகாரங்கள் பகிரப்பட வேண்டும் என்று எண்ணுகிறோம். அதற்குரிய தீர்வொன்று வந்துவிட வேண்டும் என்று காத்திருக்கிறோம்.

ஆனால் எமது மக்களின் சார்பாகப் பேச்சு நடத்துவதாகச் சொல்லி அரசாங்கத்துடன் பேசுபவர்கள், வந்து என்ன சொல்கிறார்கள். "பேச்சு சரிவராது, அரசு தீர்வைத் தராது, இருபது சுற்றுப் பேசியும் ஒரு அங்குலமும் நாங்கள் நகரவில்லை, வெளியார் வந்து மிரட்டாமல் எங்கள் பேச்சால் எந்தப் பயனும் விளையாது..." என்பதையேதான் விடாமல் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்.

றொபேட் ஓ பிளேக் இங்கு வந்து சொன்னதைக் காதில் வாங்கிக் கொள்ளாமலே, நாங்கள் அமெரிக்கா போய்ப் பேசி அரசைப் பணிய வைக்கிறோம் என்று கிளம்பிப் போய் வெறுங்கையோடு வருகிறார்கள். பிறகு, இந்தியாவின் பிரதிநிதியாக கிருஷ்ணா வந்து சொன்னது எதுவும் காதில் விழாதது போலவே பம்மிவிட்டு, மன்மோகன் சிங்கைப் போய்ப் பார்த்து மக்கள் பிரச்சினையைத் தீர்க்கிறோம், இன்னுங் கொஞ்சக்காலம் பல்லைக் கடித்துக் கொண்டு இருங்கள் என்கிறார்கள்.

இதற்கிடையில், நிலம் போகிறது, கலாசாரம் அழிகிறது, அரசு நம் காணிகளைக் களவாடப் போகிறது, அபிவிருத்தி நடக்கவில்லை என்றும் அவ்வப்போது சில பிலாக்கணங்களை எடுத்து வீசிவிட்டு, தங்கள் சொந்த அலுவல்களைக் கவனிப்பதில் மும்முரமாகிவிடுகிறார்கள். தடுத்து வைக்கப்பட்டிருப்போர், இன்னும் மீள்குடியேற்றம் நடக்காதோர் தொகையெல்லாம் கணிசமான அளவுக்குக் குறைந்து வாக்கு எண்ணிக்கையில் இப்போது அது அதிகமில்லை என்பதால், அவர்களைக் குறித்த வசனங்கள் இப்போது மிஸ்ஸிங்.

மற்றும்படி, எதுவும் நடக்காது என்பதைச் சொல்லிப் புலம்புவதையே அரசியலாக நடத்திக் கொண்டிருப்பதற்கு, இவர்களுக்கு தீவிரவாத தேசியப் பேச்சும், இனவாத உசுப்புகைகளும், மக்களை ஆவேச நிலையில் வைத்திருக்க உணர்ச்சிகர முழக்கங்களும் போதுமாக இருக்கிறது.

அடிபாடும் சரிவராது; இந்த "அகிம்சைவாதிகளுக்கு"ப் பேச்சும் சரிவராது; மக்களிடம் இறங்கிப்போதல், ஒன்றுதிரட்டுதல், ஜனநாயகப் போராட்டங்களில் ஈடுபடுத்துதல்... எதுவும் செய்வதற்குச் சொகுசு விடாது. வரும் அரசாங்கங்களை எல்லாம் வெறும் பிலாக்கணத்தால் வீழ்த்தும் முயற்சியிலேயே, அந்தப் போலி நம்பிக்கையிலேயே மக்கள் தங்கள் கஷ்டங்களையெல்லாம் சகித்தபடி தேர்தலுக்குத் தேர்தல் வாக்குப் போடவைத்துக் கொண்டிருக்கலாம் என்பது எவ்வளவு பெரிய ஏமாற்றாக இன்னும் தொடர்கிறது?

தீர்வு காண்பதற்கு நம்பிக்கை கொள்ளாது, அதற்கான எந்த முயற்சிகளிலும் இறங்க நம்பிக்கையில்லாது, யாரிடமும் எதுவும் கேட்டுக்கொண்டிருக்க வேண்டிய தேவை தமிழனுக்கு இல்லை, தமிழனா கொக்கா என்ற வீரவசன நினைவுகளுடனேயே மக்களை உசுப்பேத்தி உசுப்பேத்தி எப்படி மேலும் மேலும் கீழிறக்கிக் கொண்டிருக்கிறார்கள் என்பதை, சிந்திக்கும் தமிழ்த்தரப்பினர் மக்களுக்கு எடுத்துச் சொல்ல வேண்டிய தருணம் இது.

இதற்கு மேலும் மௌனம் சாதித்து நம் சமூகத்தை இன்னுமின்னும் கீழ் படிகளுக்குக் கொண்டுசெல்ல படித்தவர்கள், விவரமறிந்தவர்கள் துணைபோய்விடக்கூடாது. யதார்த்தம் என்ன என்பது மக்களுக்கு அறியத்தரப்பட வேண்டும், விவாதிக்கப்படவும் வேண்டும்.

இந்த நாட்டுக்குள் நாம் யார்யாருடன் சேர்ந்து வாழப் போகிறோம் என்பதைச் சிந்திக்க வேண்டும். அவர்கள் எல்லோருடனுமான உரையாடல்கள் திறக்கப்பட வேண்டும். எல்லா வித்தியாசங்களையும் மீறி மக்கள் எல்லோரும் ஒன்றே. தங்களை மனிதர்களாகக் கருதிக்கொள்ளும் யாரும், மற்றவர்களின் உரிமைகளை நசுக்கியே தாம் வாழ்வதற்கான நியாயத்தைப் பெறமுடியும் என்று நம்பப் போவதில்லை. வரலாற்றில் வளர்ந்து விரிந்து வரும் மனிதர் நாம். சக மனிதர்களை நம்புவோம்; பேசுவோம்.

- ஆசிரியர் -

# வவுனியாவில் மையம் கொள்கிறது துஷ்பிரயோகமும், கலாசாரச் சீரழிவும்

(வவுனியா)

வவுனியா நகரில் இரண்டாம் குறுக்கு வீதி இப்போது சன நடமாட்டம் அதிகமான பகுதியாக மாறி வருவதுடன் சமூகச் சீரழிவின் மையப்புள்ளியாகவும் உருவெடுத்து வருகிறது.

அண்மைக் காலமாக இப்பகுதியில்தான் தனியார் பஸ் வண்டிகள் தரித்துக் கொள்வது வழக்கம். வன்னிப் பகுதியின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் வவுனியாவிற்குச் செல்வதும் தனியார் பஸ் வண்டிகள் அனைத்தும் அப்பகுதியில் தரிப்பதால் அப்பகுதி சனநெரிசல் மிக்கதாக உருமாறி வருகின்றது.

இந்தச் சூழல் மாற்றத்துடன் இணைந்ததாக சமூகச் சீரழிவுகளும், பெண்கள் துஷ்பிரயோகம் செய்யப்படும் சம்பவங்களும் அதிகரித்துச் செல்கின்றன.

இத்துஷ்பிரயோகச் சம்பவங்களுக்கு வழிகாட்டுபவர்களாக அல்லது சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுப்பதில் போக்குவரத்துச் சேவை ஊழியர்களும் அப்பகுதியில் போக்குவரத்து வழங்குபவர்களும் ஈடுபட்டு வருவதாக எமக்குக் கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இவ்வாறான செயற்பாடுகள் அண்மைக்காலமாக அப்பகுதியில் அதிகரித்து வருவதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. எனவே இவற்றைத் தடுத்து நிறுத்துவதற்கு சமூக நலன் விரும்பிகள் முன்வருவார்களா என பொதுமக்கள் எதிர்பார்க்கின்றனர்.

## "சிவானந்தம்" சஞ்சிகை வெளியீடு

(யாழ்ப்பாணம்)

சர்வதேச இந்துகுருமார் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் "சிவானந்தம்" ஆன்மிக சஞ்சிகை வெளியீடும் இணையத்தள அங்குரார்ப்பண விழாவும் இன்று மதியம் 2 மணிக்கு ஆனைப்பந்தியில் அமைந்துள்ள சர்வதேச இந்து குருமார் ஒன்றியத்தில் நடைபெறவுள்ளது.

சர்வதேச இந்து குருமார் ஒன்றியத் தலைவர் சிவஸ்ரீ சபா.வாசுதேவக் குருக்கள் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில், பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் இமெல்டா சுகுமார், சிறப்பு விருந்தினராக யாழ்.பல்கலைக் கழக மனிதவள முகாமைத்துவத்துறை பேராசிரியர் ச.தேவராசா, கௌரவ விருந்தினர்களாக சட்டத்தரணி பிரம்மஸ்ரீ மு.பாலசண்முகசர்மா ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளார்கள். (எஸ்)

## இளம் பெண் மரணம்; வவுனியாவில் இருவர் கைது

(வவுனியா)

வவுனியா-உலுக்குளம் பகுதியில் வயல் வேலைக்குச் சென்ற பெண் நேற்றுக் காலை கிணறொன்றில் இருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

உலுக்குளம் கிராமத்தைச் சேர்ந்த ரணதுங்கலாகே விமலரஞ்சினி (வயது - 29) என்ற இரண்டு பிள்ளைகளின் தாயே இவ்வாறு மரணமடைந்த நிலையில் கிணற்றில் இருந்து சடலமாக மீட்கப்பட்டவராவர்.

தமது வயலில் நீர் பாய்ச்சுவதற்காகச் சென்றவரைக் காணவில்லை என உறவினர்கள் தேடிய போது கிணற்றில் சடலம் காணப்பட்டதாகத் தெரியவருவதுடன், இவரது மரணம் தொடர்பாக இருவரை வவுனியா பொலிஸார் கைது செய்துள்ளதுடன் மேலதிக விசாரணைகளையும் மேற்கொண்டுள்ளனர்.

# புலிகளின் சர்வதேச வலையமைப்பு முழுமையாக முடக்கப்பட வேண்டும்

(கொழும்பு)

புலிகளின் சர்வதேச வலையமைப்பினது நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்த அரசு தீவிர நடவடிக்கை எடுக்க வேண்டுமென ஐக்கிய தேசியக் கட்சி, அரசாங்கத்திடம் கோரியுள்ளது.

புலிகளின் தலைவர் பிரபாகரன் மற்றும் புலிச் சின்னங்கள் பொறிக்கப்பட்ட தபால் முத்திரைகள் வெளிநாடுகளில் பிரசுரம் செய்யப்பட்டமை நாட்டுக்கு ஆரோக்கியமானதல்ல என ஐக்கிய தேசியக் கட்சியின் சிரேஷ்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜோன்அமரதுங்க தெரிவித்துள்ளார்.

குற்றவியல் சட்டம் தொடர்பில் நாடாளுமன்றில் நடைபெற்ற விவாதத்தில் கலந்துகொண்ட போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். புலிகளின் தூதரகங்கள் வெளிநாடுகளில் உருவாகப்படக் கூடிய அபாயம் காணப்படுவதாக அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

குறிப்பாக நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் முழுவீச்சில் இயங்கக் கூடிய ஆபத்து காணப்படுவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனவே, புலிகளின் சர்வதேச வலையமைப்பு மேற்கொண்டு வரும் நடவடிக்கைகளை கட்டுப்படுத்த அரசு துரித நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

# சர்வதேச சட்டங்களை முழுமையாக கடைப்பிடிப்பது சாத்தியமில்லை

(கொழும்பு)

சர்வதேச அமைதிக்குப் பங்கம் விளைவிக்காத வகையில் நடந்துகொள்ளும் நாடுகள் சர்வதேச சட்டங்களை முழுமையாகக் கடைப்பிடிக்க வேண்டும் என்று யாரும் எதிர்பார்க்க முடியாது. அத்துடன் குறுகிய காலத்தினுள் அனைத்து சர்வதேச நாடுகளும் ஒரே மாதிரியான சர்வதேச சட்டங்களை கடைப்பிடிக்க வேண்டும் என்று எதிர்பார்க்கக் கூடாது என்றும் இலங்கை கோரிக்கை விடுத்துள்ளது.

ஐக்கிய நாடுகளின் நிவ்யோர் அலுவலகத்தின் இலங்கைக்கான பிரதி நிரந்தர பிரதிநிதி பாலித கோஹன, இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார்.

ஐக்கிய நாடுகளின் பாதுகாப்புச் சபையின் திறந்த விவாதத்தில் பங்குகொண்ட வேளையிலேயே பாலித கோஹன இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளார்.

சர்வதேச அமைதிக்குப் பிரச்சினை இல்லை எனும் போது சக நாடுகளின் உள்நாட்டு விவகாரங்களில் அழுத்தங்கள் இல்லாமல் இருக்க வேண்டும் என்பதை அவர் வலியுறுத்தியுள்ளார்.

## இந்திய குடியரசு தினம் யாழ்ப்பாணத்திலும் ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

இந்தியாவின் 63 ஆவது குடியரசு தின விழா எதிர்வரும் 26ஆம் திகதி யாழ்.பலாலி வீதியில் அமைந்துள்ள இந்தியத் துணைத் தூதரகத்தில் துணைத்தூதர் வி.மகாலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

காலையில் இந்தியத் துணைத்தூதரகத்தில் இந்தியத் தேசியக் கொடியேற்றும் நிகழ்வுடன், இந்தியக் குடியரசு தின நிகழ்வுகள் ஆரம்பமாவதுடன், மாலையில் ரில்கோ ஹோட்டலில் ஒழுங்கு செய்யப்பட்டிருக்கும் நிகழ்வுகளில் கலை நிகழ்வுகளும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

அது தவிர, எதிர்வரும் 28 ஆம் திகதி 'றிதம் அன் சவுண்ட்' எனும் கலை நிகழ்வு ஒன்றும் யாழ். பல்கலைக்கழகத்தில் நடத்த ஒழுங்கு செய்யப்பட்டிருப்பதாகவும் தெரியவருகிறது.

இக்கலை நிகழ்வுகளை இந்தியாவில் இருந்து வருகைதரும் 14 கலைஞர்கள் வழங்கவிருப்பதாகவும் இந்தியத் துணைத் தூதர் வி.மகாலிங்கம் தெரிவித்தார். (பா)

## விடைத்தாள் மதிப்பீடு

(கொழும்பு)

கல்விப் பொதுத் தராதர சாதாரணதரப் பரீட்சையின் இரண்டாம் கட்ட விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகள் நேற்று ஆரம்பமாகியுள்ளன.

15 நகரங்களில் அமைக்கப்பட்டுள்ள மத்திய நிலையங்களில் விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் டபிள்யூ.எம்.ஜே.புஸ்பகுமார தெரிவித்துள்ளார்.

இந்த விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகள் எதிர்வரும் 29ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளன. விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகள் இடம்பெறும் பாடசாலைகள் எதிர்வரும் திங்கள் முதல் 29ஆம் திகதி வரை மூடப்பட்டிருக்கும் என கல்வி அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

# மாணவர்களின் சிறந்த எதிர்காலத்திற்கு ஆரம்பக் கல்வியே அடிப்படையானது

## உதவிக் கல்விப் பணிப்பாளர் குகதாசன்

(திருநெல்வேலி)

ஆரம்பக் கல்வி என்பது மாணவர்களின் எதிர்காலக் கல்விக்கு இடப்படும் அடித்தளமாகும். தனது சமூகத்துக்கும், தான் வாழும் நாட்டுக்கும் நல்லவர்களாக, கல்வியில் சிறந்து விளங்குபவர்களாக மாணவர்கள் திகழ வேண்டும்.

ஒழுக்க நெறிகளைக் கடைப்பிடித்து அதிபர், ஆசிரியர்களுக்கும், பெற்றோர்களுக்கும் கீழ்ப்படிந்து கல்வியைக் கற்றுத் தேறும் மாணவர்கள் வாழ்க்கையில் மேன்மையடையவர்களாகிறார்கள் என யாழ். கல்வி வலய ஆரம்பப் பிரிவின் உதவிக் கல்விப் பணிப்பாளர் பூ.குகதாசன் தெரிவித்துள்ளார்.

உயரப்புலம் மெ.மி.த.க வித்தியாலய முதலாம் ஆண்டு மாணவர்களின் கால்கோள் விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

வித்தியாலய அதிபர் கு.திலீபன் தலைமையில் பாடசாலை மண்டபத்தில் இடம்பெற்ற இந்நிகழ்வின்போது, அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

பல வருடங்களுக்குப் பின்பு இப் பாடசாலையில் கால்கோள் விழா நடைபெறுவதைப் பார்க்கும்போது மிகவும் மகிழ்ச்சியாகவுள்ளது. இவ் வித்தியாலயத்தின் புதிய அதிபருடைய அர்ப்பணிப்பான சேவை பாராட்டுக்குரியது. ஆசிரியர்களின் ஒத்துழைப்பும் நிறைந்தளவில் கிடைத்திருக்கிறது.

இந்த வகையில் இப் பாடசாலையின் அபிவிருத்தி பன்மடங்கு பெருகியுள்ளது. ஆரம்பப் பிரிவில் அதிகளவிலான மாணவர்கள் இம்முறை சேர்ந்துள்ளார்கள். இவ் வித்தியாலயத்தின் மீது பெற்றோர் கொண்டிருக்கும் நம்பிக்கையே இதற்குக் காரணமாகும்.

எமது கல்வித் திணைக்களம் பல அபிவிருத்திப் பணிகளை இவ்வித்தியாலயத்துக்கு செய்வதற்குத் தயாராகவுள்ளது. ஆரம்பப் பிரிவில் சேர்ந்திருக்கும் மாணவர்கள் மிகவும் துடிப்பும், செயற்திறனும் கொண்டவர்கள் போல் காணப்படுகிறார்கள். பயம் என்பது சிறிதும் அவர்கள் முகத்தில் தெரியவில்லை. இவர்களது எதிர்காலம் சிறப்பானதாக அமையும் என எதிர்பார்க்கின்றேன்.

ஆசிரியர்களுடன் சேர்ந்து பெற்றோரும் தமது பிள்ளைகளின் கல்வியில் அதிக முக்கியத்துவம் செலுத்த வேண்டும். வாசிப்புப் பழக்கத்தை அவர்களிடம் ஏற்படுத்துதல் அவசியம் எனக் குறிப்பிட்டார்.

ஆரம்ப பிரிவு ஆசிரிய ஆலோசகாகள் ந.கனகரத்தினம், திருமதி மைதிலி தேவராஜா ஆகியோரும் உரை நிகழ்த்தினர். தொடர்ந்து மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. (137)

## மக்கள் வங்கியின் கலாசார நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

மக்கள் வங்கியின் கலைவட்டம் நடத்தும் கலாசார நிகழ்வு இன்று பிற்பகல் 1.30 மணிக்கு யாழ். பல்கலைக் கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் மக்கள் வங்கியின் தலைவர் டபிள்யு.கருணஜீவ பிரதம விருந்தினராகவும், மக்கள் வங்கியின் நிறைவேற்று அதிகாரியும் பொது முகாமையாளருமான என். வசந்தகுமார் கௌரவ விருந்தினராகவும் கலந்து கொள்ளவுள்ளனர்.

மக்கள் வங்கியின் யாழ்ப்பாண மற்றும் வன்னிப் பிராந்தியப் பணியாளர்களின் கலாசார நிகழ்வுகள் இடம் பெறவுள்ளன.

# புதிய யாழ். நகரத்தைக் கட்டியெழுப்ப அனைவரது ஒத்துழைப்பும் அவசியம்

## அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா



(யாழ்ப்பாணம்)

இனம், மதம், மொழி என்ற பேதங்கள் இல்லாத சுமுகமான தொரு சூழல் பேணப்படும் அதேவேளை, எமது நிர்வாகத்தில் பழிவாங்கல்களுக்கு ஒரு போதும் இடமளிக்கப்போவதில்லையெனவும், மீண்டும் புதியதொரு யாழ்ப்பாணத்தைக் கட்டியெழுப்புவதற்கு அனைவரதும் ஒத்துழைப்பும், ஒத்தாசையும் முக்கியமானதென பாரம்பரிய கைத் தொழில்கள் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

யாழ் நகரப் பகுதியின் முனியப்பர் வீதி பேருந்து நிலைய வீதி மற்றும் வைரவர் கோவில் வீதி ஆகிய பகுதிகளில் வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடும் வர்த்தகர்களுடன் அமைச்சரின் யாழ் அலுவலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நகரின் சுத்தம் சுகாதாரம் தொடர்பில் வர்த்தகர்கள் அனைவரும் ஒன்றிணைந்து உழைக்க வேண்டும் என்பதுடன், சுகாதாரத் தொழிலாளர்களுக்கு மதிப்பளித்து அவர்களை மனித நேயத்துடன் நேசிக்க வேண்டுமெனவும் குறிப்பாக வரத்தக நிறுவனங்களுக்கு வரும் பொது மக்களிடம் அன்பாகவும் பண்பாகவும் நடந்து கொள்ள வேண்டுமெனவும் கேட்டுக் கொண்டார்.

இதனிடையே முனியப்பர் கோவில் வீதி வர்த்தகர்களின் நலன்கருதி குடிநீரைப் பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுத்தது போன்று வைரவர் கோவில் வீதியில் பழக்கடை வைத்திருக்கும் வர்த்தகர்களின் நலன்கருதி மேலுமொரு குடிதண்ணீர்க் குழாய் அமைத்துத் தரப்படுமெனவும் உரிமை மாற்றம் மற்றும் மின்சாரம் தேவையான வர்த்தகர்களுக்கு அதனைப் பெற்றுத் தருவதற்கு மாநகர சபையூடாக விரைவான நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் உறுதிமொழி வழங்கினார்.

நாளாந்தம் வர்த்தகர்கள் செலுத்தும் கட்டணங்களுக்கு பற்றுச் சீட்டு வழங்கப்பட வேண்டுமெனவும் முனியப்பர் வீதியில் சேதமடைந்த பகுதிகளை உடனடியாகத் திருத்தம் செய்ய வேண்டுமெனவும் யாழ். மாநகர சபை நிர்வாகத்திடம் இதன் போது பணிப்புரை வழங்கினார்.

இக்கலந்துரையாடலில் யாழ். மாநகர முதல்வர் யோகேஸ்வரி பற்குணராஜா, யாழ். மாநகர சபை உறுப்பினர் இளங்கோ (றீகன்) உள்ளிட்ட மாநகர சபையின் துறைசார்ந்த அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர்.

## ஞானச்சுடர் இதழ் வெளிவந்துள்ளது




(யாழ்ப்பாணம்).

சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவையினரால் வெளியிடப்பட்டு வரும் ஞானச்சுடர் - 2011 மார்கழி மாத இதழ் வெளிவந்துள்ளது.

ஆன்மீகக் கட்டுரைகளுடன் அறுபத்து நான்கு பக்கங்களில் வெளிவந்துள்ள இவ்விதழின் முகப்பு அட்டையில் முருகனின் அழகிய திருவுருவப் படமும், பின்புற அட்டையில் ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தின் முகப்புத் தோற்றமும் பதிவாகியுள்ளன.

## பாடத்தெரிவு கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

2011 ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரியிலிருந்து க.பொ.த. சாதாரண பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கான பாடத் தெரிவு சம்பந்தமான கலந்துரையாடல் ஒன்று நாளை மறுதினம் 24 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

கல்லூரிகளின் பிரதான மண்டபத்தில் இடம்பெறவுள்ள இக் கலந்துரையாடலுக்குச் சம்பந்தப்பட்ட மாணவர்களையும், அவர்களின் பெற்றோர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு அதிபர் கேட்டுக்கொண்டுள்ளார்.

## வீதிகளுக்கு ஒளி பிறந்தது

(யாழ்ப்பாணம்)

நல்லூர்ப் பிரதேசசபை எல்லைக்குட்பட்ட வீதிகளுக்கு மின் விளக்குகள் பொருத்தும் நடவடிக்கைகளில் நல்லூர்ப் பிரதேச சபை எதிர்க்கட்சித் தலைவரும், ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் நல்லூர் பிரதேச பொறுப்பாளருமான அ.இரவீந்திரதாசன் ஈடுபட்டுள்ளார்.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் வழிகாட்டலில் மின்சார சபையுடன் இணைந்து இந்த வேலைத்திட்டத்தில் அவர் ஈடுபட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.


கலட்டி இராமநாதன் வீதி, கொக்குவில் கிழக்கு பிரம்படி அம்பகன் வீதி, கொக்குவில் மேற்கு மணியர்பதி வீதி, பிடாரி கோவில் வீதி, நல்லூர் சங்கிலியன் வீதி ஆகிய வீதிகளுக்கே மின்விளக்குகள் பொருத்தப்பட்டு அப்பகுதிகளில் இருள் அகற்றப்பட்டுள்ளதாக மக்கள் மகிழ்ச்சி வெளியிட்டுள்ளனர்.

## இடமாற்றம்

(யாழ்ப்பாணம்)

அச்சுவேலி பிரதேச வைத்தியசாலையில் கடந்த ஆறு வருடங்களாக சிற்றூழியர் மேற்பார்வையாளராகக் கடமையாற்றிய திருமதி விஜயா அற்புதராஜா இம்மாதம் முதல் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

முல்லைத்தீவு சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையில் கடமையாற்றிய எஸ்.மனோகரன் கடந்த மாதம் முதல் அச்சுவேலிப் பிரதேச வைத்தியசாலைக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.



கொக்குவில் இந்துக் கல்லூரியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் அதி கூடிய புள்ளிகளைப் பெற்ற மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வில் யாழ். மாவட்ட கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் ஹத்துருசிங்க தேசிய ரீதியில் கணிதத்துறையில் முதலிடம் பெற்ற மாணவன் கமலக்கண்ணனுக்கு பரிசளித்துப் பாராட்டுவதையும், வடமாகாணக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் மாணவி ஒருவருக்குப் பரிசில் வழங்குவதையும், கலைநிகழ்வொன்றையும் காணலாம்.

(137)

# தெல்லிப்பளை ஆதாரவைத்தியசாலையில் சத்திரசிகிச்சை உபகரணங்கள் இல்லை

## நோயாளர்கள் பெரும் சிரமம்

(தெல்லிப்பளை)

தெல்லிப்பளை ஆதாரவைத்தியசாலை சத்திர சிகிச்சைக் கூடத்தில் சத்திர சிகிச்சைக்குரிய உபகரணங்களும் சத்திர சிகிச்சை வைத்திய நிபுணரும் இல்லாமையால் நோயாளர்களுக்கான சத்திர சிகிச்சைகள் பாதிக்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தெல்லிப்பளை துர்க்கை அம்மன் ஆலய சூழலில் நீண்டகாலமாக இயங்கிவந்த இவ்வைத்தியசாலை இம்மாதம் 1ஆம் திகதிமுதல் பழைய இடத்தில் முழுமையாக இயங்கத்தொடங்கியது. இதனைஅடுத்து வெளிநோயாளர் பிரிவிலும், விடுதிகளில் தங்கியிருந்து சிகிச்சைபெறும் நோயாளர்களின் தொகையும் அதிகரித்துக்காணப்படுவதாக ஆஸ்பத்திரி வட்டாரங்களில் இருந்து தெரியவருகிறது.

இந்நிலையில் ஈ.சி.ரி. பரிசோதனைக்குரிய வசதிகள் இல்லாமையால் பரிசோதனைக்குரிய நோயாளர்கள் யாழ். போதனாவைத்தியசாலைக்கு அம்புலன்ஸ் வண்டியில் கொண்டு செல்ல வேண்டியிருப்பதாகவும், அதற்கு தற்போதுள்ள ஒரு அம்புலன்ஸ வாகனம் போதாதிருப்பதாகவும் மேலும் ஒரு வாகனம் தேவைப்படுவதாகவும் தெரியவருகிறது.

வெளிநோயாளர் சிகிச்சைப்பிரிவில் சிகிச்சை பெறுபவர்களுக்கும், விடுதிகளில் தங்கியிருந்து சிகிச்சை பெறுபவர்களுக்கும் வழங்குவதற்கு ஆஸ்பத்திரியில் இல்லாதிருக்கும் மருந்துவகைகளைப்பெறுவதற்கு மல்லாகம் செல்லவேண்டியிருப்பதாகவும், இதனால் நோயாளர்களும், உறவினர்களும் பெரும் சிரமங்களை எதிர்நோக்கிவருவதாகவும் தெரியவருகிறது.

இந்நிலையில் வைத்தியசாலைக்குத் தேவையான சத்திரசிகிச்சைக் கூட உபகரணங்கள், சத்திர சிகிச்சை நிபுணர் மற்றும் அம்புலன்ஸ் வசதிகளையும், தட்டுப்பாடான மருந்துவகைகளை சிரமமின்றிப்பெற மருந்தகவசதி ஏற்படுத்திக் கொடுக்க சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுப்பார்களா என்று சிகிச்சைக்காகவரும் நோயாளர்கள் கேள்வி எழுப்பி உள்ளனர். இதே வேளை தற்போது தெல்லிப்பளையில் இயங்கிவரும் தெல்லிப்பளை பலநோக்குக்கூட்டுறவுச் சங்கம் மருந்துகள் விற்பனை நிலையம் ஒன்றை நடத்தலாம் என்றும் மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

(60)



மானிப்பாய் கிறீன் ஞாபகார்த்த வைத்தியசாலைக்கு புதிதாகக் கிடைக்கப்பெற்ற Serum Electrolyte Machine இயந்திரம் இயக்கப்படுவதையும் அருகில் மருத்துவ மேலதிகாரி டாக்டர் வி.ஆர். டேவிட் நிற்பதையும் காணலாம்.

# தென்னம்பிள்ளை வழங்கல்

(யாழ்ப்பாணம்)

"திவிநெகும" திட்டத்தின் கீழ் கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு தென்னம்பிள்ளைகள் வழங்கும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக கோப்பாய்ப் பிரதேச செயலர் ம.பிரதீபன் தெரிவித்துள்ளார்.

இது சம்பந்தமாக அவர் மேலும் தகவல் தருகையில் கோப்பாய்ப் பிரதேச செயலர்பிரிவில் தெரிவு செய்யப்பட்டுள்ள சுமார் 3 ஆயிரத்து அறுநூறு பயனாளிகளுக்கு இத்தென்னம்பிள்ளைகள் வழங்கப்படவுள்ளதாகவும் ஒவ்வொரு பயனாளிக்கும் தலா இரண்டு தென்னம்பிள்ளைகள் வீதம் வழங்கப்படும் என்றும் தெரிவித்தார்.

# பதிவாளர் பதவிக்கு விண்ணப்பம் கோரல்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவுக்கு தமிழ்மொழிமூலமான விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்யும் பதிவாளர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்கின்ற பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்க சொத்துக்களுக்கு உரிமையாளராகவும், பிரதேச மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்களாகவும் இருப்பதுடன் 30 வயதுக்கு குறையாதவர்களாகவும் 60 வயதுக்கு மேற்படாமலும் இருக்கவேண்டும்.

இப்பதவிக்கு ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 21.02.2012ஆம் திகதி அன்றோ அதற்கு முன்போ, மாவட்ட செயலாளர், மேலதிக பதிவாளர்நாயகம், மாவட்ட செயலாளர் அலுவலகம், முல்லைத்தீவு என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்கவேண்டும். மேலதிக விபரங்கள் யாவும், உரிய மாவட்ட செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்ட பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச்சபை மற்றும் கூட்டுறவுச்சங்கத்திலும் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

# மகாகும்பாபிஷேக பெருவிழா

(தெல்லிப்பளை)

தெல்லிப்பளை- பன்னாலை மயிலையம்பதி அருள்மிகு சாமுண்டிகா தேவி சமேத ஸ்ரீ ஞானவைரவர் ஆலய புனருத்தாரண அஷ்டபந்தன 'பஞ்சகுண்டபஷ மகாகும்பாபிஷேகப் பெருவிழா எதிர்வரும் இரண்டாம் மாதம் ஐந்தாம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 7.14 மணி முதல் 8.23 மணிவரை நடைபெறவுள்ளது. இக்கும்பாபிஷேகத்தினையொட்டிய பூர்வாங்க கிரியைகள் மூன்றாம் திகதி வெள்ளிக்கிழமை மதியம் 12.34 மணி முதல் இடம்பெறும்.

நான்காம் திகதி சனிக்கிழமை காலை 8.00 மணிமுதல் மாலை 4.00 மணிவரை எண்ணெய்க்காப்பு வைபவம் நடைபெறவுள்ளது. இக்கும்பாபிஷேகத்தினை கீரிமலை இரேணுகாச்சிரமத்தைச் சேர்ந்த சிவஸ்ரீ கிரீட உருத்திரபுரேஸ்வர சிவாச்சாரியார் நிறைவேற்றி வைக்கவுள்ளார்.

(60)

# கூட்டுறவுச்சங்கங்களில் நிலவும் பிரச்சினைகளைத் தீர்க்க நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் உள்ள சகல கூட்டுறவுச்சங்கங்களில் நிலவும், நிர்வாக, நிதி மற்றும் பணியாளர்கள் பிரச்சினைகளைக் கலந்துரையாடி அவற்றுக்குத்தீர்வு காணும் புதிய நடைமுறை ஒன்றை யாழ். கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம் மேற்கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளரால் ஏற்பாடு செய்யப்படும் இக்கலந்துரையாடலில், சங்கங்களின் தலைவர்கள், பொதுமுகாமையாளர்கள், கணக்காளர்கள் ஆகியோர் பங்குகொள்கிறார்கள். மாதம்தோறும் நடத்தப்படும் இக்கலந்துரையாடல், குறித்த மாதத்தின் இரண்டாவது வியாழக்கிழமை கால் நடைவளர்ப்போர் கூட்டுறவுச்சங்கத்தினருக்கும் மூன்றாவது வியாழக்கிழமை பனை தென்னை வள அபிவிருத்திக்கூட்டுறவுச்சங்கங்கள் மற்றும் கொத்தணிகள், சித்தவைத்திய கூட்டுறவுச்சங்கத்தினருக்கும், நான்காவது வியாழக்கிழமை, பலநோக்குக்கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் இரண்டாம் படிச்சங்கங்களுக்கும், இரண்டாவது வெள்ளிக்கிழமை,கடற்றொழிலாளர்கூட்டுறவுச்சங்கங்கள் சமாசம், சம்மேளனம் ஆகிய வற்றுக்கும் நடத்தப்பட்டு வருகிறது.

வட மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் திருமதி மதுமதி வசந்தகுமாரின் ஆலோசனைக்கு அமைய இக்கலந்துரையாடல்கள் யாழ். கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வீ.கே.அருந்தவநாதன் யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்திலும், வட மாகாண பனை தென்னைவள சமாசத்திலும் நடத்திவருவது குறிப்பிடத்தக்கது.

# முரசின் இன்றைய பலன்

(22.01.2012 -ஞாயிற்றுக்கிழமை)

கர வருஷம் தை மாதம் 8ஆம் திகதி. சதுர்த்தசி பிற்பகல் 2.31 நட்சத்திரம் பூராடம் பிற்பகல் 4.21. சித்தாமிர்தம், அமாவாசை இராகுகாலம் 5.05 - 6.35 வரை, சுபநேரம் 9.35 - 11.05 வரை. எமகண்டம் 12.35 - 2.05 வரை, குளிகைகாலம் 3.35 - 5.05 வரை.

சோதிடஞானி அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் :- | எதிலும் தயக்கம், செலவில் சிக்கனம், பிரார்த்தனை பலிதம், தயக்கம். |
| ரிஷபம்:- | பயணக் கஷ்டம், ஆரோக்கியம் நன்று, நற்செய்தி, நினைத்தவை நிறைவேறும். |
| மிதுனம் :- | அதிகாரிகள் சகாயம், பொறுப்பு அதிகரிப்பு, புதிய நட்புறவு, முயற்சிபலிதம். |
| கடகம் :- | அலைச்சல், கல்வியில் சிறப்பு, பிரயாணத்தில் வெற்றி, பொன்பொருள் சேரும். |
| சிம்மம் :- | பிழவாதம், சகோதரர் உதவி, காரிய சித்தி, குழந்தைப்பாக்கியம். |
| கன்னி :- | நல்ல முயற்சி, வாக்குவாதம், வாக்கு நாணயம் தவறும், மனமாட்சி. |
| துலாம் :- | பாராட்டு, நிர்ப்பந்த நிலை, குடும்பத்தில் நிம்மதி, எண்ணம் கைகூடும். |
| விருச்சிகம்- | காரியானுகூலம், ஆரோக்கியம், வேலைவாய்ப்பு, வாகனம் சேரும். |
| தனுசு:- | உடல் உபாதை, பதவி உயரும், குடும்பசுகம், கணவன் மனைவிக்கிடையில் நேசம். |
| மகரம்:- | சொத்துக்களில் திருப்தி, வாழ்வில் சந்தோஷம், அடக்கம் நன்று, அவசரம் கூடாது. |
| கும்பம் :- | சந்தேகம், ஆசைகள் நிறைவேறும், தகுதிஉயரும், சொத்து சேரும். |
| மீனம் :- | பயணவெற்றி, குடும்ப முன்னேற்றம், வேலைப்பளு, பிரச்சினை தீரும். |

# பிறப்பை பதிய மறுக்கும் அதிகாரம் பதிவாளர்களுக்குக் கிடையாது

## - காணி, மாவட்டப் பதிவாளர் பிரபாகர்

(யாழ்ப்பாணம்)

பிறக்கின்ற ஒவ்வொரு குழந்தையும் பதிவு செய்யப்படவேண்டும். அதன் பிறப்பை பதிவு செய்ய மறுக்கும் அதிகாரம் பிரதேச பதிவாளர்களுக்குக் கிடையாது. கூடிய கவனம் எடுத்து இயலுமானவரை குறைபாடுகளை நிவர்த்தி செய்து பதிவுகள் மேற்கொள்ளவேண்டும் என்று காணி, மாவட்டப் பதிவாளர் ப.பிரபாகர் தெரிவித்தார்.

யாழ்.மாவட்ட பதிவாளர் சங்கத்தின் வருடாந்த ஒன்று கூடலின் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

யாழ். செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற இந்நிகழ்வில் அவர் தொடர்ந்து பேசியதாவது.

திருமணப் பதிவை மேற்கொள்ளும்போது மணமக்களின் பெற்றோர்கள் பிரசன்னமாயிருக்கவேண்டும் என்பதை வலியுறுத்திக் கூறவேண்டும். அவர்கள் இல்லாத பட்சத்தில் சம்பந்தப்பட்டவர்களின் பிரிவு கிராம அலுவலர்கள் மூலம் மணமக்களின் குடியியல் நிலைமைகளை உறுதிப்படுத்திக்கொள்ளுங்கள். அதற்கும் முடியாத பட்சத்தில் 14 நாட்கள் முன்னறிவித்தல் கொடுக்கச் செய்து பதிவு செய்யுங்கள். அப்படிச் செய்வதன் மூலம், சமூகப் பிறள்வுகள் ஏற்படுவதை இயலுமானவரை தவிர்த்துக் கொள்ளலாம்.

திருமணச்சான்றிதழ்களில் எச்சந்தர்ப்பத்திலும் நாம் திருத்தங்களை மேற்கொள்ளமுடியாது. அது நீதிமன்றத்தின் கடமையாகும்.

இன்று நீதிமன்றங்களில் திருமணச் சான்றிதழ்களில் சிறுசிறு திருத்தங்கள் முதல் விவாகரத்து விண்ணப்பங்கள் வரை பற்பல வழக்குகள் தொடரப்பட்டுள்ளன.

பதிவுகளை மேற்கொள்ளும் முன்னர் அவர்கள் தரும் தரவுகளை உரிய ஆவணங்களுடன் ஒப்பிட்டுப்பார்த்து தவறுகள் ஏற்படா வண்ணம் பதிவுகளை மேற்கொள்வதன் மூலம் பல தவறுகளைத் தவிர்த்துக்கொள்ளலாம்.

இருப்பினும், பெற்றோரின் பிறப்பு அத்தாட்சிப்பத்திரம் மற்றும் திருமண அத்தாட்சிப்பத்திரம் போன்றவை சமர்ப்பிக்கப்படவில்லை என்ற காரணத்துக்காக ஒரு பிள்ளையின் பிறப்பைப் பதிவு செய்வதை பதிவுகாரர்கள் நிராகரிக்கக் கூடாது.

தந்தையின் பெயர் விபரம் சேர்க்கப்படாத பிறப்புப் பத்திரங்களுக்கு உரியவர்கள் சமூகத்தால் ஏளனமாகப் பார்க்கப்படுவதால், கூடிய வரை சான்றிதழ்களில் முழுமையாகப் பதிவுகளை மேற்கொள்ள முயற்சி செய்யவேண்டும் என்று கூறினார்.

(120)

# சுருங்கும் உலகம்

இணையம் என்ற பெயரில் உலகம் கைக்குள் சுருங்கிவிட்டது. நிலைமை இப்படி இருக்க இனி இணைய முகவரிகள் மட்டும் எதற்கு பெரிது பெரிதாக என்ற சிந்திப்பின் விளைவு தான் URL shortener என்ற பெயரில் இணைய சுருக்கிகள் படையெடுக்க ஆரம்பித்து விட்டன. இணைய சுருக்கியின் மூலம் எவ்வளவு பெரிய பெயர் கொண்ட இணைய முகவரியையும் ஒரு சில எழுத்துக்களில் சுருக்கி விட முடியும்.



இதன் மூலம் சமூக வலைத்தளங்களில் நமது இணைய முகவரியை எளிமையாக பகிர்ந்து கொள்ள முடியும். நண்பர்களுக்கு இலகுவில் ஞாபகத்தில் வைத்துக் கொள்வதற்கு வசதியாகச் சொல்ல முடியும்.

இந்த சேவையை இலவசமாக அளிக்கும் இணைய தளங்கள்:

**www.goo.gl**
**www.tinyurl.com**
**www.shorturl.com**
**www.bitly.com**
**www.goshorter.com**

உலகம் சுருங்கி விட்டது! நீங்களும் உங்கள் முகவரிகளைச் சுருக்கிக் கொள்ளுங்கள்.....

# இணைய உலவிகள் இலவசம்

இணைய வலைத்தளங்களைப் பார்வையிட உதவும் மென் பொருட்களே இணைய உலவிகள் ஆகும்.

உலகஅளவில் மைக்ரோசாப்ட் நிறுவனத்தின் இன்டர்நெட் எக்ஸ்ப்ளோரர், கூகுளின் குரோம், மொசில்லாவின் பயர்பொக்ஸ் போன்றவை இணைய வாசிகளால் அதிகம் பயன்படுத்தப்பட்டு வருகிறது. மொபைல் உலாவிக்கு புகழ்பெற்ற ஒபேரா தற்போது இணைய உலவி மென்பொருளையும் வெளியிட்டுள்ளது. உலவிகள் அனைத்தும் தனித்தனி சிறப்புடன் உலவி வருகிறது. இலவச உலவிகளை வழங்கும் தளங்கள்:

இன்டர்நெட் எக்ஸ்ப்ளோரர் : **www.beautyoftheweb.com**
கூகுள் குரோம் : **www.google.com/chrome**
மொசில்லாவின் நெருப்பு நரி: **www.mozilla.org**
ஒபேரா : **www.opera.com**
அப்பிளின் சபாரி : **www.apple.com/safari**

மேற்குறிப்பிட்டுள்ள வலைத்தளங்கள் மூலம் உலவிகளைப் பதிவிறக்கம் செய்து இணையத்தில் உலவுங்கள்.

# இலவசமாய் கணினி காக்க...

வைரஸ் என்பது நல்ல நோக்கம் அற்றவர்களால் கணினியின் இயக்கத்தை முடக்க எழுதப்படும் தவறான நிரலி. இதுவே கணினி உலகில் வைரஸ் எனப்படுகிறது.

வைரஸ்கள் தகவல் பரிமாற்ற சாதனங்கள் மூலமே பரவுகின்றது. நமது கணினியை வைரஸ் ஆட்கொண்டால் அவைகளை நீக்க பல Anti Virus மென் பொருட்கள் இணையத்தில் இலவசமாகவே கிடைக்கின்றன.

இலவச Anti Virus மென் பொருட்களை அளிக்கும் தளங்கள்:

அவாஸ்ட் http://www.avast.com/index
அவிரா http://www.avira.com/
ஏ வீ ஜி http://free.avg.com/us-en/homepage
மைக்ரோசொப்ட் http://windows.microsoft.com/en-US/windows/products/security-essentials

மேற்குறிப்பிட்டுள்ள இணைய தளங்களின் மூலம் வைரஸ் நீக்கி மென்பொருட்களைப் பதிவிறக்கம் செய்து கணினியைக் காத்திடுங்கள்.




# மறவாதிருங்கள்

முகவரி டைப்பிங்:

இணையத்தில் உலவும்போது இணைய முகவரியை (URL) தட்டச்சு செய்கையில் அதன் இறுதித் துணைப் பெயர் com என இருந்தால் முழுவதும் தட்டச்சு செய்திடத் தேவையில்லை. எடுத்துக்காட்டாக www. microsoft.com என தட்டச்சு செய்ய வேண்டி இருந்தால் microsoft என மட்டும் டைப் செய்து, Ctrl + Enter தட்டினால் போதும். பிரவுசர் www.microsoft.com என அமைத்து அந்த முகவரிக்கான இணையத்தளத்தை உங்களுக்குக் காட்டும்.

பைலை முற்றிலுமாக நீக்க:

நாம் அடிக்கடி தேவையற்ற பைலை அழிக்கிறோம். அழிக்கப்படும் பைல் ரீசைக்கிள் பின் தொட்டியில் போய் தங்குகிறது. எனவே பைல் அழியாமல் கம்ப்யூட்டரில் இன்னொரு இடத்தில் போய் அமர்ந்து கொள்கிறது. எனவே இதனால் ஹார்ட் டிஸ்க்கில் இடம் நமக்கு மிச்சப்படப் போவதில்லை. அந்த பைல் முழுமையாக அழிந்தால்தான் இடம் கிடைக்கும்.

எனவே ரீ சைக்கிள் பின்தொட்டிக்கு போகாமல் பைல் முற்றிலுமாக நீக்கப்பட வேண்டும் என்றால் அந்தப் பைலைத் தேர்ந்தெடுத்து Delete பட்டனை அழுத்துகையில் Shift கீயை அழுத்தியபடி அழுத்தவும். பைல் ரீசைக்கிள் பின்னுக்குச் செல்லாது.

# வீடியோவினை சுருக்கிப் பதிய...




மல்ட்டிமீடியா பிரிவில் அதிக இடம் எடுத்துக் கொள்ளும் பைல்வகை வீடியோ பைல் ஆகும். எனவேதான் குறிப்பிட்ட அளவில் சுருக்கி அதனை அமைக்க விரும்புகிறோம். இதற்கு முதலில் உதவுவது win rar kw;Wk; win zip ஆகும். இவை பைலைச் சுருக்கித்தர வெகுநேரம் எடுத்துக் கொண்டாலும் குறிப்பிட்டுச் சொல்லும் அளவிற்கு வீடியோ பைலின் அளவு குறைவதில்லை. இந்த வகையில் நமக்கு உதவுவது Freemake Video Converter ஆகும். இதனை http://www. freemake.com/free_video_converter/ என்ற முகவரியில் உள்ள தளத்தில் இருந்து பெறலாம். இதன் மூலம் உங்கள் வீடியோ பைலை ஐந்தில் ஒரு பங்கிற்கு அதிகமாகக் கூடக் குறைக்க முடியும். பைல் அளவு குறைக்கும் முயற்சியில் ஈடுபடுகையில், இந்த புரோகிராம் எந்த அளவிற்குக் குறைக்க முடியும் என்று அறிவிக்கும். அதற்கேற்ப செயற்படலாம். இந்த புரோகிராமினைத் தயாரித்து வழங்குபவர்கள், 40 மணி நேரம் ஓடக்கூடிய வீடியோவினை, இதனைப் பயன்படுத்தி ஒரு டிவிடியில் பதிய முடியும் என்று அறிவித்துள்ளனர். 10.5 ஜிபி வீடியோ பைல் 4.5 ஜிபி வீடியோ பைலாகச் சுருக்கப்படுகிறது.

# எல்லாவற்றுக்கும் ஒரே ரிமோட்



டிவிடி பிளேயர், டிவி, ஹோம் தியேட்டருக்கான அம்ப்ளிபயர் என ஒவ்வொன்றுக்குமான ரிமோட் சாதனங்களை எடுக்கக் கூடிய இடத்தில் வைத்துத் தேவைப்படும்போது எடுத்துப் பயன்படுத்துவது ஒரு பெரிய பிரச்சினையாக இன்றைய வீடுகளில் எதிர்கொள்ளப்படுகிறது.

அப்படியே கிடைத்தாலும் ஒன்றோடொன்று இணைந்து செயலாற்றி நாம் விரும்பும் வகையில் வெளிப்பாடு இருக்க வேண்டும். மேலும் இவற்றிற்கான பற்றரிகளைச் சரியான காலத்தில் மாற்றி செயற்படுத்துவது பெரிய பிரச்சினையாகும். இதற்கெல்லாம் தீர்வாக கமெலியன் என்ற பெயரில் (ஆங்கிலத்தில் பச்சோந்திக்கான சொல் சரியான பெயர்தான்) ஒரு ரிமோட் சாதனம் உருவாக்கப்பட்டுள்ளது. யுனிவேர்சல் எலக்ட்ரோனிக்ஸ் நிறுவனம் இதை வடிவமைத்துள்ளது.


இதனை 5 முதல் 8 சாதனங்களுக்கு செற் செய்து பயன்படுத்தலாம்.

இதில் தரப்பட்டுள்ள டிஸ்பிளே எந்த சாதனத்திற்கு ரிமோட் பயன்படுத்தப்படுகிறதோ அந்த கீகளை மட்டும் அடையாளம் காட்டுகிறது. சந்தையில் விற்பனையாகும் பல்வேறு டிவிக்கள், வி.சி.ஆர், டிவிடி பிளேயர், சற்றலைற் சாதனங்கள், ஓடியோ மற்றும் சிடி சாதனங்களுடன் பயன்படுத்தும் வகையில் இந்த ரிமோட் வடிவமைக்கப்பட்டுள்ளது. முதலில் இந்த கமெலியன் ரிமோட்டை இன்ஸ்டோல் செய்வது சற்று கவனத்துடன் செய்யவேண்டிய செயலாகத் தோன்றும்.

பொறுமையாக இவற்றை டவுண்லோட் செய்து பதித்துவிட்டால் பின் எந்தக் காலத்திற்கும் பிரச்சினை இன்றி செயற்படலாம்.

இந்த ரிமோட் சாதனத்தினுள் மோடம் ஒன்று இணைக்கப்பட்டுள்ளதால் டவுண்லோடிங் செய்வது சுலபமாகிறது.

# DocX Viewer




MSoffice 2007 தொகுப்பில் தயாரிக்கப்பட்ட பைல்களின் Format - .docx என்பதாகும். MSoffice 2003 தொகுப்பின் பைல்கள் Format - .doc என்பதாகும். .docx பைல்களை MSoffice 2003 இல் திறந்து பார்க்க முடியாது. இதனால், MSoffice 2007 தொகுப்பில் தயாரிக்கப்பட்ட பைலை Compatibility Mode (word 97-2003 document) இல் save செய்துகொண்டால் ஒபீஸ் 2003 இலும் பார்க்கலாம்.

இல்லாவிட்டாலும், இதற்காக DocX Viewer என்றொரு புரோகிராமும் இருக்கிறது. DocX Viewer என்பது எளிதாக எடுத்துச் சென்று பயன்படுத்தக் கூடிய ஒரு புரோகிராம். இதனை கம்ப்யூட்டரில் இன்ஸ்டோல் செய்திடத் தேவை இல்லை. இதன் மூலம் நாம் DocX போர்மட்டில் உள்ள பைல்களை, நம் கம்ப்யூட்டரில் வைத்தே திறந்து படிக்கலாம்.

இதற்கு நம் கம்ப்யூட்டரில் வேர்ட் அல்லது வேர்ட் போன்ற வேறு புரோகிராமும் தேவையில்லை. இந்த புரோகிராமில் திறந்து படித்த பின்னர், அதனைக் கொப்பி செய்து, அப்படியே நாம் பயன்படுத்தக் கூடிய டெக்ஸ்ட் புரோகிராமில், நாம் பயன்படுத்தும் போர்மட்டில் save செய்து வைத்துக் கொள்ளலாம்.

இந்த புரோகிராமை டவுண்லோட் செய்து, ஸிப் பைலை விரித்து வைத்து இயக்கினால் போதும். உடனே நமக்கு DocX போர்மட்டில் உள்ள பைலைத் திறப்பதற்கான மெனு கிடைக்கிறது. அதே புரோகிராமில் போர்மட்டில் save செய்திட முடியாது. அதனைப் படிக்கலாம் திருத்தலாம் மற்றும் கொப்பி செய்து clipboard க்குக் கொண்டு போகலாம். பின்னர் clipboard ல் இருப்பதை, டெக்ஸ்ட் புரோகிராமுக்குக் கொண்டு செல்லலாம். இவ்வளவு எளிதாக நம் தேவையை நிறைவேற்றும் இந்த புரோகிராமினை டவுண்லோட் செய்திட http://download. cnet.com/DocXViewer/300018483_4751797 15.html? tag=mncol;2 என்ற முகவரிக்குச் செல்ல வும்.

# 5 விக்கெட்டுகளால் இலங்கை வெற்றி




(கிம்பர்ளி)

தென்னாபிரிக்காவுடனான நான்காவது ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் போட்டியில் இலங்கை அணி 5 விக்கெட்டுகளால் வெற்றியீட்டியுள்ளது.

தென்னாபிரிக்காவின் கிம்பர்ளி நகரில் நடைபெற்ற இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி 50 ஓவர்களில் 8 விக்கெட் இழப்பிற்கு 299 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 48.4 ஓவர்களில வெற்றி இலங்கை அடைந்தது.

இலங்கை அணித்தலைவர் திலகரட்ன டில்ஷான் 87 பந்துகளில் 2 சிக்ஸர்கள் 9 பௌண்டரிகள் உட்பட 87 ஓட்டங்களைப் பெற்றார். தினேஸ் சந்திமால் 81 பந்துகளில் 59 ஓட்டங்களைப் பெற்றார்.

திசேர பெரேரா அதிரடியாக துடுப்பெடுத்தாடி 44 பந்துகளில் ஆட்டமிழக்காமல் 65 ஓட்டங்களைப் பெற்றார். இவற்றில் 5 சிக்ஸர்கள் 3 பௌண்டரிகளும் அடங்கும். ஏஞ்சலோ மத்தியூஸ் ஆட்டமிழக்காமல் 21 ஓட்டங்களைப் பெற்றார்.

தென்னாபிரிக்க பந்துவீச்சாளர்களில் சோட்சோப் 51 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

இப்போட்டியின் சிறப்பாட்டக்காரராக திசேர பெரேரா தெரிவானார.

5 போட்டிகள் கொண்ட இத்தொடரில் இலங்கை அணி வெற்றி பெறுவது இதுவே முதல் தடவையாகும். தென்னாபிரிக்க அணி தற்போது 3-1 விகிதத்தில் முன்னிலையில் உள்ளது.

# தலைவராக பொறுப்பேற்க சிந்திக்க வேண்டியிருக்கும்

## மஹேல ஜயவர்த்தன

(சிட்னி)

இலங்கைக் கிரிக்கெட் அணியின் தலைவராக தான் பதவியேற்குமாறு கோரப்பட்டால் அது குறித்து சிந்திக்க வேண்டியிருக்கும் என இலங்கை அணியின் தலைவர் மஹேல ஜயவர்தன கூறியுள்ளார்.

இலங்கை அணியின் தலைவர், பயிற்றுநர் பதவி மாற்றங்கள் உட்பட முழுமையான மறுசீரமைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளதாக செய்திகள் வெளியான நிலையில் மஹேல ஜயவர்தன இவ்வாறு கூறியுள்ளார். முன்னாள் தலைவரான மஹேல ஜயவர்தன மீண்டும் அணித்தலைவராக நியமிக்கப்படலாம் எனவும் செய்திகள் வெளியானமை குறிபபிடத்தக்கது.

இந்நிலையில் தென்னாபிரிக்காவின் கிம்பர்ளி நகரில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில், அணித்தலைவர் பதவி குறித்து பேச்சுவார்த்தை இடம்பெற்றுள்ளதா எனவும் மஹேல ஜயவர்தனவிடம் கேட்கப்பட்டது.

"இல்லை என்னிடம் ஒருவரும் பேசவில்லை. கடந்த 6 மாதங்களாக இவ்வாறான கட்டுரைகளை நான் பார்த்துள்ளேன். அது எனக்குத் தெரியும். ஆனால் அவ்விடயங்கள். எனது கட்டுப்பாட்டில் இல்லை" என மஹேல ஜயவர்தன பதிலளித்தார்.

தென்னாபிரிக்க அணியுடனான 4 ஆவது போட்டியில் காயம் காரணமாக மஹேல விளையாடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# இரண்டு வருட வாய்ப்பு

மேற்கிந்தியத் தீவுகளின் சகலதுறை ஆட்டக்காரர் கிறிஸ் கெய்லை தொடர்ந்தும் இரண்டு வருடங்களுக்கு தமது அணியில் வைத்திருப்பதற்கு பெங்களூர் ரோயல் சலஞ்சர்ஸ் அணி தீர்மானித்துள்ளது.

அடுத்து வரும் இரண்டு இந்திய பிறிமியர் லீக் கிரிக்கெட் தொடர்களுக்காக கிறிஸ் கெய்ல் பெங்களூர் ரோயல் சலஞ்சர்ஸ் அணியில் இணைத்துக்கொள்ளப்பட்டுள்ளார்.

எனினும் இவருக்கான ஒப்பந்தத் தொகை குறித்து இதுவரை எந்தவிதத் தகவல்களும் வெளியாகவில்லை.

கடந்த ஐ.பி.எல் போட்டிகளில் பெங்களூர் ரோயல் சலஞ்சர்ஸ் அணி பெற்றுக்கொண்ட பல வெற்றிகளில் கிறிஸ் கெய்ல் முக்கிய பங்கு வகித்திருந்தார்.

# ரோகித் சர்மாவுக்கு சரியான நேரம்

(புதுடில்லி)

ரோகித் சர்மாவுக்கு டெஸ்ட் அணியில் வாய்ப்புத் தர இது தான் சரியான நேரம். அடிலெய்ட் டெஸ்டில் இவரை களமிறக்க வேண்டும் என இந்திய அணியின் முன்னாள் வீரர்கள் வெங்சர்க்கார், கிரண் மோரே ஆகியோர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

அவுஸ்ரேலியா சென்றுள்ள இந்திய அணி டெஸ்ட் தொடரை 0-3 என இழந்தது. இரு அணிகள் மோதும் நான்காவது மற்றும் கடைசி டெஸ்ட் போட்டி, நாளை மறுதினம் அடிலெய்டில் ஆரம்பமாகிறது. இத்தொடரில் தொடர்ந்து சீரற்று விளையாடி வரும் வீரர்களுக்குப் பதில் ரோகித் சர்மாவை களமிறக்கினால் நல்லது என்ற கருத்து எழுந் துள்ளது. இந்திய அணி தேர்வுக்குழு முன்னாள் தலைவர் வெங்சர்க்கார் கூறியதாவது,

மெல்போர்ன், சிட்னி, பெர்த் ஆடுகளங்களை விட, அடிலெய்ட் மைதானம் துடுப்பாட்ட வீரர்களுக்கு சற்று சாதகமாக இருக்கும். ரோகித் சர்மாவை விளையாடும் 11 பேர்களில் கட்டாயம் களமிறக்க வேண்டும். அவரை களத்துக்கு வெளியே உட்கார வைத்திருப்பது நல்லதல்ல என்றார்.

மற்றொரு முன்னாள் வீரர் கிரண் மோரே தெரிவிக்கையில் ரோகித் சர்மாவுக்கு வாய்பபு வழங்க இதுதான் சரியான தருணம். இப் போட்டியில் இவர் "டக்" அவுட்டானாலும், அடுத்தடுத்து தொடர்ந்து விளையாட அனுமதிக்க வேண்டும். இப்போது இந்திய அணியிலுள்ள சீனியர்களுக்கு மாற்று யார் என்று தேடிக் கொண்டிருக்கும் நேரம். இதனால் ரோகித் சர்மாவுக்கு வாய்ப்புத்தருவது மூலதனம் போன்றது. ஏனெனில் இவரும், விராத் கோஹ்லியும எதிர்கால இந்திய அணியின நட்சத்திர வீரர்களாக இருப்பர் என்றார்.




# நான்காவது சுற்றுக்கு முன்னேற்றம்

(மெல்போர்ன்)

அவுஸ்ரேலிய ஓப்பன் ரென்னிஸ் தொடரின் ஒற்றையர் பிரிவு நான்காவது சுற்றுக்கு, ஸ்பெயின் வீரர் நடால், சுவிட்சர்லாந்தின் ரோஜர் பெடரர் முன்னேறினர்.

மெல்போர்ன் நகரில், 100 ஆவது அவுஸ்ரேலிய ஓப்பன் ரென்னிஸ் தொடர் நடக்கிறது. நேற்று நடந்த ஆண்கள் ஒற்றையர் பிரிவு மூன்றாவது சுற்றில் ஸ்பெயின் வீரர் நடால், சுலோவேகியாவின் லுகாசை சந்தித்தார். இதில் அபார ஆட்டத்தை வெளிப்படுத்திய நடால், 6-2, 6-4, 6-2 என்ற நேர் செட் கணக்கில் வெற்றி பெற்று நான்காவது சுற்றுக்கு முன்னேறினார்.

மற்றொரு போட்டியில், சுவிட்சர்லாந்தின் பெடரர், குரோசியாவின் கார்லோவிச்சை 7-6, 7-5, 6-3 என்ற நேர் செட் கணக்கில் வீழ்த்தி நான்காவது சுற்றுக்கு தகுதி பெற்றார்.

மற்ற மூன்றாவது சுற்றுப் போட்டியில், ஸ்பெயினின் பெலிசியானோ, உக்ரைனின் அலெக்ஸாண்டர், சீன தைபேயின் யென ஹசன், செக் குடியரசின் தாமஸ், ஸ்பெயினின் நிக்கோலஸ் ஆகியோர் வெற்றி பெற்றனர்.

கிளைஸ்டர்ஸ் அசத்தல்:

பெண்கள் ஒற்றையர் பிரிவு மூன்றாவது சுற்றில், பெல்ஜியத்தின் கிளைஸ்டர்ஸ், சுலோவேகியாவின் ஹண்டுசோவாவை சந்தித்தார். இதில் "நடப்பு சம்பியன்" கிளைஸ்டர்ஸ், 6-3, 6-2 என்ற நேர் செட் கணக்கில் வெற்றி பெற்று நான்காவது சுற்றுக்கு முன்னேறினார்.

இதன் மற்றொரு போட்டியில், "நம்பர்-1" வீராங்கனை டென்மார்க்கின் வோஸ்னியாக்கி, ருமேனியாவின் மோனிகாவை 6-2, 6-2 என்ற நேர் செட் கணக்கில் வீழ்த்தினார்.

# அவமானமாக உணர்கிறேன்

ஒரு கிரிக்கெட் வீரர் என்ற முறையில் இந்திய அணியின் மோசமான ஆட்டத்தால் மிகவும் அவமானமாக உணர்கிறேன். அவுஸ்ரேலியாவில் இந்திய வீரர்கள் சிறப்பாக விளையாடத் தவறிவிட்டனர்.

எல்லா வகையிலும் தவறாகவே செயற்பட்டுள்ளனர். இதற்காக அவர்களை ஒட்டுமொத்தமாகக் குறை கூறுவதும் தவறு. இதே அணிதான் உலகக் கோப்பையை வென்று நாட்டுக்கு பெருமை சேர்த்தது என்பதையும் மறந்துவிடக் கூடாது என்று முன்னாள் கப்டன் கபில்தேவ் கூறியுள்ளார்.

# ஏலப்பட்டியலில் முன்னணி

(சிட்னி)

2012 ஆம் ஆண்டு ஐ.பி.எல். வீரர்கள் ஏலப்பட்டியலில் அதிக தொகை நிர்ணயிக்கப்பட்ட ஒரே வீரராக கிராம் ஸ்வான் பதிவாகியுள்ளார். இங்கிலாந்து சுழற்பந்து வீச்சாளர் ஸ்வானுக்கு அடுத்த ஐ.பி.எல். போட்டிக்கான ஏலத்தில் ஆரம்ப ஏலத்தொகையாக 400,000 டொலர்கள் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

தவிர, முன்னாள் அவுஸ்ரேலிய சுழற்பந்து வீச்சாளர்களான பிரெட் ஹொக் மற்றும் ஸ்வெட் மெக்ஹில் ஆகியோர் இந்த ஏலத்தில் அதிக வயதான வீரர்களாக பதிவாயினர். முறையே 41, 40 வயதான இந்த வீரர்களுக்கு அடிப்படை ஏலத் தொகையாக 100,000 டொலர்கள் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் பெப்ரவரி 4 ஆம் திகதி நடைபெறவுள்ள ஐ.பி.எல். ஏலத்தில் மொத்தம் 183 பேர் ஏலம் விடப்படவுள்ளனர்.

எனினும் இந்த வீரர்களில் ஐ.பி.எல். தடை விதிக்கப்பட்ட கொச்சி அணி வீரர்கள் பெயர்கள் உள்ளடக்கப்படவில்லை.

# போதைப்பொருள் தடுப்பு தூதுவராக அப்ரிடி

ஐ.நா. சபையின் சார்பில் போதைப் பொருள் தடுப்பு குறித்த பிரசார இயக்க தூதராக பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் பிரபல வீரரான அப்ரிடி நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்தத் தகவலை ஐ.நா. வின் போதை மற்றும் குற்றப்பிரிவு அலுவலகம் அறிவித்தது. இவர் இப்பணியை செம்மையாக திறம்பட செய்வார் என நம்புவதாகவும் அந்த அறிக்கையில் தெரிவித்துள்ளது.

இது குறித்து அப்ரிடி கூறுகையில், இளைஞர்கள் போதைக்கு அடிமையாவதை வெறுக்கிறேன். இந்தப் புதிய பணியை சிறப்பாக நிறைவேற்ற முயற்சி எடுப்பேன் என்று தெரிவித்தார்.

# யாழ்ப்பாணத் திருவிழாவில் போட்டியில் வெற்றி பெற்றோர்

யாழ். மாநகரசபை நடத்திய யாழ்ப்பாணத் திருவிழாவில் இடம்பெற்ற கிறீஸ்மரம் ஏறுதல் மற்றும் தயிர் முட்டி உடைத்தல், கபடிப் போட்டி ஆகிய போட்டிகளில் வெற்றி பெற்றவர்கள் வருமாறு,

**கிறீஸ் மரம் ஏறுதல்**

01ஆம் இடம் சிவகாந்தம் நந்தகுமார்

**தயிர் முட்டி போட்டி**

01ஆம் இடம் துரைராஜா ராஜ்சித்குமார், 02ஆம் இடம் கந்தசாமி கேகசன், 03ஆம் இடம் ரொபேட் றோபேசன்

**கிளித்தட்டு**

01ஆம் இடம் நல்லதம்பி ரசீகரன் (சாந்த விநாயகர் விளையாட்டுக்கழகம்), 02ஆம் இடம் பிரபா (சிந்து விளையாட்டுக்கழகம்), 03ஆம் இடம் மாநகர சபை விளையாட்டுக்கழகம்).

**கபடிப் போட்டி**

01ஆம் இடம் நிசாந்தன் (சென் தோமஸ் விளையாட்டுக்கழகம்), 02ஆம் இடம் செல்வகுராயர் தினேஸ் (பன்னாலை விளையாட்டுக்கழகம்), 03 ஆம் இடம் ஜெயசீலன் (மாவடி அம்மன் குறிச்சி வி.க.)

(தொடரும்...)



யாழ். மத்திய கல்லூரி வளாகத்தில் அமைக்கப்பட்டு விரைவில் திறக்கப்படவுள்ள நீச்சல் தடாகத்தின் நிர்மாணப்பணியினை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி ஆகியோர் நேற்று முன்தினம் அதிகாலை பார்வையிட்டனர். அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் வேண்டுகோளுக்கமைவாக 'இளைஞர்களுக்கான நாளை அமைப்பு' இதற்கான நிதி ஒதுக்கீட்டை மேற்கொண்டுள்ளது.

# இணையத்தள துஷ்பிரயோகத்தைத் தடுக்க தேசியக்கொள்கை வகுக்கத் தயாராகிறது அரசு

(கொழும்பு)

இணையத்தளப் பயன்பாடு குறித்த தேசியக் கொள்கை ஒன்றை உருவாக்க அரசு துரித நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது.

இப்புதிய தேசியக்கொள்கை மூலம் இணையத் தளங்களை உருவாக்கும் பல்வேறு பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண முடியும் என்றும் அரசு எதிர்பார்க்கிறது.

இதன் முதற்கட்டமாக இது தொடர்பாக ஆராய்வதற்கென ஜனாதிபதியின் செயலாளர் தலைமையில் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாக இலங்கைத் தொலைத் தொடர்புகள ஒழுங்குபடுத்தும் ஆணைக் குழுவின் பணிப்பாளர் நாயகம் அனூஷா பெல்பிட்ட தெரிவித்துள்ளார்.

இந்தக் கொள்கைத் திட்டத்தை எதிர்வரும் ஆறு மாதங்களுக்குள் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

தற்போது ப்ரோட்பேண்ட் பயன்பாடு தொடர்பில் நிலவும் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணும் வகையில் புதிய கொள்கைத் திட்டம் தயாரிக்கப்படவுள்ளதாகவும் தொலைத் தொடர்பு ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

புதிய கொள்கைத் திட்டத்தின் மூலம் ப்ரோட்பேண்ட் பாவனையாளர்களுக்குப் பல்வேறு நன்மைகள் கிடைக்கவுள்ளதாக ஆணைக்குழுவின் பணிப்பாளர் மேலும் தொிவித்துள்ளார்.

# புலிகள் அமைப்பு தோற்கடிக்கப்பட்டாலும் அரசு தொடர்ந்தும் விழிப்புடன் உள்ளது

(கொழும்பு)



யுத்தம் நிறைவடைந்த போதிலும் புலிகளின் விசுவாசிகள் தொடர்பில் அரசு மிகவும் விழிப்பாகவும், அவதானத்துடனும் செயற்படுவதாகவும் இதனால் விடுதலைப் புலி அமைப்பின் நடவடிக்கைகள் தொடர்பில், புலனாய்வுத் தரப்பினர், தொடர்ந்தும் அவதானித்து வருவதாக பாதுகாப்புச் செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

மாத்தளை-கோஹலன்வல பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

புனருத்தாபன மற்றும் மீள்குடியேற்ற நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

யுத்த ரீதியாக விடுதலைப் புலிகள் தோற்கடிக்கப்பட்டாலும், அந்த அமைப்பின் கொள்கைகளைப் பின்பற்றும் நபர்கள் இப்போதும் இருப்பதை மறந்து விடக்கூடாது எனவும் பாதுகாப்புச் செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷ வலியுறுத்தியுள்ளார்.

## நீதவானின் இல்லம் உணவு விடுதியாகிறது

(கொழும்பு)

பாணந்துறை நீதவானின் உத்தியோகபூர்வ வாசஸ்தலம் அமைந்திருந்த இடத்தினை தனியாருக்குக் குத்தகைக்கு வழங்கி அங்கு உணவு விடுதி நடத்தப்படுவதாக களுத்துறை மாவட்ட ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் பெரேரா குற்றம்சாட்டினார். நாடாளுமன்றில் நேற்று முன்தினம் இடம்பெற்ற அமர்விலேயே அஜித் பெரேரா எம்.பி. மேற்படி வாய்மூல வினாவினை எழுப்பினார். அவர் அங்கு தொடர்ந்து கூறுகையில்,

சுனாமியின் பின்னரே மேற்படி சம்பவம் இடம்பெற்றுள்ளது. சுனாமியால் நீதவானின் வாசஸ்தலம் பாதிக்கப்பட்டது. அதன்பின்னர் அவ்விடத்திலிருந்து நீதவான் சென்றுவிட்டார். இதனைச் சாதகமாகப் பயன்படுத்திய பிரதேச செயலரே குறித்த வாசஸ்தலத்தினை தனியாருக்கு குத்தகைக்குக் கொடுத்துள்ளார் எனத் தெரிவித்துள்ளார்.

# வீசா மோசடி நபர்கள் 7பேர் கட்டுநாயக்காவில் கைது

(கொழும்பு)

போலி வீசா மூலம் பிரான்ஸ் செல்ல முற்பட்ட ஏழு வெளிநாட்டுப் பிரஜைகளை இரகசியப் பொலிஸார் நேற்றுமுன்தினம் கட்டுநாயக்கா விமான நிலையத்தில் கைது செய்துள்ளனர்.

கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தினூடாக இவர்கள் பிரான்ஸ் தலைநகரான பாரீஸ சென்றடைவதற்குத் தயாராகவிருந்த நிலையிலேயே சி.ஐ.டியினர் இவர்களைக் கைது செய்திருப்பதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

சிரியாவைச் சேர்ந்த மூன்று பெண்கள், அவர்களது இரண்டு பிள்ளைகள் மற்றும் துருக்கியைச சேர்ந்த இரண்டு ஆண்கள் ஆகிய ஏழுபேருமே சி.ஐ.டி.யினரால் கைது செய்யப்பட்டவர்களாவர்.

சிறிலங்கா எயார் லைன்ஸ் நிறுவனத்துக்கு கிடைத்த தகவலின் அடிப்படையிலேயே சி.ஐ.டி.யினர் சம்பவ இடத்துக்கு விரைந்து குறித்த ஏழுபேரையும் மடக்கிப் பிடித்ததாகவும் பொலிஸ பேச்சாளர் கூறினார்.

கைது செய்யப்பட்டிருக்கும் வெளிநாட்டுப் பிரஜைகள் ஏழு பேருக்கும் போலி வீசா பெற்றுக் கொடுப்பதில் முன்னின்றவரகள், உதவியவர்கள் உள்ளிட்ட வலைப்பின்னலை சர்வதேச மட்டத்தில் தேடிக் கண்டுபிடிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளையும் சி.ஐ.டி.யினர் முன்னெடுத்து வருவதாகப் பொலிஸ் பேச்சாளர் குறிப்பிட்டார்.

# தெரிவுக் குழுவில் தீர்வைத் தேடுவது காலத்தை இழுத்தடிக்கும் செயல்



(கொழும்பு)

தீவிரப்போக்குடைய கட்சிகள் பல அங்கம் வகிக்கும நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் பிரச்சினைக்கான தீர்வைத் தேடுவது என்பது காலத்தை இழுத்தடிக்கும் செயல் என்று நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

அரசுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையிலான பேச்சுவார்த்தை நாடாளுமன்ற தேர்வுக்குழு என்ற திடீர்மாற்றத்தினால் தாமதமடைந்து வருவதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சுட்டிக்காட்டுகிறது. நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் தம்மை பங்குபெறுமாறு அரசு வலியுறுத்தியிருந்ததாகவும் சுரேஷ் பிரேமச்சந்திரன் கூறினார்.

பெருமளவு அதிகாரத்தினைக் கொண்டுள்ள சிறிலங்கா சுதந்திரக் கட்சியுடனேயே ஓர் அரசியல் தீர்வினை காணமுடியாதுள்ளபோது, தீவிரப்போக்குடைய கட்சிகளை உள்ளடக்கிய ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புடன் எவ்வாறு தீர்வினை எட்ட முடியும். நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் தீவிரப்போக்குடைய பல கட்சிகளின் பிரதிநிதிகளும் பங்குபெறவுள்ளனர். ஆகையினால் இது காலத்தினை இழுத்தடிக்கும் அரசின் தந்திரோபாயம் என்றும் சுரேஷ் பிரேமச்சந்திரன் எம்.பி. சுட்டிக்காட்டினார்.

ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டபடி இம்மாதம் 17, 18 மற்றும் 19ஆம் திகதிகளில் நடைபெறவிருந்த் பேச்சு நடைபெறவில்லை இதற்கான காரணத்தினையும் அரசு இதுவரை தெரிவிக்கவில்லை என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார். இவ்விடயம் தொடர்பில் அரச தரப்பின் கருத்துக்களை பெறமுற்பட்டபோதும் அதுவும் சாத்தியமளிக்கவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

# மாணவர்களுக்குத் தலைமைத்துவப் பயிற்சி; அரசின் திட்டம் தோல்வியில் முடிவு

## ஐ.தே.க.மாணவர் அமைப்பு

(கொழும்பு)

பல்கலைக்கழக மாணவர்களுக்கு அரசு 900 கோடி ரூபா செலவில் மேற்கொள்ளப்பட்ட தலைமைத்துவப் பயிற்சி வழங்கும் திட்டம் தோல்வியில் முடிந்துள்ளதாக பல்கலைக்கழக இளைஞர் முன்னணியின் உப தலைவர் கெலும்கருணாதிலக அரசு மீது குற்றஞ்சுமத்தியுள்ளார்.

அரசாங்கம் பல்வேறு வழிகளில் மாணவர்களின் உரிமைப் போராட்டங்களை அடக்குமுறைக்கு உட்படுத்தி வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

மாணவர்கள் மீது அரசு பயங்கரவாத முத்திரை குத்தப்படுவதனை ஏற்றுக்கொள்ள முடியாது எனவும் ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவுடன் இயங்கும் பல்கலைக்கழக மாணவர் அமைப்பான பல்கலைக் கழக இளைஞர் முன்னணியின் உப·தலைவரான இவர் மேலும் தெரிவித்தார்.

அரசாங்கம் தனது குறைகளை மூடி மறைக்கும் நோக்கில் மாணவர்கள் மீது பயங்கரவாத முத்திரை குத்த முயற்சிக்கின்றது என்றும்,

மக்கள் நெருக்கடிகளை எதிர்நோக்குதல், பொருட்களின் விலை உயர்வு, நாற்பதாயிரம் பட்டதாரிகளுக்கு வேலை வாயப்பு வழங்காமை உள்ளிட்ட பல்வேறு குறைபாடுகளை மறைக்கும் நோக்கில் இவ்வாறு மாணவர்கள் மீது பயங்கரவாத முத்திரை குத்தப்படுகின்றது. 900 கோடி ரூபா செலவில் பல்கலைக்கழக மாணவர்களுக்கு வழங்கப்பட்ட தலைமைத்துவப் பயிற்சி தோல்வியடைந்துள்ளது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

## கப்பம் பெறும் கும்பல்; விசாரணைக்கு ஏற்பாடு

(கொழும்பு)

கொழும்பு பொருளாதார மத்திய நிலையங்களில் கப்பம் பெறப்படுவதைத் தடுத்து நிறுத்த அரசு நடவடிக்கை எடுக்கவிருக்கிறது.

பொருளாதார மத்திய நிலையங்களில் சிலர் கப்பம் பெறுவது தொடர்பான தகவல் கிடைத்துள்ளதாகவும், இது தொடர்பில் கவனம் செலுத்தப்படும் என்றும் சபாநாயகர் சமல் ராஜபக்ஷ நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் புத்திக்க பத்திரண, உள்நாட்டு வர்த்தக அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவிடம் கேள்வியொன்றை எழுப்பிய சந்தர்ப்பத்தில் சபாநாயகர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டார். சில பொருளாதார மத்திய நிலையங்கள் மூடப்படுகின்றமை மற்றும் பொருளாதார மத்திய நிலையங்களில் கப்பம் பெறப்படும் சம்பவங்கள் தொடர்பில் புத்திக்க பத்திரண கேள்வி எழுப்பியிருந்தார்.

# பிரதியமைச்சரின் வாகனம் விபத்தில் சிக்கி இருவர் காயம்

(கொழும்பு)

மீள்குடியேற்ற பிரதியமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரனின் வாகனம் மோட்டார் சைக்கிளுடன் மோதி விபத்துக்குள்ளானதில் இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

வாழைச்சேனையிலிருந்து மட்டக்களப்பு நோக்கிச் சென்ற பிரதியமைச்சரின் வாகனமும் மட்டக்களப்பிலிருந்து ஏறாவூர் நோக்கிப் பயணித்த மோட்டார் சைக்கிளும் நேற்றுமுன்தினம் பிற்பகல் 1.30 மணியளவில் விபத்துக்குள்ளானதாகவும், அவ்விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவரே படுகாயமடைந்துள்ளதாகவும் மட்டக்களப்புத் தலைமையகப் பொலிஸார் தெரிவிக்கின்றனர். மட்டக்களப்புத் தலைமையகப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட திருமலை பிரதான வீதியிலேயே இவ்விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தினால் தலை மற்றும் கால் பகுதிகளில் கடும் காயங்களுக்குள்ளான இருவரும் மட்டக்களப்பு போதனா வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

# ஜனாதிபதிக்கு ஆபத்து ஏற்படுத்த காத்திருந்த சந்தேக நபர் கைது

(கொழும்பு)

பிரதியமைச்சர் முரளிதரனின் முன்னாள் உதவியாளர் ஜனாதிபதி மீது தாக்குதல் நடாத்த தயாராக இருந்த சமயம் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கு அன்ர்த்தம் ஒன்றை ஏற்படுத்த தயாராக இருந்ததாக சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டவரை இந்த மாதம் 25ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கும்படி உத்தரவிடப்பட்டுள்ளது. இந்த உத்தரவை அநுராதபுர மேலதிக நீதிபதி சந்திம எதிரிமான பிறப்பித்துள்ளார்.

கடந்த 19ஆம் திகதி மிகுந்தலைக்கு விஜயம் செய்த ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கு அனர்த்தம் ஒன்றை ஏற்படுத்த அவர் தயாராக இருந்ததாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இது தொடர்பாக 119 அவசர பொலிஸ் பிரிவுக்குத் தொலைபேசி அழைப்பொன்று கிடைத்திருந்தது.

இந்தத் தொலைபேசி அழைப்பினை மேற்கொண்ட தொலைபேசி இலக்கம் தொடர்பாக முழுமையான அறிக்கை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்குமாறும் மேலதிக நீதிபதி மிகுந்தலை பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார்.

திருகோணமலை-உப்புவெளி பிரதேசத்தைச் சேர்ந்தவரே இவ்வாறு கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

சந்தேக நபர் பிரதி அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரனின் உதவியாளராகப் பணியாற்றியவர் எனவும் தெரியவந்துள்ளது.

இதேவேளை, கைது செய்யப்பட்டவரிடம் அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்கான ஆவணம் எதனையும் வைத்திருக்கவில்லை எனப் பொலிஸார் நீதிமன்றத்திடம் தெரிவித்தனர்.

# பாதிக்கப்பட்ட மக்களின் தேவைகளை நிறைவுசெய்ய செயற்பாடுகள் துரிதம்

(கிளிநொச்சி)

**மீள்குடியேற்றத்தின் பின் மாவட்டத்தின் அனைத்துத் துறைகளும் ஆரம்பக் கட்டத்திலிருந்து முன்னேற்றம் கண்டுள்ளன. இருப்பினும் மக்களின் தேவைகள் அதிகமாக இருப்பதானால் குறைபாடுகளும் இருக்கவே செய்கின்றன. எனவே 2012 ஆம் ஆண்டில் இச் செயற்பாடு களை மேலும் துரிதப்படுத்தி மக்களின் தேவைகளை நிவர்த்தி செய்ய வேண்டிய அவசியம் உள்ளது. எனவே அதற்கான அனைத்து நட வடிக்கைகளையும் நாம் மேற்கொண்டு வருகின்றோம் என ஈ.பி.டி.பி. நாடாளுமன்ற உறுப்பினரும், நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவருமான மு.சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.**



நேற்றுமுன்தினம் கிளிநொச்சி-கரைச்சிப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திற்குத் தலைமை தாங்கி உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், மீள்குடியேற்றத்தின் பின் கிளிநொச்சி மாவட்டம் படிப்படியாக அனைத்து துறைகளிலும் முன்னேற்றம் கண்டு வருகின்றது. கடந்த ஆண்டு கல்வித்துறையில் மிகப் பெரும் முன்னேற்றம் காணப்பட்டுள்ளது. பாடசாலைகளில் காணப்பட்ட வளப்பற்றாக் குறைகளில் பெரும் பகுதிக்குத் தீர்வு காணப்பட்டுள்ளன.

விவசாயத்தை பொறுத்த வரையில் மாவட்டத்தில் 55 ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஏக்கர் நிலங்களில் நெற்பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளன. அத்தோடு கரைச்சி பிரதேசத்தின் அனைதது வயல் நிலங்களிலும் நெற செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதேவேளை பாரிய குளங்கள், சிறிய குளங்கள் உட்பட பல குளங்கள் புனரமைக்கப்பட்டுள்ளன. அத்தோடு வயல் நிலங்களுக்கான நீர்ப்பாசன வசதிகள் சீர்செய்யப்பட்டுள்ளன. மேலும் மேட்டு நில விவசாயத்தினை ஊக்குவிப்பதற்கான செயற்பாடுகளுக்கும் முன்னுரிமை கொடுக்கப்பட்டுள்ளன. இவற்றினூடாக சமூகத்தில் வாழ்வாதார முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளதனை வெளிப்படையாகவே காணமுடிகின்றது. இதே வேளை கடற்றொழிலிலும் நன்நீர் மீன் பிடியிலும் கணிசமான முன்னேற்றத்தை மக்கள் எட்டியுள்ளனர்.

மின்சார விநியோகத்தைப் பொறுத்த வரையில் ஆரம்பக் கட்டத்திலிருந்து அவற்றை செயற்படுத்த வேண்டியிருந்ததால் முழுமையாக இணைப்புக்களை வழங்க முடியாது போனது. இருப்பினும் கணிசமான பகுதிகளுக்கு மின்சாரம் வழங்கப்பட்டுள்ளதுடன், மேலும் பல இணைப்புக்களை உடனடியாக வழங்குவதற்கான செயற்பாடுகள் நிறைவு பெற்றுள்ளன.

மீள்குடியேற்றத்தின் பின் மாவட்டத்தின் அனைத்து துறைகளும் ஆரம்பக் கட்டத்திலிருந்து முன்னேற்றம் கண்டுள்ளன. இருப்பினும் மக்களின் தேவைகள் அதிகமாக இருப்பதனால் குறைபாடுகளும் இருக்கவே செய்கின்றன. எனவே 2012ஆம் ஆண்டில் இச்செயற்பாடுகளை மேலும் துரிதப்படுத்தி மக்களின் தேவைகளை நிவர்த்தி செய்ய வேண்டிய அவசியம் உள்ளது. எனவே அதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் நாம் மேற்கொண்டு வருகின்றோம்.

அதிலும் சில செயற்பாடுகளுக்கு முன்னுரிமை கொடுக்க வேண்டியதன் அவசியத்தையும் நாம் உணர்கின்றோம். அதில் மக்களின் வீட்டுத் தேவைகளை நிவர்த்தி செய்யும் செயற்பாடு அதிமுக்கியத்துவம் பெறுகின்றது. மாவட்டத்தில் 24 ஆயிரம் வரையான நிரந்தர வீடுகள் கடந்த கால போரினால் அழிந்து போயுள்ளன. அதில் 8300 வரையான வீடுகள் தற்போது அமைக்கப்பட்டுள்ளன. இவ்வாண்டில் இந்திய வீட்டுத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதனூடாகவும் மேலும் அரசாங்கத்தின் வீடமைப்புத் திட்டங்களுக்கு ஊடாகவும் வீட்டுப் பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியும் எனவும் நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் மீள்குடியேற்றம், கல்வி, வீடமைப்பு, வீதி அபிவிருத்தி, விவசாயம், நீர்ப்பாசனம், போக்குவரத்து, சுகாதாரம், மின்சாரம், அரசசார்பற்ற நிறுவனங்களின் செயற்பாடுகள் என ஒவ்வொரு துறையாக விரிவாக ஆராயப்பட்டு மக்கள் அமைப்பு பிரதிநிதிகளின் கருத்துக்கள் பெறப்பட்டு பிரச்சினைகள் தேவைகள் காணப்படும் இடத்து வருகை தந்துள்ள உரிய அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டு தீர்வுகளும் காணப்பட்டன.

## தொல்புரம் மாதர் சங்கத்துக்கு புதிய நிர்வாகம் தெரிவு

(தொல்புரம்)

தொல்புரம் மேற்கு கிராம அலுவலர் பிரிவுக்கான மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்துக்கு புதிய நிர்வாகம் தெரிவு செய்யப்பட்டிருக்கிறது.

கடந்த வெள்ளிக்கிழமை மேற்படி மாதர் கிராம அபிவிருத்திச் சங்க அலுவலகத்தில் இடம்பெற்ற பொதுக் கூட்டத்தின் போதே இப்புதிய நிர்வாகம் தெரிவு செய்யப்பட்டிருக்கிறது.

இப்பொதுக் கூட்டத்தில் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர், கிராம உத்தியோகத்தர், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## அருண் தம்பிமுத்து இணைப்பாளராகிறார்



(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்திற்கான ஜனாதிபதியின் இணைப்பாளராக அருண் தம்பிமுத்து நியமிக்கப்பட்டுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஷாம் தம்பிமுத்துவின் மகனான அருண தம்பிமுத்துவிற்கே மேற்படி நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்கவினால் அருணுக்கான நியமனக் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## கபினட் அமைச்சர்களுக்கு சம்பள அதிகரிப்பு; குற்றச்சாட்டை நிராகரிக்கிறது அரசாங்கம்

(கொழும்பு)

கபினட் அமைச்சர்களின் சம்பளம் அதிகரிக்கப்பட்டிருப்பதாக முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுக்களை அரசாங்கம் நிராகரித்துள்ளது. அமைசசர்களின் சம்பளத்தை அதிகரிப்பதற்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லையென அமைச்சரவைப் பேச்சாளரும் ஊடகத்துறை அமைச்சருமான கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

இலங்கையின் அரசியலமைப்புக்கு அமைய அமைச்சரவை அமைச்சர்கள் மற்றும் உயர்நீதிமன்ற நீதியரசர்களின் சம்பளமும் ஒரே மட்டத்திலேயே காணப்படுகிறது. நீதிபதிகளுக்கு மாத்திரமே சம்பளம் அதிகரிக்கப்பட்டுள்ளது. எனினும் அமைச்சரவை அந்தஸ்து அமைச்சர்களின் சம்பள அதிகரிப்புக்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அனுமதி வழங்கவில்லை என அமைச்சர் தெரிவித்தார்.

அமைச்சர்களின் சம்பளம் அதிகரிக்கப்படுவதாக முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுக்களில் எந்தவிதமான உண்மையும் இல்லை. இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம், தேசிய நீர் வழங்கல் சபை, இலங்கை மின்சார சபை ஆகியவற்றின் பணியாளாகளுக்கு அடிப்படைச் சம்பளத்தை 25 வீதத்தால் அதிகரிப்பதற்கு அரசாங்கம் இணக்கம் கண்டுள்ளது.

இதற்கு முன்னதாக அவர்களின் அடிப்படைச் சம்பளத்தில் 18 வீத அதிகரிப்பும் அதற்கு மேலதிகக் கொடுப்பனவாக 2,500 ரூபாவும் வழங்குவதற்கு அரசாங்கம் தீர்மானித்தது. அதன் பின்னர் தொழிற்சங்கப் பிரதிநிதிகளுடன் நடத்தப்பட்ட பேச்சுவார்த்தைகளைத் தொடர்ந்து அடிப்படைச் சம்பளத்தை 25 வீதமாக அதிகரிக்க அரசாங்கம் இணக்கம் கண்டது.

எனினும், இந்தச் சம்பள அதிகரிப்புப் போதாது எனக் கூறி சில தொழிற்சங்கங்கள் போராட்டம் நடத்துகின்றன. ஆனாலும் பெரும்பாலானவர்கள் அரசாங்கம் வழங்குவதற்கு இணங்கியிருக்கும் 25 வீத சம்பள உயர்வை ஏற்றுக்கொண்டுள்ளனர். ஒரு சிலர் மாத்திரமே போராட்டங்களில் ஈடுபட்டுள்ளனர் எனத் தெரிவித்தார்.

## சர்வதேச நியமங்களுடன் கணக்காய்வு இந்த ஆண்டு முதல் புதிய நடைமுறை

(கொழும்பு)

இலங்கையின் கணக்காய்வு நடவடிக்கைகளை சர்வதேச நியமங்களுக்கு ஏற்ப மேற்கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளன.

இதன் முதற்கட்டமாக இந்த ஆண்டுமுதல் நாட்டின் கணக்காய்வு நடவடிக்கைகளை சர்வதேச தரத்திற்கு அமைய முன்னெடுப்பதற்கு திட்டமிட்டுள்ளதாக அரச கணக்காய்வாளர் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

தற்போது இந்த நடவடிக்கைகளுக்காக அதிகாரிகளுக்கு பயிற்சியளிக்கப்பட்டு வருவதாக கணக்காய்வாளர் நாயகம் ஆர்.எஸ்.எச்.சமரவீர கூறியுள்ளார்.

அடுத்த மாதம் 28 ஆம் திகதியளவில் பல்வேறு நிறுவனங்களின் கணக்குகள் தமக்கு கிடைக்கப்பெற உள்ளதாகவும், அந்த கணக்காய்வு நடவடிக்கைகளை விரைவில் நிறைவு செய்ய எதிர்பார்த்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அதன்பின்னர் வங்கிகளின் ஆண்டறிக்கைகளை இலகுவாக தயாரிக்கும் வகையில் சர்வதேச தரத்திற்கு அமைவான நடவடிக்கைகீளை முன்னெடுக்கவுள்ளதாக கணக்காய்வாளர் நாயகம் மேலும் சுட்டிக்காட்டினார்.

## வலி.மேற்கில் டெங்கு ஒழிப்பு; அதிதீவிரமாக முன்னெடுப்பு

(யாழ்ப்பாணம்)

டெங்கு ஒழிப்பு வாரம் வலிகாமம் மேற்குப் பிரதேச செயலர் பிரிவில் மிகத்தீவிரமாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

இதற்காக சுகாதாரத் திணைக்களத்தின் தொண்டர்களும், அதிகாரிகளும் தினசரி களநிலைக்குச் சென்று டெங்கு நுளம்புக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

இவர்களுடன் இணைந்து சமுர்த்தி உத்தியோகத்தர்களும், கிராம அலுவலர்கள், பொலிஸ் அதிகாரிகள் உட்பட சுகாதாரத் தொண்டர்கள் ஆகியோரும் இந்த டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தியுள்ளனர்.

டெங்கு நுளம்பு பெருக்கமடையக் கூடிய சூழல் அல்லது கழிவுநீர்த் தேக்கங்கள் அவதானிக்கப்படும் பட்சத்தில் சம்பந்தப்பட்டவர்களுக்கு எதிராக உடனடியாக நீதிமன்ற வழக்குப் பதியும் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

ஏற்கனவே சுழிபுரம், வட்டுக்கோட்டை, அராலி ஆகிய பகுதிகளில் இவ்வாறான பலருக்கு வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது.

## வீதி விபத்தில் பெண் பலி; சாரதிக்கு 7 வருடச் சிறை



(கொழும்பு)

கவனக்குறைவாக வாகனம் செலுத்தி பெண்ணொருவரின் உயிரிழப்பிற்குக் காரணமான தனியார் பஸ்சாரதி ஒருவருக்கு கொழும்பு மேல் நீதிமன்றம் ஒத்திவைக்கப்பட்ட சிறைத்தண்டனை விதித்துள்ளது.

இதற்கமைய குற்றவாளிக்கு நேற்றுமுன்தினம் ஏழு வருட கால ஒத்திவைக்கப்பட்ட கடுழியச் சிறைத்தண்டனையும், இரண்டு வருடச் சிறைத்தண்டனையும் மேல்நீதிமன்ற நீதிபதி ஜீ.பத்மன் சுரசேன வழங்கியுள்ளார்.

2010 ஆம் ஆண்டில் கல்கிசைப் பகுதியில் பெண்ணொருவர் மீது வாகனத்தை மோதி அவர் உயிரிழப்பதற்குக் காரணமாக இருந்ததாக குறித்த நபருக்கு எதிராகப் பொலிஸார் வழக்குத் தாக்கல் செய்திருந்தனர்.

உயிரிழந்த பெண்ணின் ஐந்து குழந்தைகளுக்காக ஆறு இலட்ச ரூபா நட்டஈட்டை வழங்குமாறும் குற்றவாளிக்கு நீதிபதி உத்தரவு பிறப்பித்துள்ளார்.

## இந்தியாவுடன் இரகசிய ஒப்பந்தம்; 13 + அப்பால் சென்று பிரச்சினைக்குத் தீர்வு

### தெளிவுபடுத்தக் கோருகிறது ஜே.வி.பி

(கொழும்பு)

இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண்பது தொடர்பாக 13ஆவது திருத்தச் சட்டத்துக்கு அப்பால் செல்வது குறித்து அரசு இந்தியாவுடன் இரகசிய ஒப்பந்தம் ஒன்றைச் செய்துள்ளதா என்பது குறித்து பொதுமக்களுக்குத் தகுந்த விளக்கமளிக்க வேண்டும் என்று ஜே.வி.பி. அரசிடம் கோரியுள்ளது.

13ஆவது திருத்தச் சட்டத்துக்கு அப்பால் சென்ற தீர்வு ஒன்று தொடர்பில், இந்தியாவுடன் அரசாங்கம் இணங்கியுள்ளதா? இல்லையா என்பது குறித்து தெளிவுப்படுத்த வேண்டும் என ஜே.வி.பியின் உறுப்பினர் கே.டி.லால் காந்த அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளார். 13ஆவது திருத்தச் சட்டத்திற்கு அப்பால் சென்று தீர்வை வழங்க, இலங்கை அரசாங்கம் இந்தியாவிடம் ஒப்புக்கொண்டுள்ளதாக, இந்திய வெளியுறவு அமைச்சர் கூறியே தாம் தெரிந்துக் கொள்ள வேண்டிய நிலை காணப்படுவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த நிலையில், இந்தியாவுடன் இலங்கை அரசாங்கம் இதற்கு ஒப்பு கொண்டதா? இல்லையா என்பது குறித்து நேரடியாக மக்களுக்கு விளக்கமளிக்க வேண்டும் என அவர் கோரியுள்ளார்.

கதம்பம்

# அமெரிக்காவில் "மாற்றம்" வருமா?

"மாற்றம்" என்கிற ஒற்றைச் சொல்லைக் கொண்டு அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்றவர் பராக் ஒபாமா. நேர்த்தியாக வடிவமைக்கப்பட்ட அவரது பிரசாரத்துக்கும் உரைவீச்சுக்கும் அமெரிக்க மக்கள் மயங்கி நின்றார்கள். ஜனாதிபதி வேட்பாளருக்கான போட்டியில் ஹிலாரி கிளின்டனைத் தோற்கடித்த போதும், ஜனாதிபதி தேர்தலில் குடியரசுக் கட்சியைச் சேர்ந்த ஜோன் மெக்கைனை வீழ்த்திய போதும் மாற்றம் என்கிற சொல்லை மட்டும் விடாது பிடித்திருந்தார் ஒபாமா.

ஈராக், ஆப்கானிஸ்தான் போர், பொருளாதார நெருக்கடி போன்றவை காரணமாக ஜோர்ஜ் புஷ் மீதும், குடியரசுக் கட்சியினர் மீதும் கடும் கோபத்தில் இருந்த அமெரிக்கர்கள், ஒபாமா கேட்டுக் கொண்டபடி "மாற்றம் தேவை" என்பதில் நம்பிக்கை வைத்தார்கள். முஸ்லிம் நடுப் பெயரை மறைத்தது போன்ற சர்ச்சைகள் எழுநதாலும் கறுப்பினத்தைச் சேர்ந்தவர் என்கிற கரிசனமான பார்வை ஒபாமா மேல் இருந்தது. யாரும் எதிர்பார்க்காத வகையில் கென்னடி குடும்பத்தினர் ஆதரவளித்தனர். எல்லாம் சேர்ந்து ஒபாமாவை வெள்ளை மாளிகைக்கு அனுப்பி வைத்தது.

இந்த 3 ஆண்டுகளில் நிலைமை தலைகீழாக மாறியிருக்கிறது. எந்தச் சொல்லைப் பயன்படுத்தி ஜனாதிபதித் தேர்தலில் ஒபாமா வெற்றி பெற்றாரோ, அதே சொல் அவருக்கு எதிராகவே பயன்படுத்தப்படுகிறது. உண்மையிலேயே இப்போதுதான் மாற்றம் தேவை என்று அவரது எதிர்ப்பாளர்கள் பிரசாரம் செய்யத் தொடங்கியிருக்கின்றனர். ஒரு "வரலாற்றுத் தவறு" இந்த ஆண்டு திருத்தப்பட இருக்கிறது என்று கோஷம் எழுப்புகின்றனர். முக்கிய நகரங்களிலும் இணையத்தளங்கள் மூலமாகவும் ஒபாமா எதிர்ப்புப் பிரசாரம் சூடு பிடித்திருக்கிறது.


அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் இந்த ஆண்டு இறுதியில் நடக்க இருக்கிறது. ஜனநாயகக் கட்சி சார்பில் ஒபாமாவே மீண்டும் போட்டியிடுவது என்பது உறுதியான பின், ஒவ்வொரு மாநிலத்திலும் நடக்கும் தேர்தல்களில் அவர் பிரசாரம் செய்து வருகிறார். ஆனால், கடந்த தேர்தலைப் போல அவரது பிரசாரத்தில் மக்களை ஈர்க்கும் எந்த அம்சமும் இல்லை. அவரிடம் இருந்த ஆளுமைத் திறனும் வசீகரமும் திடீரெனக் காணாமல் போய்விட்டதைப் போலத் தெரிகிறது.

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில், பிரசாரம் வித்தியாசமாகவும் மிக நீண்டதாகவும் இருக்கும். அங்கு ஜனநாயகம் தழைத்து ஓங்குவதைப் போலத்தான் தெரியும். ஆனால், அரசியல்வாதிகள் என்னவோ எல்லா நாடுகளையும் போல பெரு நிறுவனங்களின் கைப்பாவையாகவே நடந்து கொள்கிறார்கள். தேர்தல் நிதி வசூலிப்பது ஒவ்வொரு வேட்பாளரின் தலையாய கடமையாக இருக்கிறது.

பெருநிறுவனங்களிடமிருந்துதான் பெரும்பணம் கிடைக்கிறது. இதற்குப் பதிலுதவியாகத்தான் பதவிக்கு வந்த பிறகு, இந்தியா போன்ற கேட்பாரற்ற நாடுகளின் பிரதமர்களைப் பிடித்து, நன்கொடை அளித்த நிறுவனங்களுக்கு அணு உலை நிறுவுவது, ஆயுதம் அளிப்பது என ஏதாவது ஒப்பந்தப் பணிகளைப் பெற்றுக் கொடுக்கிறார்கள்.

பொதுக்கூட்டங்களுக்குக் கூட்டம் சேர்ப்பது, அங்கும் பெரிய பிரச்சினைதான் பொதுக கூட்டங்களில் கலந்து கொள்ளுங்கள், ஜனாதிபதியுடன் இரவு விருந்தில் கலந்து கொள்ளும் வாய்ப்பை வெல்லுங்கள் என்பது போன்ற கவர்ச்சிகரமாக விளம்பரம் செய்தால்தான் பொதுக்கூட்டங்களில் மக்கள் கலந்து கொள்கிறார்கள்.

ஜனநாயகக் கட்சி சார்பில் ஒபாமாதான் வேட்பாளர் என்று முடிவாகிவிட்ட நிலையில், குடியரசுக் கட்சியினர் மட்டும்தான் வேட்பாளரைத் தேர்ந்தெடுக்க வேண்டியிருக்கிறது. கடந்த தேர்தலில் குடியரசுக் கட்சியின் சார்பில் போட்டியிட்ட ஜோன் மெக்கைன் இந்தத் தேர்தலில் போட்டியிடவில்லை. இப்போதைக்கு



குடியரசுக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளருக்கான போட்டியில் முந்தி நிற்பது மசசூட்ஸ் முன்னாள் ஆளுநர் மிற் ரொம்னி. கடந்த தேர்தலில் மெக்கைனிடம் வாய்ப்பைப் பறிகொடுத்த ரொம்னி, இந்தத் தேர்தலில் அவரது முழு ஆதரவைப் பெற்றிருக்கிறார். ரொம்னிக்கு போட்டியாக இருப்பார் என்று எதிர்பார்க்கப்பட்டவரும் மூன்றாவது இடத்தில் இருந்தவருமான ஹன்ஸ்மன் திடீரென போட்டியிலிருந்து விலகியிருக்கிறார்.

ஆக, குடியரசுக் கட்சியில் இறுதிப் போட்டி மிற் ரொம்னிக்கும் எம்பி.யாக இருககும் ரொன் போலுக்கும் மட்டும்தான். இதில் ரொன் போல் இரண்டாமிடத்தில் இருககிறார். தொழிலதிபரான ரொம்னிக்கு குடியரசுக் கட்சியின் பல்வேறு தலைவர்களும் பெரு நிறுவனங்களும் ஆதரவு தெரிவித்திருப்பதால், இந்தப் போட்டியில் அவர் வெற்றி பெறுவதற்கே அதிக வாய்ப்புகள் இருப்பதாகக் கருதப்படுகிறது.

குடியரசுக் கட்சியின் போட்டியில் ரொம்னி வென்று, ஒருவேளை இப்போதே தேர்தல் நடத்தப்பட்டால், ஒபாமா கடும் போட்டியைச் சந்திக்க நேரிடும் என்று கருத்துக் கணிப்புகள் தெரிவிக்கின்றன. ரொம்னிக்கு கிடைக்கப் போகும் வாக்குகளில் பெரும்பகுதி, ஒபாமா மீண்டும் பதவிக்கு வரக்கூடாது என்று விரும்புவோரின் வாக்குகளாகவே இருக்கும் என்றும் கூறப்படுகிறது.

மக்கள் எதிர்ப்பைச் சம்பாதிப்பது ஒன்றும் அமெரிக்க ஜனாதிபதிகளுக்குப் புதிதல்ல. தேர்தலில் அது எதிரொலிக்குமா என்பதுதான் பிரச்சினை. அனைத்துத் தரப்பினரும் எதிர்த்த ஜோர்ஜ் புஷ்ஷால் இரண்டாவது முறையும் ஆட்சிக்கு வர முடிந்தது என்றால் ஒபாமாவால் மீண்டும் வர முடியாதா என்கிற கேள்வியிலும் நியாயம் இருக்கத்தான் செய்கிறது.

- எம். மணிகண்டன்-

# தன்னை உணர்தல்

பிரிட்டிஷ் நாடாளுமன்றத்தில் ஒரே சலசலப்பு. ஆளும் கட்சியைச் சேர்ந்த அங்கத்தினர் ஒருவரே நாடாளுமன்றத்தில், "அரசாங்கத்தின் போக்கு கண்ணைக் கட்டி, காட்டில் விட்டது போலிருக்கிறது!" என்று தாக்கிப் பேசி விட்டார்.



அடுத்த கூட்டத்தில், எதிர்க்கட்சி உறுப்பினர் ஒருவர் எழுந்து, "ஆளுங் கட்சி உறுப்பினரே இப்படிப் பேசியிருக்கிறாரே... இதுபற்றி என்ன நினைக்கிறீர்கள்?" என்று கேட்டார்.

அதற்கு மக்மில்லன், "அந்த உறுப்பினருக்கு புத்திக் கூர்மையும், சுதந்திரமும் உண்டு. அவற்றை அவருக்குக் கொடுத்தது யார் என்று, நான் சொல்லக் கூடாது!" என்றார்.

இந்தப் பதிலைக் கேட்டு, ஆளுங்கட்சியினர் ஆரவாரித்தனர். ஏன் தெரியுமா? அந்தக் குறிப்பிட்ட உறுப்பினர், மக்மில்லனின் சொந்த மகனே!



அமெரிக்க கவிஞரும் விமர்சகருமான ரி.எஸ்.எலியட்டிடம் (1888-1965) ரொபேர்ட் கிரோக்ஸ் என்ற பதிப்பாளர், "பெரும்பாலான ஆசிரியர்களால் எழுத்தாளர்களாக இருக்க முடிவதில்லை என்பதை ஒப்புக்கொள்கிறீர்களா?" என்று கேட்டாராம். "ஆமாம். சில ஆசிரியர்களால் எழுத்தாளர்களாக முடிவதில்லை என்பதை ஏற்றுக்கொள்கிறேன்" என்றவர் சில விநாடிகள் கழித்துச் சொன்னாராம், "ஆனால் மிகச் சிறந்த எழுத்தாளர்களாக இருந்ததுண்டு."

ஒஸ்கார் வைல்ட், தனிமையில் சிறையில் அடைபட்டிருந்த போது கூறியது: "என்னுடைய அறிவை ஊதாரித்தனமாக செலவழித்துவிட்டேன். எந்த ஒரு சிறிய செய்கையும் கதாபாத்திரத்தை உருவாக்கலாம் அல்லது அழிக்கலாமென்பதை மறந்து விட்டேன்."





மின்குமிழைக் கண்டுபிடித்த தோமஸ் அல்வா எடிசன் அதற்காக கிட்டத்தட்ட 2000 தடவைகள் முயற்சித்தாராம். இத்தனை தடவைகள் தோற்றிருக்கிறீர்களே, அந்த அனுபவம் எப்படி இருந்தது என்று கேட்டதற்கு எடிசனின் பதில்: "நான் ஒருதடவையும் தோற்றதில்லையே. இந்த மின்குமிழ்க் கண்டுபிடிப்பு என்பது இரண்டாயிரம் படிகள் கொண்ட ஒரு செய்முறை அவ்வளவுதான்.

# பிழையின்றித் தமிழ் எழுதுவோம் 11

**பெயர்சொல் - பெயர்ச்சொல்**

பெயர்சொல் என்பதும் பெயர்ச்சொல் என்பதும் ஒருபொருள் சொற்களா?

இல்லை. "பெயர்சொல்" என்பதன் இடையே "ச்" எனும் ஒற்று மிகுந்தால் ஒரு பொருளும் ஒற்று மிகாமல் இயல்பாக இருந்தால் ஒரு பொருளும் தரும்.

சொற்புணர்ச்சிப் பொருள் மாறுபாட்டு விளக்கம் காண்பதற்கு முன் பெயர், சொல் எனும் இரு சொற்களின் பொருள்களைக் கண்டு தொடர்வோம்.

"பெயர்" என்பது ஒரு பொருளின் அல்லது ஒரு மனிதரின் பெயரைக் குறிப்பிடப் பயன்படுத்தும் அடையாளச் சொல். உதாரணமாக: வீடு, குழந்தை என்பனபோல.

"சொல்" எனும் சொல் பெயர்ச்சொல்லாக வரும்போது, பேச்சு, வாக்கு என்பன போன்ற பொருள்களைத் தரும். அதுவே வினைச் சொல்லாக வரும்போது தெரிவி, அறிவி, குறிப்பிடு. பொதுவாக "வாயால் வெளிப்படுத்து" என்று பொருள்படும்.

உங்களை ஒருவர் உங்கள் பெயரைச் சொல்லி அழைத்தால் போதும் என நீங்கள் கருதும்போது, "நீங்கள் என்னைப் பெயர்ச்சொல்லிக் கூப்பிட்டால் போதும்" என எழுதுவதோ, பேசுவதோ தவறு.

"பெயர்சொல்லிக் கூப்பிட்டால் போதும்" எனக் குறிப்பிடுவதே சரி.

தமிழில் சொற்களை இலக்கணம் நான்கு வகையாகப் பிரித்துள்ளது. அவற்றில் ஒன்றுதான் பெயர்ச்சொல். (பெயர்ச்சொல், வினைச்சொல், இடைச்சொல், உரிச்சொல்) அதாவது, பொருளைக் குறிக்க வழங்கும் சொல்.

"தமிழில் பெயர்சொல் என்பது நால்வகைச் சொற்களில் ஒன்று" என எழுதுவது தவறு.

"தமிழில் பெயர்ச்சொல் என்பது நால்வகைச் சொற்களில் ஒன்று" என எழுதவேண்டும்.

பெயர்சொல் - பெயரைச் சொல்

பெயர்ச்சொல் - பொருள்குறிக்கும் அடையாளச்சொல்.

# வசுந்தராதேவி



வைஜயந்திமாலாவின் அம்மா. 1988இல் இறந்தார். பிரதான வேடமேற்று நடித்தது ஒரே ஒரு படம்தான் - மங்கம்மா சபதம். படம் பெரு வெற்றி. கே. ராம்நாத் என்னும் தென்னிந்திய திரைத்தொழில் நுணுக்க மேதையின் படப்பிடிப்பு, பாபநாசம் சிவனின் மணியான பாடல்கள், படத்தின் ஒலிப்பதிவு (இந்தியாவில் செய்யப்பட்டது என்று அப்போது சென்னை வந்திருந்த ஒரு அமெரிக்க குழு நம்ப மறுத்தது) இதெல்லாம் வெற்றிக்குக் காரணங்கள். கூடவே வசுந்தராவின் நடிப்பும் நடனமும் பாட்டும்.

அறிமுகமான படம் ரிஷ்ய சிருங்கர். மயக்கும் கணிகை வேடம் வசுந்தராவுக்கு. மயங்கியது ரிஷ்ய சிருங்கர் மட்டுமல்ல, படம் பார்த்த அனைவரும் மயங்கிய நிலையில்தான் இருந்ததாக பத்திரிகைகள் எழுதின.

"நாட்டியராணி" படம் வருடக்கணக்காகத் தயாரிப்பில் இருந்து வெளியிட்டு வெற்றி காணாமல் போனது. அதன்பின் 1948இல் வைஜயந்திமாலா நடிக்க வந்துவிட்டார். தொடர்ந்து தாய்-மகள் பிரிவு. பல ஆண்டுகள் கழித்து ஜெமினி தயாரித்த "இரும்புத்திரை" படத்தில் வைஜயந்திமாலாவின் அம்மாவாக சிறு வேடத்தில் நடித்தார் வசுந்தராதேவி.

# சுயநலம் விலகினால் வெகுநலம்!



சுயநல சிந்தனைகளை விட்டு வெளியே வர முதல் தேவை, "நாம் சுயநலவாதி" என்பதை ஒத்துக் கொள்வதுதான். பலவேளைகளில் "நான் சுயநலவாதியல்ல" என நம்மை நாமே ஏமாற்றிக் கொள்கிறோம்.

உதாரணமாக, நீங்கள் பொறாமைக் குணம் படைத்தவர் என வைத்துக் கொள்ளுங்கள். உங்களுக்குள் சுயநலம் ஒளிந்திருக்கிறது என்று அர்த்தம். உங்கள் நண்பரோ, விரோதியோ, சக பணியாளரோ உங்களை விடப் பெரிய பதவிகளை சட்டென அடைந்தால் உங்கள் மனதில் பொறாமை எழுகிறதா? அவர்களுடைய தகுதியை தரக்குறைவாய் விமர்சிக்கத் தோன்றுகிறதா? உஷாராகி விடுங்கள். இவையெல்லாம் சுயநலத்தின் வெளிப்பாடுகள்!

அதேபோல, கோபம், எரிச்சல், வெறுப்பு எல்லாமே சுயநலத்தின். வேறு வேறு வடிவங்களே. நாம் சக மனித கரிசனையில் நடக்கும் போது நம்மைத் தாண்டிய உலகமும் நமக்கு முன்னால் அழகாகத் தெரிகிறது.

"தனக்கென மட்டுமாய் வாழ்பவன் இறக்கும்போது தான் உலகம் பயனடைகிறது" என்கிறார் தெர்தூலியன். "பிறருக்குக் கொடுத்து வாழ்பவர்களை ஆனந்தம் நிழல் போல தொடரும், எப்போதுமே நீங்காது" என்கிறார் புத்தர். சுயநலம் துறந்தால் கர்வம் நம்மை விட்டுக் கடந்து போய்விடுகிறது!

சுயநலமற்ற அன்பு தாயன்பு போல தூய்மையானது! "அடுத்தவர்களுக்குக் கிடைக்கக் கூடாது என நாம் நினைக்கும் எதுவும் நமக்குக் கிடைக்க வேண்டும் என ஆசைப்படக் கூடாது" என்கிறார் ஸ்பினோஸா.

சுயநலமற்ற ஒவ்வோர் செயலும் இன்னொரு நபருடைய வாழ்வில் மிகப்பெரிய மாற்றத்தையும், உற்சாகத் தையும் கொண்டு வரும் அந்த செயல் பல்கிப் பெருகி பூமியை நிரப்பும்.

ஒவ்வொரு செயலைச் செய்யும் போதும், "இது எனது சுயநல எண்ணத்தின் வெளிப்பாடா?"எனும் ஒரு கேள்வியைக் கேட்டாலே போதும். உங்களுடைய செயல்களிலிருந்து சுயநலம் கொஞ்சம் கொஞ்சமாய் வெளியேறத் துவங்கும்.



**ஒரு குட்டிக் கதை:**

பார்வையிழந்த ஒரு பெண் இருந்தாள்.

அவளுக்கு தன் மீதே வெறுப்பு. உலகத்தைப் பார்க்க முடியாதே எனும் ஆதங்கம்.

அவளுடைய ஒரே ஆறுதல் அவளுடைய காதலன் தான். உயிருக்கு உயிரான காதலன். எப்போதும் அவளுடைய கரம் பிடித்து நடக்கும் காதலன்.

"எனக்கு மட்டும் பார்வை கிடைத்தால் அடுத்த நிமிடமே உன்னைக் கல்யாணம் செய்து கொள்வேன்" என அடிக்கடி அவள் நெகிழ்வாள்.

ஒருநாள் அவளுக்கு இரண்டு கண்கள் தானமாகக் கிடைக்கப் போகும் செய்தி வந்தது. ஆனந்தத்தில் குதித்தாள். காதலனைக் கட்டியணைத்து சிலிர்த்தாள். அறுவை சிகிச்சை முடிந்தது. பார்வை கிடைத்தது.

பார்வை கிடைத்த மகிழ்ச்சியில் முதன் முறையாக தனதுக் காதலனைப் பார்த்தாள்!

அதிர்ந்து போனாள்.

அவன் ஒரு பார்வையிழந்த மனிதன்.

"என்னைத் திருமணம் செய்து கொள்வாயா?" ஆனந்தப் பிரவாகத்துடன் கேட்டான் காதலன்.

காதலியோ வழக்கத்துக்கு மாறாக மௌனமானாள்.

"மன்னித்து விடு காதலா! உலகம் அழகானது. பார்வையிழந்த உன்னைத் திருமணம் செய்ய எனக்கு விருப்பமில்லை. உனக்கு ஏதேனும் உதவி தேவைப் பட்டால் சொல். செய்கிறேன்" என்று சொல்லி விட்டுப் போய்விட்டாள்.

சில நாட்களுக்குப் பின் அவளுக்கு காதலனிடமிருந்து ஒரு கடிதம் வந்தது.

"அன்பே உன்னிடம் இருக்கும் என் இரு கண்களையும் பத்திரமாய்ப் பார்த்துக் கொள்".

சுயநலமற்ற அன்பு, பிறருடைய ஆனந்தத்துக்காய் எதையும் இழக்கத் தயாராகிறது. தனது க்ண்களையே காதலிக்குப் பரிசளித்த காதலனைப் போல!

-சேவியர்-

# உலகின் நீளமான நகங்கள்



அமெரிக்காவைச் சேர்ந்த, பிரபல பாடகி கிறிஸ் வோல்ரன். இவரை நேரில் பார்ப்பவர்கள், இவரின் குரலுக்கு மயங்குவதை விட, அவரின் நீளமான நகங்களைப் பார்த்துதான், ஆச்சரியப்படுவர். 18 ஆண்டுகளாக, தன் இரண்டு கை விரல்களிலும் உள்ள நகங்களை வெட்டாமல், பராமரித்து, பாதுகாத்து வருகிறார். இவரது இடது கை விரல்களில் உள்ள நகங்களின் நீளம் 10 அடி, இரண்டு அங்குலம். வலது கை விரல்களில் உள்ள நகங்கள் ஒன்பது அடி, ஏழு அங்குலம்.

ஆரம்பத்தில், ரசிகர்களை கவர்வதற்காக, நீளமான நகங்களை வளர்க்க துவங்கிய கிறிஸ் வோல்ரனுக்கு, இதன்பின் நகங்களை பராமரித்து வளர்ப்பதே முழு நேரப் பணியாகி விட்டது. உலகின் மிக நீளமான நகங்களைக் கொண்ட பெண் என்ற சாதனைக்காக, கின்னஸ் புத்தகத்தில் இவரது பெயர் சமீபத்தில் இடம் பெற்றுள்ளது.

இவரது நகங்கள் பாம்பு போல் சுருள், சுருளாக வளர்ந்திருந்தாலும், அதை தன் உயிரை விட மேலாக பாதுகாத்து வருகிறார். நீளமான நகங்கள் இருந்தாலும், சாப்பிடுவது, பியானோ வாசிப்பது, லப்டொப் பயன்படுத்துவது போன்ற விஷயங்களை மற்றவர்களைப் போல், மிகவும் சாதாரணமாக செய்து வருகிறார்.

**கனடாவிலிருந்த கடிதம்**

## தமிழர் இறைமையை விற்றவர்கள் தமிழரசுக் கட்சியினரே!

1970இல் பதவிக்கு வந்த ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க, இலங்கையைக் குடியரசாக்குவதற்காக கொழும்பு றோயல் கல்லூரியில் அமைந்துள்ள நவரங்கலா மண்டபத்தில் நாடாளுமன்றத்தை அரசியல் நிர்ணயசபையாக மாற்றி முதலாவது பிரேரணையாக (1970மே - 22க்கு பிறகு)

"THE OFFICIAL NAME OF THE COUNTRY WAS CHANGED TO "FREE, SOVERING AND INDEPENDENT REPUBLIC OF SRI-LANKA"

அதாவது இலங்கை, சுதந்திரமான, இறைமையுள்ள குடியரசாக இருக்கும் என்ற பிரேரணையைப் பிரேரித்தார். (இதை நீங்கள் 1970ஆம் ஆண்டின் மேமாதம் HANSARDஇல் பார்க்கலாம்).

இப்பிரேரணையைத் தமிழரசுக் கட்சியின் சார்பில் கோப்பாய் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த கதிரவேற்பிள்ளை அவர்கள் ஆதரித்துப் பேசி வழிமொழிந்தார்.

அக்காலத்தில் நாடாளுமன்றத்திற்குத் தெரிவுசெய்யப்பட்டிருந்த தமிழரசுக்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் யாவரும் தந்தை செல்வா உட்பட சகலரும் தமது இரு கரங்களையும் உயர்த்தி வாய்மூலம் இலங்கை பூரண இறைமையுள்ள சுதந்திரமான குடியரசாக இருக்கும் என்ற தீர்மானத்திற்கு ஆதரவாக வாக்களித்தனர் என்பதே வரலாறாகும்.

கடந்த காலங்களில் ஆட்சிக்கு வந்த அரசுகள் தமிழ் இனத்தாருக்கு இழைத்த அனர்த்தங்கள், மலையக மக்களின் குடியுரிமை பறிக்கப்பட்டமை, சிங்கள மொழி ஆட்சி மொழியாக்கப்பட்டமை, பௌத்தம் அரச மதமாக்கப்பட்டமை, சிங்கள குடியேற்றத்திட்டங்கள், சகல துறைகளிலும் தமிழினம் இரண்டாம் தரப் பிரஜைகள் ஆக்கப்பட்ட வரலாற்றை மறந்து, பிரித்தானியாவோடிருந்த கடைசித்தொடர்பையும் துண்டித்து, முழு நாட்டின் ஆட்சி அதிகாரத்தையும், நாட்டின் முழு நிலப்பரப்பின் இறைமையையும் தமதாக்கிக்கொண்ட குடியரசு தீர்மானமான பூரண இறைமையுள்ள சுதந்திரக்குடியரசாக இருக்கும் என்ற தீர்மானத்திற்கு ஆதரவாக வாக்களித்து, தமிழர் இறைமையை தாரைவார்த்தவர்கள் தமிழரசுக்கட்சியினரும், அதன் தலைவர் தந்தை செல்வாவும் என்பதே தமிழினத்தின் துரோக வரலாறாகும்.

இதை இங்கு ஏன் குறிப்பிட்டுக் காட்டுகிறேன் என்றால் ஒவ்வொரு தேர்தலிலும் சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் இறைமையைப் பெறுவோம் என்று தமிழரசுக்கட்சியினர் தமது தேர்தல் அறிக்கையில் குறிப்பிடுகின்றார்கள். ஆனால் ஏற்கனவே இறைமையை விற்றவர்களே தமிழரசுக்கட்சியினர் என்பதே தமிழினத்தின் கறைபடிந்த நிகழ்வாகும்.

எனவே தாங்கள் May 1970-1972ஆம் ஆண்டு அரசியல் நிர்ணய சபை விவாத புத்தகத்தை (HANSARD) எடுத்து முதலாவது தீர்மானத்தை அப்படியே Photo copy எடுத்து, பிரேரணை, வழிமொழிந்தவர் பேசிய பேச்சின் விபரம், இப்பிரேரணையை ஆதரித்து வாக்களித்த தமிழரசுக்கட்சி உறுப்பினர்கள். பெயர்கள், (அப்பொழுது திரு. ஆனந்தசங்கரியும் ஆதரவாக வாக்களித்திருந்தார்) சகலரது பெயர்களையும் Photo copy எடுத்து ஹன்சாட்டுடன் பக்கங்களையும், திகதியையும் குறிப்பிட்டு பிரதி எடுக்கவும்.

பின்பு அப்படியே அதைப் பிரசுரித்து, தமிழர் இறைமையை விற்றவர்கள் தமிழரசுக்கட்சியினரே என்பதை இன்றைய தமிழர்களுக்கு அறியத்தாருங்கள்.

**வரதராசா,**
**கனடா**

# ஹோண்டாவின் கதை



மோட்டார் சைக்கிள் உற்பத்தியிலும், விற்பனையிலும், ஒரு காலத்தில் இங்கிலாந்து தான் பெரிய ஆளாக இருந்தது. 50 வருடங்களுக்கு முன், இங்கிலாந்தில் நடந்த மோட்டார் சைக்கிள் பந்தயத்தில், ஜப்பரனில் உற்பத்தி செய்யப்பட்ட ஹோண்டா வண்டிகள் கலந்து கொண்டன...

அப்போது, "ஜப்பான்காரனுக்கு, ரிக்ஷா செய்யத் தெரியும், மோட்டார் சைக்கிளுமா செய்யத் தெரியும்?" என்று கேலி செய்தது இங்கிலாந்து.

ஆனால், அடுத்த இரண்டாண்டுகளிலேயே, 10 பந்தயங்களில் ஹோண்டா தான் வெற்றி பெற்றது. "மோட்டார் சைக்கிள் உற்பத்தியின் ரகசியங்களை, ஹோண்டா கம்பெனிக்காரர்களிடம், பிரிட்டிஷ்காரர்கள் கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டும்..." என்று எழுதியிருந்தது இங்கிலாந்தின் "டெய்லி மிரர்" பத்திரிகை.

"ஹோண்டா" என்பது அந்த மோட்டார் சைக்கிள் கம்பெனியை ஆரம்பித்தவரின் பெயர். அவர் ஒரு சாதாரண இரும்புக் கொல்லரின் மகன். பள்ளிப்படிப்பை விட்டு விட்டு, தொழிலில் இறங்கினார். 27ஆவது வயதில் சொந்தத்தில் ஒரு பட்டறை வைத்துக் கொண்டார்.

அவர் செய்த கருவியெல்லாம் சரியாக வேலை செய்யவில்லை. "அதற்கெல்லாம் படிப்பு வேண்டும் இல்லாவிட்டால் முடியாது..." என்றனர்.

அதனால், பகலெல்லாம் பட்டறையில் உழைத்து, இரவில் முறைப்படி படித்தார். பின்னாளில், இங்கிலாந்துக்கே பாடம் சொல்லிக் கொடுக்கும் நிலைக்கு உயர்ந்தார்.



# உயிர்

ஒற்றை விரலால் மெல்ல
அழுத்தி அழுத்தி
காலொடித்து கையொடித்து
தலை நசுக்கி
உடல் பிதுக்கி
கொன்றிருக்க அவசியமில்லை...

என் மேலேயே எனக்கு
வெறுப்புத்தான் வருகிறது...
ஒரு நொடியில்
தரையோடு அழுந்தத் தேய்த்து
கொன்றிருக்கலாம்...
இல்லையேல்
பேசாமல் போகட்டும் என்று
விட்டிருக்கலாம்...


கால் கிழிசலில்
இரத்தம் குடித்து
உயிருக்குள் ஊசி நுழைத்து
சித்ரவதை செய்வது
சரியல்லவென்று
மற்றதை அது
கடிந்திருக்கக் கூடுமென்றும்
இப்பொழுது தோன்றுகிறது...

எறும்பானாலும்
அதுவும் உயிர்.

- அலெக்ஸ் -

# மத்திய அரசால் ஒதுக்கப்பட்ட நிதி மக்களைச் சென்றடையவில்லை

## பிரதமர் குற்றச்சாட்டு



(டில்லி)

உத்தரகண்ட் மாநில பா.ஜ. அரசு வளர்ச்சித் திட்டங்களை நிறைவேற்றுவதில் தீவிரமாக செயற்படவில்லை. மத்திய அரசு சார்பில் ஒதுககப்பட்ட நிதியையும் முறையாக பயன்படுத்தத் தவறிவிட்டது எனப் பிரதமர் மன்மோகன் சிங் குற்றஞ்சாட்டியுள்ளார்.

உத்தரகண்ட் மாநில சட்டசபைத் தேர்தல் எதிர்வரும் 30 ஆம் திகதி நடக்கிறது. பிரசாரம் சூடு பிடித்துள்ள நிலையில், காங்கிரஸ் வேட்பாளர்களை ஆதரித்து பிரதமர் மன்மோகன் சிங் பல்வேறு இடங்களில் பிரசாரம் செய்தார்.

ருத்ரபூர் என்ற இடத்தில் நடந்த பிரசாரக் கூட்டத்தில் அவர் பேசியதாவது,


உத்தரகண்டில், பா.ஜ. ஆட்சி நடக்கிறது. வளர்ச்சித் திட்டங்களை செயற்படுத்துவதில் பா.ஜ. அரசு ஆர்வம் காட்டவில்லை. அப்படி ஆர்வம் காட்டியிருந்தால், அனைத்துத் துறைகளிலும் வளர்ச்சி பெற்ற மாநிலமாக, உத்தரகண்ட் மாறி இருக்கும். பொதுமக்களும் பெரியளவில் பயன் அடைந்திருப்பர்.

மாநிலத்தில், காங்கிரஸ் ஆட்சியில் இருந்த போது தொழிற்துறை, தகவல் தொழில்நுட்பத் துறை, மின்சாரத் துறை ஆகியவற்றில், குறிப்படத் தக்க அளவில் வளர்ச்சி ஏற்பட்டது. பா.ஜ. ஆட்சிக்கு வந்தபின், இந்த வளர்ச்சி முழுவதும் தடைப்பட்டுவிட்டது.

வளர்ச்சித் திட்டங்களை செயற்படுத்துவதற்காக, மத்திய அரசு சார்பில் ஒதுக்கப்பட்ட நிதியையும் மாநில அரசு முறையாகப் பயன்படுத்தவில்லை.

குறிப்பாக பெண்கள், பழங்குடியினர், சிறுபான்மையினர் முன்னேற்றத் திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்ட நிதி முறையாகப் பயன்படுத்தப்படவில்லை.

காங்கிரஸ் ஆட்சிக்கு வந்தால், மாநிலத்தில் வறுமை ஒழிக்கப்படும். சுகாதாரம், பொருளாதார முன்னேற்றம், கல்வி ஆகியவற்றுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படும் என்றார்.



மத நல்லிணக்கத்தை வலியுறுத்தி கோத்ராவில் உண்ணாவிரதம் இருந்த குஜராத் முதல்வர் நரேந்திர மோடியை முஸ்லிம்கள் சந்தித்து வாழ்த்துத் தெரிவித்துள்ளனர்.

# பா.ஜ.க வேட்பாளர்களை ஆதரித்து ஹேமமாலினி தேர்தல் பிரசாரம்



(மணிப்பூர்)

இந்திய மாநிலமான மணிப்பூரில் பா.ஜ.க வேட்பாளர்களை ஆதரித்து முன்னாள் நடிகையும் எம்.பி.யுமான ஹேமமாலினி கடும் பிரசாரத்தில் ஈடுபட்டுள்ளார்.

அவருக்கு அங்கே உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது. 60 உறுப்பினர் சட்டசபைக்கு நடைபெறும் தேர்தலில் பா.ஜ.க 19 தொகுதிகளில் போட்டியிடு கிறது.

மணிப்பூரில் தற்போது காங்கிரஸ் ஆட்சி நடைபெற்று வருகிறது. காங்கிரஸுக்கு எதிராக, மணிப்பூர் மக்கள் கட்சி, தேசியவாத காங்கிரஸ், ஐக்கிய ஜனதாதளம், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட், ராஷ்டீரிய ஜனதாதளம், மக்கள் ஜனநாயக முன்னணி ஆகிய கட்சிகள் ஓரணியில் திரண்டுள்ளன. வழக்கம்போல் பா.ஜ.க தனித்துப் போட்டியிடுகிறது.

மணிப்பூரில் பா.ஜ.க வேட்பாளர்களை ஆதரித்து ஹேமமாலினி தேர்தல் பிரசாரம் மேற்கொண்டார்.

தவுபாலில் தேர்தல் பிரசார பொதுக் கூட்டத்துக்கு வந்திருந்த ஹேமமாலினியைக் காண ஏராளமானோர் திரண்டிருந்தனர்.

# தமிழக ரயில்வேத் திட்டத்திற்கு நிதி ஒதுக்குமாறு சோனியாவிடம் மனு

(சென்னை)

தமிழக ரயில்வேத் திட்டங்களுக்கு போதிய அளவில் நிதி ஒதுக்கீட்டை, வரும் ரயில்வே வரவு செலவுத் திட்டத்தில் செய்திட வேண்டுமென, தி.மு.க. வலியுறுத்தியுள்ளது.

இது தொடர்பாக, ஐக்கிய முற்போக்கு கூட்டணித் தலைவர் சோனியாவை நேரில் சந்தித்து கோரிக்கை மனு அளிக்கப்பட்டுள்ளது.

இந்த ஆண்டுக்கான ரயில்வே செலவுத் திட்டத் தயாரிப்புப் பணிகள், டில்லியில் மும்முரமாக நடைபெற்று வருகின்றன. இந்நிலையில் தமிழக ரயில்வேத் திட்டங்களுக்கு நிதி ஒதுக்கீடு திருப்திகரமாக இருக்க வேண்டுமென தி.மு.க. வலியுறுத்தத் தொடங்கியுள்ளது.

இது தொடர்பாக காங்கிரஸ் தலைவர் சோனியாவை, அவரது இல்லத்தில் தி.மு.க. தலைவர் டி.ஆர்.பாலு நேரில் சந்தித்துப் பேசினார். அப்போது, சோனியா வ்டம் ஒரு கோரிக்கை மனுவைக் கைளித்தார் .

அதில் தமிழகத்தில் ஐந்து புதிய ரயில் பாதைத் திட்டங்களுக்கு ஏற்கனவே உள்ள எட்டு திட்டங்களுக்கும் நிதி ஒதுக்கீடு அளிக்கும்படி கோரிக்கை வைக்கப்பட்டுள்ளது.


# பஞ்சாப் மாநிலத்தில் பா.ஜ.க. ஆட்சி இழக்கும்

## இந்தியா டுடே கருத்துக் கணிப்பு

(அமிர்தசரஸ்)


நடக்கவிருக்கும் சட்டசபைத் தேர்தலில் பஞ்சாப் மாநிலத்தில் பா.ஜ. தலைமையிலான கூட்டணி ஆட்சியை இழக்கும் அபாயம் உள்ளதாகவும், வளர்ச்சிப் பணிகள் சரிவர எதுவும் நடக்கவில்லை என்பது வாக்காளர்கள் மத்தியில் அதிருப்தி இருப்பதாகவும், இங்கு காங்கிரஸ் கட்சிக்கு கடந்த தேர்தலை விட கூடுதல் இடம் கிடைக்கும் என்றும் இந்தியா டுடே நடத்திய கருத்துக்கணிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக ஊழலுக்கு எதிராக குரல் கொடுக்கும் அன்னா ஹசாரேயின் கருத்தை ஏற்று வாக்களிப்பீர்களா என்று கேட்டதற்கு அவ்வாறு செய்ய மாட்டோம். இதனை ஏற்கப்போவதில்லை என்றும் 46 சதவீதத்தினர் கருத்துக் கூறியுள்ளனர்.




# சல்மான் ருஷ்டியின் இந்திய வருகை ரத்து

(சென்னை)



உயிருக்கு அச்சுறுத்தல் இருப்பதால் சர்ச்சைக்குரிய எழுத்தாளர் சல்மான் ருஷ்டியின் இந்திய வருகை ரத்துச் செய்யப்பட்டது.

இந்தியாவின் பிரபல ஆங்கில நாவல் எழுத்தாளரும், புக்கர் பரிசு வென்றவருமான சல்மான் ருஷ்டி தான் எழுதிய 'சாத்தானின் கவிதைகள்' என்ற புத்தகத்தில் இஸ்லாமிய மதத்திற்கு புறம்பான கருத்துக்களை எழுதியதால் சர்ச்சைக்கு ஆளானார்.

இந்நிலையில் நேற்றுமுன்தினம் ராஜஸ்தான் தலைநகர் ஜெய்ப்பூரில் நடக்கும் இலக்கிய விழாவில் அவர் பங்கேற்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது. இதற்கு தாருல் உலூம் தேவ்பந்த் போன்ற இஸ்லாமிய அமைப்புகள் கடும் எதிர்ப்புத் தெரிவித்திருந்தன.

மேலும் தனது உயிருக்கு அச்சுறுத்தல் இருப்பதாக மகாராஷ்டிரம் மற்றும் ராஜஸ்தான் உளவுத்துறை தெரிவித்ததையடுத்து தான் இந்தியாவுக்கு வரவில்லை என்று ருஷ்டி ஓர் அறிக்கை மூலம் தெரிவித்திருக்கிறார்.

இந்த அறிக்கையை விழா ஏற்பாட்டாளர் சஞ்சய் கே.ராய் செய்தியாளர்களிடம் நேற்று முன்தினம் வாசித்தார்.

மும்பையிலிருந்து ஜெய்ப்பூர் வரும் வழியில் தம்மைக் கொல்வதற்கு நிழலுலக தாதாக்கள் மூலம் கூலிப்படையினர் நியமிக்கப்பட்டிருப்பதாக உளவுத் தகவல்கள் வந்திருப்பதாகவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதனிடையே வெளிநாட்டில் இருந்தபடியே வீடியோ கான்பரன்ஸிங் மூலமாக விழாவில் பங்கேற்க இருப்பதாக தனது டுவிட்டர் பக்கத்தில் ருஷ்டி பதிவு செய்திருக்கிறார்.

# அரசியல் சமூகமும் சிவில் சமூகமும்

(14ம் பக்கத் தொடர்ச்சி...)

ஆனால் இப் பத்தி சிவில் சமூகத்தை அரசில் உள்ளடங்காத பகுதியாகவே நோக்குகிறது.

சிவில் சமூகம் செழிப்பாக இருக்க வேண்டுமாயின் இயங்குவதற்கு போதிய வெளியும் சுதந்திரமும் இருக்க வேண்டும்.

இதனால்தான் ஜனநாயக நாடுகளின் சிவில் சமூகம் வீச்சுக் கொண்டதாகவும் சர்வாதிகார நாடுகளில் சிவில் சமூகம் சேடமிழுப்பவையாகவும் அமையக் காணப்படுகின்றன.

அரசியல் சமூகத்தின் ஆளுகைக்குள் சிவில் சமூகம் சிக்கிக் கொள்ளும்போது - இது விருப்பத்தின் பேராலோ அல்லது அழுத்தத்தின் பேராலோ எந்தவகையிலாவது நிகழும்போது அங்கு அரசியல் சமூகத்தின் மேலாண்மை சிவில் சமூகத்தின்மீது நிறுவப்பட்டு விடுகிறது.

இத்தகைய தருணங்களில் சிவில் சமூகத்தின் தனித்துவமான குரல் அடங்கி அரசியல் சமூகத்தின் குரலாகவே சிவில் சமூகத்தின் குரலும் ஒலிக்கத் தொடங்கிவிடுகிறது.

இத்தகைய ஒரு நிலையே தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் வளர்ச்சிப்போக்கில் ஏற்பட்டது. 1990 களுக்குப் பிந்திய காலகட்டத்தில் விடுதலைப்புலிகள் அமைப்பு ஈழத் தமிழர் தேசத்தின் அரசியல் சமூகத்தின் தலைமைப் பாத்திரத்தை எடுத்துக் கொண்டது.

ஈழத் தமிழர் தேசத்தின் சிவில் சமூகமும் - விருப்பத்திலோ அல்லது அழுத்தத்திலோ - விடுதலைப்புலிகளின் ஆளுகைக்கு உள்ளாகி விடுதலைப்புலிகள் அமைப்புடன் ஒத்து இயங்கியது.


இந்த ஆளுகைக்குள் உள்ளாக விரும்பாத சிவில் சமூகத்தின் பகுதி தன்னை பெரிதும் அமைதியாக்கிக் கொண்டது. (விடுதலைப் புலிகளுக்கு ஈழத் தமிழர் சமூகத்தின் மத்தியில் எதிர்ப்பே இருக்கவில்லை என்ற அர்த்தத்தில் இக் கருத்து இங்கு பதியப்படவில்லை. ஒரு பெரிய சட்டகத்தில் விடயங்களைப் பொருத்தி ஆராய்வதற்காக பிரதான போக்கே இங்கு குறிப்பிடப்படுகிறது)

அதனால் விடுதலைப்புலிகள் காலத்தில் சிவில் - அரசியல் சமூக மோதுகை நடைபெறுவதற்கான சூழல் இருக்கவில்லை. சிவில் சமூகத்தின் அழுத்தமும் அரசியல் சமூகத்தின் மீது விழவில்லை.

இந்த நிலைமை ஈழத் தமிழர் தேசத்துக்கு நன்மையினைத் தந்ததா என்பது இன்று நாம் எழுப்ப வேண்டிய ஒரு முக்கியமான ஒரு கேள்வி.

# அணு உலைகளின் ஆயுள்காலத்தை அதிகரிக்க ஜப்பான் முடிவு

உலகச் செய்திகள்



ஜப்பானில் உள்ள அணு உலைகளின் ஆயுட்காலத்தை 40 ஆண்டுகளிலிருந்து 60 ஆண்டுகளாக உயர்த்த அரசு திட்டமிட்டுள்ளது.

ஜப்பானில் ஏற்பட்ட சுனாமிப் பேரலைக்கு பின் புகுஷிமா அணுமின் நிலையம் பாதிக்கப்பட்டது. இதனால் உலகம் முழுவதும் அணு உலைகளின் பாதுகாப்புகளை பலப்படுத்த சர்வதேச அணு சக்தி கழகம் அறிவுறுத்தியது.

சுனாமியால் அணு மின் நிலையம் பாதிக்கப்பட்டதால் ஜப்பானிலும், வேறு பல நாடுகளிலும், அணு மின் நிலையங்களை மூடப்போவதாக சில வெளிநாட்டு அணு எதிர்ப்புக் குழுக்கள் வதந்தி பரப்பின.

ஆனால் அவை வதந்திதான் என்பதற்கு உதாரணமாக தன் அணுமின் நிலையங்களின் செயற்பாடுகளை ஜப்பான் மேலும் அதிகப்படுத்துகிறது.

மேலும் அணுமின் நிலையங்களின் ஆயுட்காலத்தையும் அதிகரிக்க ஜப்பான் முடிவெடுத்துள்ளது. தற்போது அங்குள்ள அணுமின் நிலையங்களுக்கு 40 ஆண்டுகள் மட்டுமே ஆயுட்காலம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

ஆனால் தற்போதைய மின்சார தேவையைக் கருத்தில் கொண்டு அணுஉலைகளின் ஆயுட்காலத்தை 60 ஆண்டுகளாக உயர்த்த அந்நாட்டு அரசு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. இதற்கான மசோதாவை ஜப்பான் நாடாளுமன்றத்தில் விரைவில் தாக்கல் செய்ய உள்ளதாகவும், அணு உலை தொடர்பான அரசின் நிலைப்பாட்டில் எந்த மாறுபாடும் இல்லையென்றும் ஜப்பான் அமைச்சரவைச் செயலர் ஒசமு புஜிமோரா தெரிவித்துள்ளார்.

# அமெரிக்காவுடன் நட்பைச் சீராக்க பாதையைத் திறக்கிறது பாகிஸ்தான்



நேட்டோ படைகளின் வசதிகருதி மூடப்பட்டுள்ள பாகிஸ்தான் - ஆப்கானிஸ்தான் சாலையை மீண்டும் திறக்க பாகிஸ்தான் முடிவு செய்துள்ளது.

ஆப்கானிஸ்தான் எல்லையில் நேட்டோ படைக்கள் நடத்திய தாக்குதலில் பாகிஸ்தான் நாட்டைச் சேர்ந்த 24 இராணுவ வீரர்கள் கொல்லப்பட்டனர்.

இதனால் கோபமடைந்த பாகிஸ்தான் அப்பாதையை மூடிவிட்டது. இப்பாதை மூலமாக பாகிஸ்தான் நாட்டின் பல பகுதிகளில் இருந்தும் உணவு, எண்ணெய், எரிபொருள் உட்பட பல அத்தியாவசியப் பொருட்கள் வாகனங்களில் ஆப்கானிஸ்தானுக்கு கொண்டு செல்லப்பட்டு வந்தன.

இந்த பாதை மூடப்பட்டதால் போக்குவரத்தும் நிறுத்தப்பட்டது, ஆப்கான் நாட்டில் உள்ள படை வீரர்களுக்குத் தேவைப்படும் மூன்றில் ஒரு பகுதி பொருட்கள் கொண்டு செல்வதும் தடைபட்டது.

இதனால் அமெரிக்காவுடனான நட்பு சீர்குலைய தொடங்கியதால் இதைத்தடுக்கும். விதமாக மூடப்பட்ட பாதையை மீண்டும் திறக்க பாகிஸ்தான் முனைப்புக் காட்டி வருகிறது.

மீண்டும் பாதை திறக்கப்பட்டாலும் கூட உடனடியாக வாகன போக்குவரத்து நடைபெறாது. படிப்படியாகவே தொடங்கும். வாகனப் போக்குவரத்து அனைத்தும் சோதனைச் சாவடிகள் வழியாகவே நடைபெறும். அப்பாதையை எப்போது திறப்பது என்பது குறித்த திகதி இன்னும் முடிவாகவில்லை.

# அமெரிக்காவில் மூடும் நிலையில் பிரபல "கொடேக்" நிறுவனம்

உலகப் புகழ் பெற்ற கொடேக்(Kotak) புகைப் படக் கருவி நிறுவனம் தொடர்ந்து நஷ்டத்தைச் சந்தித்து வருவதால் மூடுவதற்கான அறிவித்தலைச் சமர்ப்பித்துள்ளது.

அமெரிக்காவின் கொடேக் நிறுவனம் புகைப் படக் கருவி(Camera) மற்றும் படச் சுருள் (Film Role) ஆகியவற்றில் உலகப் புகழ் பெற்றது.

நூற்றாண்டுகளுக்கும் மேல் பழமை வாய்ந்த இந்த நிறுவனம் மோசமான நிர்வாகம், போட்டியாளர்களைச் சமாளிக்க முடியாதது போன்ற காரணங்களால், கடந்த 2003ஆம் ஆண்டு முதல் சிறிது சிறிதாக நட்டமடைந்து கொண்டே வந்தது.

ஆதலால் இதுவரை தனது 13 படச்சுருள் மற்றும் புகைப்படக் கருவி தயாரிப்பு நிலையங்களை மூடிய இந்நிறுவனம் 47 ஆயிரம் ஊழியர்களையும் வீட்டுக்கு அனுப்பியது.

இந்நிலையில் இந்நிறுவனம் அமெரிக்க அரசிடம் மூடுவதற்கான அறிவித்தலை (சாப்டர் 11) சமர்ப்பித்துள்ளது. இதன் மூலம் நிறுவனங்கள் தனிநபர்களிடம் வாங்கிய கடனை இந்நிறுவனம் சிறிது கால அவகாசம் எடுத்துக் கொண்டு மெல்ல மெல்ல செலுத்தும்.




இந்த மூடும் அறிவித்தலை அமெரிக்காவில் இயங்கும் வர்த்தகத்திற்கு மட்டுமே என கொடேக் ஆசியா பிரிவின் சந்தைப்படுத்தல் துணைத் தலைவர் பி.என்.ரகுவீர் தெரிவித்துள்ளார்.

# நைஜீரியாவில் குண்டு வெடிப்பு; எட்டுப்பேர் பலி



(கனோ)

நைஜீரியாவின் கனோ நகரத்தில் நடநத தொடா குண்டுவெடிப்பு மற்றும் துப்பாக்கிச் சண்டையில் 8 பேர் பலியாகியுள்ளனர்.

இது அந்நாட்டின் இரண்டாவது பெரிய நகரமாகும். மேலும் இங்குள்ள பொலிஸ் அலுவலகம் ஒன்றின்மீதும் தற்கொலைப்படைத் தாக்குதல் நடத்தப்பட்டது.

தொடர்ச்சியாக அப்பகுதியில் 20க்கும் மேற்பட்ட குண்டுவெடிப்புச் சம்பவங்கள் நிகழ்ந்ததில் 8 பேர் பலியாகியுள்ளனர்.

# பதிவிறக்கப் பெட்டகம்

நாம் நமது மனதின் உள்ளிருக்கும் எண்ணங்களை மறைப்பதற்கு மறுக்கும்போது சமூகம் நம்மைப் பார்த்துப் பயப்படுகிறது. விலக்கி வைக்கிறது. இப்படி அந்நியமாகிவிடும் கொடுமையிலிருந்து தப்பித்துக் கொள்ள, வாழ்தல் என்பது அந்தந்த நேரத்தில் சொல்லப் பாதகமில்லாதவற்றை மட்டுமே உரத்துச் சொல்லுதல் என்றாகிறது. இவையெல்லாம் பாதுகாப்பற்ற வாழ்க்கை கற்றுத்தரும் பாடங்கள். **– பிரபஞ்சன்**

நம் எழுத்தாளர்களுக்கு எப்போதும் அந்தரங்க ஆசை ஒன்றாகவும் வெளிவாழ்வு மற்றொன்றாகவும் இருக்கிறது. **– சுந்தர ராமசாமி**

சகல கீழ்மைகளையும் பொத்திப் பொத்தி வைத்துக்கொண்டு அச்சத்தில் பெருமை பேசும் மனோபாவமே நம்மிடம் உறைந்து கிடக்கிறது. உள்ளும் புறமும் வெவ்வேறு மனிதர்களாக நாம் காலம் தள்ளிக் கொண்டிருக்கிறோம். **– கவிதாசரண்**

தான் செய்த வேலையைத் தமுக்கடித்துக் கொண்டு திரிகிறவனையும், அரசியலில் எகிறிக் குதிப்பவனையும் வானத்தில் உயர்த்திப் போற்றுகிறவர்களாக நாம் ஆகிவிட்டோம். ஆனால் வாய் திறவாது செயலாற்றுபவர்களை நாம் கவனிப்பதில்லை. **– காந்தி**

வெளியே வழக்கம் போல் புத்தக விழாவுக்கு சம்பந்தமே இல்லாமல் ஒரு பொதுக் கூட்டம் நடந்து கொண்டிருந்தது. தமிழில் இல்லாதது எதுவுமே இல்லை; உலகில் தோன்றிய முதல் மனித இனமே தமிழ் இனம்தான் என்று ஒருவர் கரகர குரலில் பேசிக் கொண்டிருந்தார். பார்வையாளர்களும் உற்சாகமாகக் கைதட்டி மகிழ்ந்தனர். தமிழர்களுக்கு இருக்கும் நகைச்சுவை உணர்வுக்கு ஈடு இணையே இல்லை. **– சாரு நிவேதிதா**

மனித மனமே சிறிதும் நம்பிக்கைக்குகந்தது இல்லை. பல வருடங்களை இருந்த சுவடே தெரியாமல் பிரக்ஞையிலிருந்து அழித்துவிட்டிருக்கும். ஏதோ ஐந்து நிமிடங்களை அநாதிகால நீடிப்புப் போல அணு அணுவாக நினைவின் மேல்தளத்தில் வைத்திருக்கும். அதனுடைய கடிகாரமும் கலண்டரும் தனி. ஒருவேளை அதெல்லாம் அதற்குக் கிடையாதோ என்னவோ! **– அசோகமித்திரன்**

விசித்திர அபிப்பிராயங்கள் ஒளிந்துகிடக்கும் இடங்களை யாரறிய முடியும்? **– புதுமைப்பித்தன்**

சரித்திரத்திற்கு விளைவுகளைத்தான் புரிந்துகொள்ள முடியும். எப்படி அந்த விளைவுகள் நிகழ்ந்தன என்பது அதன் உணர்வுக்கு அப்பாற்பட்டது. **– சிங்செள**

அற்புதமானது என்பது காலப்போக்கில் புதுமை இழந்து அழிந்து விடுகிறது. சர்வசாதாரணமானது பிறக்கும்போதே மறையத் தொடங்கி விடுகிறது. ஆனால் சராசரியானது வெவ்வேறு சிறு மாற்றங்களுடன் நீடித்து நிலைத்து விடுகிறது. **– ஃபோக்னர்**

மக்கள் ரசனை என்பது ஒரு பூதம் போல. பூதத்தைத் திருப்திப்படுத்தினால் நாம் மகத்தான வெற்றி அடைவோம். ஆனால் அந்தப் பூதத்திற்கு எதை அளித்தால் அது திருப்தி அடையும் என்பதை நம்மால் கணிக்கவே முடியாது. இதில் இன்னொரு வேடிக்கை என்னவென்றால், தனக்கு எது அளிக்கப்பட்டால் தனக்குத் திருப்தி கிடைக்கும் என்பதை அந்த பூதமே அறிந்திருக்கவில்லை. **– திரைப்பட இயக்குனர் ஃபெலினி**

கலைஞன் குகையில் வாழ்பவன். ஆனால் மக்கள் தன்னை குகைக்குள் வந்து சந்திக்க வேண்டும் என்று விரும்புபவன். **– சிங்ளேர்**

நாம் தீவிரமாய் விரும்பியதைப் பெறும் தைரியம் பெறுவதில்லை ஏன்? பெற்ற பின்பு அது முன்புபோல் மதிப்பிற்குரியதாய் இருக்காது என்ற பயமா? **– அவஸ்தை நாவலில்**

நான் யாரும் யாருக்காகவும் அனுதாபப்படக் கூடாது என்கிறவன். பணம் பண்ணுகிறவர்களுக்கும், மக்களின் நன் மதிப்பை விரும்புகிறவர்களுக்கும் அனுதாபம் தேவை. ஆழமான உறவுகளுக்கு அனுதாபம் இடைஞ்சல் தரும். **– யு.ஆர்.அனந்தமூர்த்தி**

இலட்சியங்கள் ஒரு மனிதனுக்கு ஒரு வயது வரைக்குந்தான அர்த்தமுள்ளவையாக இருக்கும். பிறகு அந்த இலட்சியங்களை அவன் கொண்டிருந்தான் என்ற காரணத்தால், ஊதியத்தை எதிர்பார்ப்பதுதான் மனித இயல்பு. **– இ.பா. (அக்னி நாவலில்)**

பூமி உருண்டை என்பதையும், சின்னக் காயமானாலும் அழுகவிட்டால் அபாயம் என்பதையும், பாம்பு கடித்தால் விஷம் என்பதையும் நாம் ஒவ்வொருவரும் தனித்தனியே பரிசோதித்துப் பார்த்துத்தான் தெரிந்துகொள்ள வேண்டுமென்பதில்லை; அது விபரீதமானதும் கூட. **– ஆதவன்**

# நாடாளுமன்ற தெரிவுக்குழுவில் கூட்டமைப்பு ஏன் பங்குபெற வேண்டும்?

தமிழ் சமூகத்தைப் பொறுத்த வரையிலும், பேச்சுவார்த்தை என்று ஆனபிறகு தாங்கள் கேட்பது அனைத்துமே கிடைக்கவேண்டும் என்று அதன் தலைமை எதிர்பார்ப்பது தவறான அணுகுமுறை. இதுவே விடுதலைப் புலிகள் இயக்கத்தின் அணுகுமுறையாக இருந்தது. தற்போது இனப்போர் ஒரு முடிவிற்கு வந்தபின்னர், கூட்டணியின் தந்திரோபாயமும் அதனோடு ஒட்டியே உள்ளது. இது நல்லதொரு முடிவிற்கு கட்டியம் கூறும் வழிமுறை அல்ல.

ஏதோ, இனப்போரின் கடைசிக் காலகட்டத்தில் இந்தியா வாளாவிருந்ததாகவும், அல்லது இலங்கை அரசோடு கைகோர்த்து இருந்ததாகவும் போன்ற பிரசாரம் இன்றளவும் செய்யப்பட்டு வருகின்றது. ஒவ்வொரு முறையும் போரைத்தொடங்கும் போது விடுதலைப் புலிகள் இயக்கம் இந்தியாவைக்கலந்து ஆலோசிக்கவில்லை. இந்திய அரசிடம் போர் தொடங்குவது குறித்து முன்னறிவிப்பு எதுவும் கொடுத்ததும் இல்லை. ஆனால், போரில் தோல்வியை தழுவும் காலகட்டத்தில் மட்டும் இந்தியா திடீரென்று அவர்களது நினைவிற்கு வந்துவிடுவதுண்டு. அதுவும் ஒரு 'தமிழினத் துரோகி' என்ற பிரசார உத்தியின் ஒருபகுதியாக மட்டுமே.

எப்போது பாலசிங்கத்தின் மரணத்திற்கு பின் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் இந்திய நீதிமன்றத்தின்முன் நிறுத்தப்படவேண்டிய 'கே.பி' விடுதலைப் புலிகள் இயக்கத்தின் முகமாக சர்வதேச சமூகத்தின் முன் தோன்றியபோதே, இந்தியாவிற்கு தவறான ஒரு 'சிக்னல்' கொடுக்கப்பட்டு விட்டது. இது கடைசிவரையிலும் மாற்றப்படவில்லை.

அதுபோன்றே, அந்த இயக்கம் இந்திய அரசை அணுகுவதற்காக தேர்ந்தெடுத்த தமிழ்நாட்டுத் தலைவர்களுக்கு இந்திய அரசின் வரைமுறைகளும் நெறிமுறைகளும் கூடத்தெரிந்திருக்கவில்லை. அன்றும் சரி இன்றும சரி, இந்த இரு சாராரும் போரின் கடைசிக் கட்டத்தில் போரை நிறுத்துவதற்கு இந்தியா எடுத்த நன்முயற்சிகளை ஒப்புக்கொண்டு அதன் அடிப்படையில் புது டில்லியுடனான பேச்சுவார்த்தைகளைத்தொடரமுயலவில்லை.

உதாரணத்திற்கு, 2009ஆம் ஆண்டு மே மாதம் 1-13 திகதிகளிடையே இந்தியா கேட்டுக்கொண்டதற்கு இணங்க இலங்கை அரசு நடைமுறைப் படுத்திய போர்நிறுத்தம். அதன் பயன் அப்பாவித் தமிழ் மக்களை சென்றடையவில்லை என்பது வேதனைக்குரியது.

தற்போதைய சூழ்நிலையில், அமைச்சர் கிருஷ்ணா இலங்கை வரும் முந்தைய நாள், தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு - கற்றுக்கொண்ட பாடங்கள் குழுவின் அறிக்கை குறித்த தனது விளக்கங்களை அளித்திருப்பதும் இந்த வகையிலேயே சர்வதேச சமூகத்தால் பார்க்கப்படும். குழுவின் அறிக்கை வெளியிடப்பட்டு வாரங்கள் உருண்டோடிய பின்னர் கூட்டமைப்பின் 115' பக்கம் கொண்ட அறிக்கைக்கு அத்தகைய முக்கியத்துவத்தை எதிர்பார்க்க முடியாது. அந்தவகையில் கூட்டணியின் அறிக்கை வெளியிடப்பட்டுள்ள சமயமானது இந்தியாவை இலங்கை தமிழ் அரசியல் தலைமை பொருட்படுத்தவில்லை என்ற எண்ணத்தையே உருவாக்கும். இதனால் கூட்டமைப்பிற்கோ தமிழ் மக்களுக்கோ அதிகப்படியான பயன் எதுவும் கிடைத்துவிடும் என்று கருத இடம் இல்லை.

பொலிஸ் மற்றும் நிலம் குறித்த உரிமைகள் பிராந்திய அரசுகளுக்கு வேணடும் என்பது கூட்டமைப்பின் நிலைப்பாடு. அதேசமயம், நாடாளுமன்றத்திற்கு செல்லாமல் அந்த அதிகாரங்கள் கிடைத்துவிடும் என்று எதிர்பார்க்க முடியாது. அதுவும் குறிப்பாக பிராந்திய அரசுகளுக்கு, பதின்மூன்றாவது திருத்தத்திற்கும் மேலதிகமான அதிகாரங்கள் வேண்டும் என்றால் அது நாடாளுமன்றத்திற்கு செல்லாமல் கிடைக்கும் வாய்ப்பு இல்லை.

கடந்த இருபது ஆண்டுகளுக்கும் மேலாக பதின்மூன்றாவது சட்டத்திருத்தத்தை ஏற்றுக் கொள்ளமாட்டோம் என்றவர்கள் தற்போது பொலிஸ் மற்றும் காணி குறித்த அதிகாரங்களுக்கு மட்டும் அதனை ஏற்றுக் கொள்வோம் என்று கூறுவது ஏற்புடையதா என்று தங்களைத் தாங்களே கேட்டுக்கொள்ள வேண்டும்.

கூட்டணித்தலைமை ஆகட்டும், சர்வதேச சமூகத்தின் ஒரு பகுதியினர் ஆகட்டும், நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை இருப்பதாலும் தொடர்ந்து பதவியில் இருப்பதால் மட்டுமே அதிபர் ராஜபக்ஷ தன்னால் நினைத்த காரியங்களை சாதித்துவிடமுடியும் என்று எண்ணுகிறார்கள்.

தற்போதுள்ள ஆளும் கூட்டணியில் பல்வேறு கட்சிகள் மட்டுமல்ல, பல்வேறுதரப்பட்ட அரசியல் மற்றும் சமுதாயப்பின்னணியிலிருந்து வந்துள்ள தலைவர்கள் நாடாளுமன்ற உறுப்பினர்களாக உள்ளனர். ஜனாதிபதி ராஜபக்ஷ மீதான மரியாதையை விட, பயத்தைவிட, அரசியல் மாற்றத்திற்கான காரணங்களும் காரணிகளும் கண்ணில் இன்னும் புலப்படவில்லை என்ற ஒரே காரணத்திற்காக ஒரு சிலர தொடர்ந்து இருந்து வருகிறார்கள்.

இந்த உறுப்பினர்கள் எதிர்பார்க்கும் காரண - காரணிகளை வழங்கிவிடக்கூடாது என்ற ஒரே நோக்கில் ஆளும் கூட்டமைப்பு தலைமை செயற்பட்டுவருகிறது. அதில முக்கியமான ஒன்றே, அதிகாரப் பகிர்வு என்பதாகும்.

நான்கு அரசியல் கட்சிகளையும் கட்சி சாராத பல்வேறு நாடாளுமன்ற உறுப்பினர்களையும் கொண்டு உருவாக்கப்பட்டுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தலைமைக்கு இந்தப்பிரச்சினை புரியாத விடயமல்ல. நாட்டின் கடந்த முப்பது ஆண்டுகால அரசியல் வரலாற்றையும் ஜனாதிபதி மகிந்தவின் அணுகுமுறையையும் கூர்ந்து கவனித்து வருபவர்களுக்கு இந்தப் பிரச்சினையின் பல்வேறு பரிமாணங்களும் ஆழமும் நன்கு விளங்கும்.

இந்தப்பின்னணியில் அனைத்துக் கட்சிகளையும் உள்ளடக்கிய நாடாளுமன்ற தெரிவுக்குழு மூலம் பிரச்சினைக்கான முடிவை நோக்கி நகர்வது அரசின் இராஜதந்திர செயற்பாடாகவே கருதப்படவேண்டும். கூட்டமைப்பு கூறுவதுபோல் பேச்சுவார்த்தை மூலம் தீர்வு ஏற்பட வாய்ப்பு இருந்தால், முஸ்லிம் மற்றும் மலையக தமிழர்களுக்கான அதிகார பகிர்விற்கு யார், எங்கே, எப்படி அச்சாரம் கொடுப்பது?

மேலும் அத்தகைய முடிவுகள் நாடாளுமன்றத்தின் முன்னர் வைக்கப்படும்போது 'சந்திரிகா தீர்வை' செல்லாகாசாக்கியதுபோல் இப்போதும் எதிர்க்கட்சிகள் செய்ய முயலாது என்று கூற முடியாது. அதுவே ஆட்சியாளர்களின் நாடாளுமன்ற பெரும்பான்மையை பதம பார்க்கும் வாய்ப்பும் உள்ளது. அன்று, சிங்கள பேரினவாதிகள் அனைவரும் ஒன்று சேர்ந்து தமிழ்ச்சமூகத்தை மீண்டும் ஒருமுறை வஞ்சித்துவிட்டார்கள் என்று முறையிட முடியாது. தேர்தல் சார்ந்த ஜனநாயக அரசியலில் இது வெலலாம் பாலபாடம்.

ஜனாதிபதி மகிந்தவைப் பொறுத்த வரை, பிரச்சினைகளுக்கும் பேச்சுவார்த்தைக்கும் அளிக்கும் முக்கியத்துவத்தை விட பிரசார உத்திகளுக்கு அதிகநேரம் செலவிடுகிறார் என்ற எண்ணம் உருவாகிவருவது துர்ப்பாக்கியமான நிலைமை. அமைச்சர் கிருஷ்ணா வரவை ஒட்டி ஜனாதிபதி மகிந்த கொண்டாடிய பொங்கல் விழா இந்தப் பட்டியலில் அடங்கும். ஆனால், பிரசாரத்திற்கு பிரசாரம் என்று விடுதலைப் புலிகள் இயக்கத்தின் உத்திகளை முறியடிக்க முடிந்ததால் மட்டுமே அவரது தலைமையால் அவர்களை போரிலும் வெல்வது சாத்தியமானது. ஆனால் அதுமட்டுமே போதும் என்று கருதி இருந்துவிடமுடியாது. இன்னும் சொல்லப் போனால், இலங்கை அரசு எங்கே அவ்வாறான போக்கில் இருக்கிறதோ என்ற எண்ணமே சர்வதேச சமூகத்தை 'போர்க் குற்றம்' போன்ற பிரச்சினைகளில் அதிக கவனம் செலுத்தத் தூணடியது.



கிருஷ்ணாவின் விஜயம், எதிர்வரும் மார்ச் மாதம் ஜெனிவாவில் கூடவுள்ள ஐ.நா மனித உரிமைக் குழுவின் கூட்டத்திற்கு முன் நிகழ்ந்துள்ளது. கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்கத்திற்கான குழுவின் அறிவுரையை நடப்பாற்றுவது குறித்து இந்தியா உட்பட்ட சர்வதேச நாடுகளின் எதிர்பார்ப்புகளையும் அதன் நடைமுறைச் சாத்தியங்களையும் எடைபோடுவதற்கு இந்த விஜயம் பயன்படும்.

அந்தவிதத்தில், மார்ச் மாதத்திற்குள் அரசுடன் பேச்சுவார்த்தை நடத்தி, அதற்கு அனைத்துக் கட்சிகளின் ஆதரவையும் பெறுவதே கூட்டணியின் தற்போதைய அரசியல் தந்திரமாக இருக்க வேண்டும். அதற்கு, கூட்டணி நாடாளுமன்ற தெரிவுக்குழுவில் அங்கம் வகிப்பதே சரியான முறையாக இருக்கும். அவ்வாறு நிகழும் பட்சத்தில், பின்னர் ஏற்படும் பாதிப்புகளுக்கு இலங்கை அரசும் சிங்கள அரசியல் கட்சித் தலைமைகள் மட்டுமே பொறுப்பேற்க வேண்டிவரும்.

- என்.சத்தியமூர்த்தி
கட்டுரையிலிருந்து

# அரசியல் சமூகமும் சிவில் சமூகமும்

அண்மையில் சிவில் சமூகம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு விடுத்த கோரிக்கைகள் வாதப்பிரதிவாதங்களைத் தோற்றுவித்துள்ளது.

இது சிவில் - அரசியல் சமூகங்களுக்கிடையே மோதல் ஆரம்பிக்கின்றதா என்ற கேள்வியினையும் எழுப்புகிறது.

இவ் அறிக்கையில் கையொப்பமிட்டுள்ளவர்கள் மேட்டுக்குடியினைச் சேர்ந்தவர்கள் எனவும் ஈழத் தமிழர் தேசத்தின் உண்மையான சிவில் சமூகப் பிரதிநிதிகள் இவர்கள் இல்லை எனவும் சிலர் வாதிடுகின்றனர். சிவில் சமூகத்தின் அறிக்கையில் முன்வைக்கப்பட்டிருந்த அரசியல் எந்த அரசியல் அமைப்பைச் சார்ந்தது என்ற கேள்விகளும் எழுப்பப்படுகின்றன.

இந்த பத்தி சிவில் - அரசியல் சமூக உறவுகள் குறித்த சில கருத்துக்களைப் பதிவு செய்ய முனைகிறது.

முதலில் சிவில் சமூகம், அரசியல் சமூகம் என்பவற்றை இப் பத்தி எத்தகைய அர்த்தத்தில் பயன்படுதுகிறது என்பதனைத் தெளிவுபடுத்தல் அவசியம்.

சிவில் சமூகத்தினை ஒரு பரந்த அர்த்தத்தில் அரசு (State),சந்தை (Market), குடும்பம் (Family) என்ற நிறுவனங்களுக்குள் உள்ளடங்காத ஒரு சமூக வெளி எனக்குறிப்பிடலாம்.

இங்கு குடும்பம் என்பது பொதுத்தளத்தில் (public sphere) இயங்காது பிரத்தியேகத் தளத்தில் (private sphere) இயங்கும் நிறுவனம் ஆக உள்ளது. ஏனைய இரண்டும் பொதுத்தளத்தில் இயங்குபவை.

சிவில் சமூகமும் பொதுத்தளத்தில் இயங்கும் ஒரு சமூகவெளிதான்.

இந்த அர்த்தத்தில் பார்த்தால் அரசு மற்றும் சந்தை போன்ற நிறுவனங்களுக்கு வெளியில் பொதுத்தளத்தில் இயங்கும் அனைத்து சமூகச் செயற்பாடுகளையும் நாம் சிவில் சமூக செயற்பாடுகள் என அழைக்க முடியும்.



அன்டோனியோ கிராம்ஸி

இந்த பரந்த அர்த்தத்தில் பார்த்தால் கல்விச் சமூகம், தொழிற் சங்கங்கள், சமய நிறுவனங்கள், பல்வேறு வகையான மக்கள் அமைப்புக்கள், ஊடகங்கள் என இவை அனைத்துமே சிவில் சமூகம் என்ற வகைக்குள் உள்ளடங்கப்படக்கூடியவை.

சிலர் ஊடகங்களை அரசின் ஒரு பகுதியாக, அரசின் ஏனைய மூன்று அங்கங்களான சட்டவாக்க அலகு, நிர்வாக அலகு, நீதிபரிபாலன அலகு என்பவற்றுடன் நான்காவது அங்கமாக வர்ணிப்பதுமுண்டு.

அரசியல் சமூகம் என்பது ஏதோ ஒரு வகையில் அரசுடன் தொடர்புபடக்கூடியது. ஒரு நாட்டின் சட்டவாக்கத்திலோ அல்லது நிர்வாகத்தைத் தலைமை தாங்கி நடாத்துவதிலோ பங்கு கொள்ளக்கூடியது.

ஜனநாயக நாடுகளில் நாடாளுமன்றம் சட்டவாக்கத்துக்குப் பொறுப்பாக இருக்கும். அரசாங்கம் (Government) நிர்வாக அலகுக்குப் பொறுப்பாக இருக்கும்

நாம் நடைமுறையில் அரசு, அரசாங்கம் என்பவற்றை ஒரே அர்த்தத்தில் - அதாவது அரசாங்கத்துக்குரிய அர்த்தத்திலேயே அரசு என்பதனையும் பயன்படுத்துவதுண்டு.

ஆனால் அரசியல் அர்த்தத்தில் அரசு, அரசாங்கம் என்பவை வெவ்வேறு அர்த்தங்கள் கொண்டவை. அரசின் ஓர் அங்கமாகத்தான் அரசாங்கம் உள்ளது.

அரசின் அங்கமாக அமையக்கூடிய வாய்ப்புக்களைக் கொண்ட அரசியல் கட்சிகள் அரசியல் சமூகத்தின் முக்கிய பங்காளிகளாக அமைவர்.

இவ் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் நாடாளுமன்றத்துக்குத் தெரிவாகி நாட்டின் சட்டங்களை ஆக்கிக் கொள்கின்றனர். இவர்களின் பெரும்பான்மை பெறுபவர்கள் நாட்டின் நிர்வாக அலகினைப் பொறுப்பெடுத்து அரசாங்கத்துக்கு தலைமை தாங்குகின்றனர். நீதிபரிபாலன அலகு சட்டங்களுக்கமைய குடிமக்களும் அரசாங்கமும் நடந்து கொள்வதைக் கண்காணித்துக் கட்டுப்படுத்துகின்றன.

**- தாமரை காருண்யன் கட்டுரையிலிருந்து**

அதிகாரங்கள் ஒரே அலகில் குவிக்கப்படுவதால ஒரு நாட்டுக்கு ஏற்படக்கூடிய தீமைகளைத் தவிர்த்துக் கொள்வதற்காகவே அரசின் அதிகாரங்கள் இம மூன்று அலகுகளுக்கிடையேயும் பகிரப்பட்டுள்ள நடைமுறையினை ஜனநாயக நாடுகள் பின்பற்றுகின்றன. இத்தகைய பின்னணியுடன் அரசியல்கட்சிகளை, இயக்கங்களை நாம் அரசியல் சமூகம் என அழைக்க முடியும்.

இத்தாலிய அறிஞர் கிராம்சி தனது மேலாண்மை (Hegemony) தொடர்பான கோட்பாட்டை விளக்கும் போது சிவில் சமூகம் (Civil socirty),அரசியல் சமூகம் (Political society) என்பவற்றை அரசில் உள்ளடக்கி அரசு (State) என்பதற்கு ஒரு விரிந்த அர்த்தத தைக் கொடுத்திருந்தார். (12ஆம் பக்கம் பார்க்க)

# கலாமின் சிந்தனையைப் பின்பற்றி யாழிலும் கிராம அபிவிருத்தித் திட்டம்

## இந்தியன் வங்கியின் யாழ். கிளை செயற்திட்டம்

(யாழ்ப்பாணம்)

முன்னாள் குடியரசுத் தலைவர் அப்துல் கலாமின் சிந்தனையை அடியொற்றியதான கிராமங்களை நகரங்களாக உருவாக்கும் திட்டத்தின் அடிப்படையில் இந்திய அரசினால் யாழ். கிராமங்கள் அபிவிருத்தி செய்யப்படும் திட்டம் முன்னெடுக்கப்படவிருப்பதாக இந்தியத் துணைத்தூதர் வி.மகாலிங்கம் தெரிவித்துள்ளார்.


இந்தியன் வங்கியின் முதலாம் ஆண்டு நிறைவையொட்டி யாழ். இந்தியன் வங்கிக் கிளையில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில் இந்தியன் வங்கியானது இந்தியாவில் 20 ஆயிரம் கிளைகளைக் கொண்டிருக்கின்றது. அதில் அரைப்பங்கிற்கு மேற்பட்டவை கிராமங்களிலேயே செயற்படுகின்றன.

இவை கிராமங்கள் தோறும் அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுத்து கிராமங்களை அபிவிருத்தி செய்வதில் பெரும் பங்காற்றி வருகின்றன. அதில் வெற்றியும் கண்டிருக்கின்றன.

எமது முன்னாள் குடியரசுத் தலைவர் அப்துல் கலாம் அவர்கள் நகரத்தில் என்னென்ன வளர்ச்சித் திட்டங்கள் இருக்கின்றதோ அவற்றைக் கிராமங்களுக்கும் அறிமுகப்படுத்தி அவற்றை நகரமாக வளர்த்தெடுக்கும் திட்டத்தை அறிமுகம் செய்திருக்கின்றார். இத்திட்டமானது அவரது ஜனாதிபதிக் காலத்தில் நடைமுறைப் படுத்தப்படாது போனாலும் நடைமுறையில் தற்போது சாத்தியமாகியிருக்கின்றது.

இதனை ஒத்த திட்டத்தையே யாழ். வட்டு. மேற்குக் கிராமத்தில் இந்தியன் வங்கி அறிமுகப்படுத்தியுள்ளது. இதன் மூலமாக சுய தொழில் மற்றும் வாழ்வாதாரத்தை நீங்கள் உயர்த்திப் பயன் பெறுவதுடன் வங்கியினையும்



வளம்படுத்த வேண்டும் என்றும் இந்தியத் துணைத் தூதர் வி.மகாலிங்கம் கேட்டுக்கொண்டார்.

இக்கடன் திட்டத்தின் கீழ் சுய தொழில்களான வியாபாரம், கோழி வளர்ப்பு, ஒட்டுவேலை, கால்நடை வளர்ப்பு மற்றும் விவசாயம், வீடமைப்பு, வீடு திருத்தம், கல்வி போன்றவற்றிற்கு கடன்களைப் பெற்று கிராமப்புற மக்கள் தம்மை வளப்படுத்துமாறும் அவர் இதன்போது கேட்டுக்கொண்டார். தொடர்ந்து இத்திட்டம் ஏனைய கிராமங்களுக்கும் விஸ்தரிக்கப்படவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். (பா)

---

### ஐ.நா. செயலர்...

சாலே கேட்டுப் பெறும் தறுவாயிலிருக்கும் அவருடைய மன்னிப்புப் பற்றி செயலாளர் நாயகம் அவருடன் பேசும் போது, ஏதாவது குறிப்பிட்டாரா என்று நான் வினவியபோது, தான் அவருடன் இது பற்றி எதுவும் பேசவில்லை என்றே கூறினார். உண்மையில், அவருடைய எதிர்ப்பு உண்மையானதாக இருந்தால், அந்த வேளையில் அதனை அவர் குறிப்பிட்டிருக்க வேண்டும்.

2009 மே மாதத்தில், இலங்கையின் தடுப்பு முகாம்களுக்கு பயணம் செய்து, அங்கே இருந்த சிறார்கள் துப்பாக்கி முனையில் அவருக்குப் பாடிக்காட்டிய போது, இது பற்றிய சிந்தனை அவருக்கு வரவில்லை.

இது வரையில் இலங்கையின் போர்க்குற்றங்கள் குறித்த விசாரணைகளுக்கான நடவடிக்கைகள் எதனையுமே பான் கி மூன் எடுக்கவில்லை. இக் குற்றங்களிற் இலங்கை ஐ.நா. பிரதிநிதி அலுவலகத்தாலேயே மேற்கொள்ளப்பட்டவை என்பது குறிப்பிடத்தக்கது.

ஐ.நா. பாதுகாப்புப் படைகள், தாம் ஹைத்தியில் கொலெறாவைப் பரப்பியவை என்ற குற்றச்சாட்டுக்குப் பதிலளிக்க மறுத்த அவர், அனைத்துக் கேள்விகளையும் தனது வழக்கறிஞர் பற்றீசியா ஒப்றாயனிடமே தள்ளிவிட்டார்.

ஐ.நா.வில் ஒளிவுமறைவற்ற நிர்வாகம் வேண்டுமென்று குறிப்பிட்டாலும் அது பற்றி அவர் நடவடிக்கை எடுக்கத் தவறியே விட்டார்.

யாராவது எழுதிக்கொடுத்த அறிக்கைகளை, தப்புத்தவறுகளைத் திருத்தாமல் ஓட்டை ஒடிசல்களுடன் முழுவதாக அப்படியே வாசித்துவிட்டுப், பின்னர் கேள்விகள் கிளம்பும்போது பதிலளிக்காமல் விலகிவிடுவது அவர் பழக்கம் என இன்னர் சிற்றி பிரஸ் செய்திக்குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

### யாழ்ப்பாணப் பெண்...

வெளியே செல்ல அனுமதித்த சென்னை விமான நிலைய அதிகாரிகளிடம் விசாரணைகள் நடத்தப்பட்டுள்ளது. அத்துடன், இவ்வாறு காணாமல்போன பெண்ணின் சூட்கேசில் வெடிகுண்டு இருக்குமோ என்ற அச்சம் ஏற்பட்டதை அடுத்து, வெடிகுண்டு நிபுணர்கள் சென்று அவரின் சூட்கேசை சோதனை போட்டபோது அதில் எதுவும் இருக்கவில்லை எனத் தெரியவந்தது. இந்தச் சம்பவம் விமான நிலையத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. இந்நிலையில், இலங்கை செல்லும் விமானத்தில் ஏறத்தயாராக இருந்த தானுஷா கடத்தப்பட்டாரா அல்லது எவருடனாவது வெளியில் சென்று விட்டாரா என தமிழகப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

---

### நோர்வேயில்...

ஒரு தற்கொலையாக இருக்கலாம் என ஆரம்பகட்ட விசாரணைகளில் இருந்து தெரியவருவதாக நோர்வே பொலிசார் தெரிவித்தனர். இறந்த கரலின் நேசராஜா அகதி அந்தஸ்த்தைக் கோரியிருந்தார் எனவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. இருப்பினும் இவர் ஏன் தற்கொலைசெய்து கொண்டார் என்ற காரணம் தெரியவில்லை எனப் பொலிசார் தெரிவித்தனர். மேலதிக விசாரணைகளை நோர்வே பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

---

### தமிழ் மக்களின்...

திட்டங்களுக்கு மக்கள் ஒருபோதும் எடுபட்டு விடக்கூடாது. ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடன் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷவும் இணைந்து வடமாகாணத்தின் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுத்து மக்களது பொருளாதார மேம்பாட்டுக்காகவும் அயராது உழைத்து வருகின்றார்கள்.

பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் வேண்டுகோளின் பேரில் பூநகரி - சங்குப்பிட்டிப் பாலம் நவீன முறையில் புனரமைக்கப்பட்டதையும் மன்னார் மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களையும் இதன்போது அவர் நினைவு கூர்ந்தார்.

இன்றுள்ள சூழலில் தமிழ் மக்களின் சிறந்த நேர்மையான தலைவராக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா விளங்கி வருகின்றார். அவர் நீண்டகாலமாக கூறி வருகின்ற இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின் பிரகாரம் 13 ஆவது அரசியல் அமைப்புக்கு அப்பால் சென்று தமிழ் மக்களுக்கான அரசியல் உரிமைகளை பெற்றுக்கொள்ள முடியும் என்பதை அப்போது மறுத்திருந்த அரசியல்வாதிகள் இப்போது அதனை ஏற்றுக்கொண்டு அதன் அடிப்படையில் பேசுவதற்கு தயார் என அறிவிக்கின்றார்கள். இதிலிருந்து அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நீண்டகால அரசியல் அனுபவம் புலப்படுவதுடன், அவரே தமிழ் மக்களது சிறந்த தலைவர் என்பதையும் எடுத்துக் காட்டுவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

வடமாகாணத்தில் யுத்தத்தால் குடும்பத் தலைவர்களை இழந்து பல்வேறு இழப்புக்களைச் சந்தித்து நிர்க்கதியாகியுள்ள குடும்பங்களது வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதே வாழ்வெழுச்சி திட்டத்தின் நோக்கமென்றும் தெரிவித்தார்.

மன்னார் சென்.சேவியர் கல்லூரியில் மாவட்ட அரச அதிபர் சரத் ரவீந்திர தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் சிவஞானசோதி திவிநெகும தொடர்பான விளக்கவுரை நிகழ்த்தியதைத் தொடர்ந்து வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறியும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் உரைநிகழ்த்தினர்.

இங்கு பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ அவர்கள் உரையாற்றும்போது, இந்நாட்டை ஆசியாவின் ஆச்சரியம்மிக்க நாடாக மாற்றவேண்டு மென்பதிலும் ஒவ்வொரு மாவட்டங்கள் தோறும் வாழ்வெழுச்சித் திட்டம் ஊடாக வீட்டுத்தோட்டம், கால்நடைவளர்ப்பு, மற்றும் சிறிய நடுத்தர, பாரிய தொழிற்பேட்டைகளை நிறுவி அவற்றினூடாக சிறந்த பொருளாதார அபிவிருத்தி திட்டங்களை மேம்படுத்துவது தொடர்பிலும் ஜனாதிபதி மிகுந்த அக்கறையுடன் செயற்பட்டு வருகின்றார்.

"செழிப்பான இல்லம் வளமான தாய்நாடு" என்னும் வாழ்வெழுச்சி திட்டத்திற்காக நாடளாவிய ரீதியில் 25 இலட்சம் மக்கள் உள்வாங்கப்படவுள்ளனர்.

மன்னார் மாவட்டம் தொடர்பில் அமைச்சர் றிசாட் பதியுதீன் அவர்கள் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்துள்ள நிலையில் அவை நிச்சயம் கவனத்தில் எடுக்கப்படுமென்பதுடன் இம்மாவட்டம் பல்துறை சார்ந்த மாவட்டமாக விளங்கி வருவதுடன் புள்ளி விபரங்கள் அடிப்படையில் வன்னி மாவட்டத்தில் தான் மிகக் குறைந்தளவு வறுமைநிலை மக்கள் உள்ளதாகவும் எதிர்காலத்தில் இத்தொகையும் இல்லாமல் போகும் நிலை உருவாக்கப்பட வேண்டும் எனவும் தெரிவித்தார்.

சமாதானத்திற்கு சமாந்தரமாக நாட்டின் அபிவிருத்தியை ஜனாதிபதி முன்னெடுத்துவரும் நிலையில் அதற்காக பல்வேறு அபிவிருத்தி திட்டங்களையும் நடைமுறைப்படுத்தி வருகின்றார். அமைச்சரவையில் மாற்றம் என்றும் இன்னும் பல்வேறு பொய்யான கருத்துக்களையும் சில அரசியல்வாதிகள் கூறிவருகின்ற நிலையில் மக்கள் மிகுந்த அவதானமாக இருக்கவேண்டுமெனவும் கேட்டுக் கொண்டார்.

இதனிடையே இந்நாட்டில் வாழும் சகல மக்களும் இனம்,மதம்,மொழி என்ற வேறுபாடுகளின்றி ஒற்றுமையாகவும் சமாதானமாகவும் வாழும்போது அபிவிருத்தி மேம்பாட்டை விரைவாக முன்னெடுக்க முடியும் என்றும் சுட்டிக்காட்டினார்.

நிகழ்வில் அமைச்சர் பசில் ராஜபக்ஷவுக்கு அமைச்சர் றிசாட் பதியுதீன் நினைவுப் பரிசிசை வழங்கி கௌரவித்தார். இதன்போது சிரேஷ்ட அமைச்சர் ஏ.எச்.எம். பௌசி, வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி உணேஸ் பாரூக், அமைச்சுகளினதும் அரச திணைக்களங்களினதும் பல்வேறு துறைசார்ந்த அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

இதனிடையே மன்னார் சென்.சேவியர் கல்லூரி மைதானத்தில் 300 வரையான பல்வேறு துறைகளினதும் காட்சிக் கூடங்களும் விற்பனைக் கூடங்களும் அமைக்கப்பட்டிருந்தன.

இவற்றை அமைச்சர்கள் உள்ளடங்கிய குழுவினர் பார்வையிட்டதுடன் அது தொடர்பிலும் துறை சார்ந்தோரிடம் கேட்டறிந்துகொண்டனர்.

இக்கண்காட்சி இன்றும் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

---

### இடம்மாற்றம் பெற்ற...

தமக்கான போக்குவரத்து வசதி, இருப்பிட வசதி போன்றவற்றைப் பெறுவதிலுள்ள வசதியீனங்களைக கருத்திற்கொண்டே தமது கடமைகளைப் பொறுப்பேற்க முடியாதுள்ளதாகவும் அறியமுடிகின்றது.(17)

---

### கிராமிய வளர்ச்சி...

ஈடேற்றிக்கொள்ள முடியும். இது ஒரு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த சந்தர்ப்பம், ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஆர்வத்துடனேயே இந்த நிகழ்வுகள் இடம்பெறுகின்றன. மும்மொழி ஆண்டாக 2012 ஆம் ஆண்டு நாமகரணமிடப்பட்டிருக்கின்றமை விசேட அம்சமாகும். பலதரப்பட்டவர்களின் ஒன்றிணைவால்தான் சமூகம் கட்டியெழுப்பப்பட்டுள்ளது.

அதனால், பொருளாதாரத்தின் பிரதிபலன்கள் அனைத்து சமூக கட்டமைப்பிற்கும் பகிர்ந்து செல்லவேண்டும். இல்லையென்றால், பலவிதமான நெருக்கடிகள் ஏற்படுகின்றன. தொழில்வாய்ப்பின்மை, வறுமை போன்ற பிரச்சினைகளால் மனித சமூகம் வன்முறையான விதத்தில் செயற்பட சந்தர்ப்பம் ஏற்படுகிறது.

அவ்வாறான சிறிய வன்முறைகள்,மத,இன அடிப்படையில் பாரிய முறுகல் நிலைக்கு வழி வகுக்கிறது. இவ்வாறான சம்பவங்கள் தொடர பில் இலங்கைக்கும், இந்தியாவிற்கும் பல அனுபவங்கள் உள்ளன. எனவே, குறித்த பிரச்சினைகள் எவ்வாறு ஏற்படுகின்றன என்று ஆராய வேண்டும். எமக்கு சரியான முறையில் சமாதானத்தை பெற்றுக்கொள்ள முடியும். பொதுவாக எமக்கு கிடைக்கக் கூடியது என்னவென்று, எதிர்பார்ப்பதை விட, நம் நாட்டிற்கு என்ன கிடைக்கின்றது என தாம சிந்தித்து பார்க்கவேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் தெல்தெனிய மத்திய மகா வித்தியாலய மாணவி டபிள்யூ.ஏ.லக்மாலி தில்ருகி விஜேசூரிய தமிழில் நன்றியுரையாற்றினார். முந்தல் தமிழ் வித்தியாலய மாணவி ஆர்.சஹனா சிங்களத்தில் நன்றி உரையாற்றினார். அக்கரைப் பற்று முஸ்லிம் மகாவித்தியாலய மாணவி பாத்திமா ஜெமீமா ஆங்கிலத்தில் நன்றி உரையாற்றினார். இந்நிகழ்வில் அமைச்சர்கள், வெளிநாட்டு, உள்நாட்டு பிரமுகர்கள், பாடசாலை மாணவர்கள் என பெருமளவானோர் கலந்துகொண்டனர்.

இதேவேளை, யாழ்ப்பாணத்திற்கு நாளையதினம் விஜயம் செய்யும் அவர் யாழ். பல்கலைக் கழகத்திற்கும் யாழ். இந்துக்கல்லூரிக்கும் விஜயம் செய்து அங்கு ஒழுங்கு செய்யப்பட்டிருக்கும் நிகழ்வுகளில் கலந்துகொள்ளவுள்ளதாக இந்தியத் துணைத்தூதரக அதிகாரி வி.மகாலிங்கம் தெரிவித்தார்.

காலை யாழ். பல்கலைக்கழகத்திற்கு விஜயம் செய்யும் அப்துல் கலாம் யாழ். கைலாசபதி கலையரங்கில் சிறப்புச் சொற்பொழிவினை ஆற்றவுள்ளார். தொடர்ந்து யாழ். பல்கலைக்கழக மாணவர்களையும், துறைத் தலைவர்களையும் சந்தித்து கலந்துரையாடல்களை மேற்கொள்ளவுள்ளார். அதனைத் தொடர்ந்து யாழ். இந்துக்கல்லூரியில் ஒழுங்கு செய்யப்பட்டிருக்கும் கருத்தரங்கிலும் பங்கு கொள்ளவுள்ளார். இந்நிகழ்வுகளை முடித்துக்கொண்டு அவர் அன்றைய தினம் மாலையில் கொழும்பு திரும்பவுள்ளதாகவும் இந்தியத் துணைத் தூதர் வி.மகாலிங்கம் தெரிவித்தார். (பா)

# காணி மோசடி முறைப்பாட்டில் வழக்கறிஞர்களும் அடக்கம்

## என்கிறது பொலிஸ்

(கொழும்பு)

காணி மோசடி தொடர்பில் இதுவரை 600 இற்கும் அதிகமான முறைப்பாடுகள் பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்றுள்ளன. இவற்றுள் சுமார் 100 முறைப்பாடுகள் 5 மில்லியனுக்கும் அதிகமான மோசடிகள் தொடர்பானவையென பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அஜித் ரோஹண தெரிவித்தார். பொலிஸ் நிலையங்கள் மற்றும் இரகசியப் பொலிஸாருக்கே இது தொடர்பரன முறைப்பாடுகள் அதிகமாக கிடைக்கப்பெறுவ தாகவும் அவர் குறிப்பிட்டார். சாதாரண மக்கள் மட்டுமன்றி வைத்தியர்கள், வழக்கறிஞர்கள், ஆசிரியர்கள் உள்ளிட்ட பல உயர திகாரிகள் கூட இவ்வாறான மோசடிக்காரர்களால் ஏமாற்றப்பட்டுள்ளனர்.

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷவின் பணிப்புரையின் பேரில் இத்தகைய மோசடிக்காரர்களை கண்டுபிடிப்பதற்கென இரகசியப் பொலிஸாரின் விசேட பிரிவு ஒன்று தனியே இயங்கிவருவதாகவும் அவர் கூறினார். பொதுமக்கள் 1933 என்ற தொலைபேசி இலக்கத்தினூடாகவோ அல்லது 0112-380380 என்ற தொலைநகலினூடாகவோ இது தொடர்பான முறைப்பாடுகளை வழங்க முடியுமெனவும் அவர் கூறினார்.

நிலம் வாங்குவோர், விற்பனையாளரின் அடையாளத்தை பல்வேறு வகையிலும் உறுதிபடுத்த முயற்சிக்கவேண்டும். அவரது நிலையான வீட்டு அல்லது அலுவலக தொலைபேசி இலக்கத்தினைப் பெற்றுக்கொள்ள வேண்டும். காசோலை மூலமாகவே கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபடவேண்டும். உறுதிப்பத்திரம் எழுதும்போது புகைப்படம் எடுத்துக்கொள்ள வேண்டும். கூடுமானவரை வழக்கறிஞர் ஒருவரது உதவியை நாடுதல் மிக அவசியமாகும்.

இதேவேளை, காணியினை விற்பனை செய்யவுள்ளோர் கூடுமானவரை தரகர் இல்லாது நேரடியாகவே விற்பனையில் ஈடுபடுவதன் மூலம் மோசடிகளை தவிர்த்துக்கொள்ள முடியுமெனவும் அவர் குறிப்பிட்டார்.

# நீரிழிவு நோயாளர்களை காச நோயும் தாக்கும்

(கொழும்பு)

நீரிழிவு நோயாளர்கள் காசநோயால் பீடிக்கப்படுவதற்கான சாத்தியம் அதிகமுள்ளதாக சுகாதார அமைச்சு எச்சரிக்கை விடுத்துள்ளது.

இத்தகைய நோயாளர்களை இனங்காண்பதற்கான திட்டமொன்றை செயற்படுத்தியுள்ளதாக காசநோய் மற்றும் மார்பக புற்றுநோய் தடுப்பு தேசிய செயற்திட்டத்தின் பணிப்பாளர் டாக்டர் சினில்.டி.அல்விஸ் தெரிவித்தார்.

கொழும்பில் மூன்று நிலையங்களிலும் கண்டியில் இரண்டு நிலையங்களிலும் இதனுடன் தொடர்புடைய மருத்துவ பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இதற்கமைய நீரிழிவு நோயாளர்கள் காசநோய் பரிசோதனைக்கும் காசநோயால் பீடிக்கப்பட்டுள்ளவர்கள் நீரிழிவு நோய் பரிசோதனைக்கும் உட்படுத்தப்படுகின்றனர்.

நீரிழிவு மற்றும் காசநோயாளர்களுக்கிடையில் இலங்கையில் உள்ள தொடர்பினை உறுதிப்படுத்துவதே இதன் நோக்கமாகும்.

நீரிழிவு நோயால் பீடிக்கப்பட்டவர்கள் இலகுவாக காசநோயால் பீடிக்கப்படுவதற்கான சாத்தியம் உள்ளமை ஆய்வுகளின் மூலம் தெரியவந்துள்ளதாகவும் அவர் மேலும் கூறியுள்ளார்.

# 73 முன்னாள் போராளிகள் இன்று சமூகத்துடன் இணைப்பு

(கொழும்பு)

இறுதிக்கட்டப் போரின் போது படைத்தரப்பினரிடம் சரணடைந்த பின்னர், புனர்வாழ்வளிக்கப்பட்ட மேலும் ஒரு தொகுதி விடுதலைப் புலிகளின் முன்னாள் போராளிகள் இன்று சமூகத்துடன் இணைக்கப்படவுள்ளனர்.

இதன் போது 73 விடுதலைப் புலிகளின் முன்னாள் போராளிகள் சமூகத்துடன் இணைக்கப்படவுள்ளதாக சிறைச்சாலைகள் மற்றும் மறுசீரமைப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

கிழக்கு மாகாண புனர்வாழ்வு நிலையத்தில் புனாழ்வு வழங்கப்பட்ட இப்போராளிகள் இன்று அவர்களின் பெற்றோர்கள் மற்றும் உறவினர்களுடன் ஒப்படைக்கப்படவுள்ளதாக சிறைச்சாலைகள் மற்றும் மறுசீரமைப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்நிகழ்வு இன்றைய தினம் மட்டக்களப்பு வெபர் மைதானத்தில் இடம்பெறவுள்ளதாக சிறைச்சாலைகள் மற்றும் மறுசீரமைப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

# கடனட்டை மோசடியில் ஈடுபட்டாராம் யாழ். இளைஞர் சென்னையில் கைது

போலி கடனட்டை மோசடி தொடர்பாக யாழ்ப்பாண இளைஞர் ஒருவரை இந்தியப் பொலிஸார் கைது செய்து புழல் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 28 வயதான நந்தீபன் எனும் இளைஞரே கடந்த புதன்கிழமை கைது செய்யப்பட்டவராவார். இவரிடமிருந்தும் இவரின் சகாவான வினோத்திடமிருந்தும் 70 போலி கடன் அட்டைகள், 200 வங்கி அட்டைகள் என்பன வற்றை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். இவ்விருவரும் வேளச்சேரி மற்றும் கிழக்கு கடற்கரைச்சாலை ஆகிய இடங்களிலுள்ள தன்னியக்க பணப்பரிமாற்ற நிலையங்களிலிருந்து 1.16 இலட்சம் இந்திய ரூபாவை பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

நந்தீபன், வினோத் ஆகியோரிடம் நடத்திய விசாரணைகளின் போது தாம் போலி கடனட்டை தயாரிக்கும் முறையை மலேஷியாவில் வசிக்கும் மற்றொரு இலங்கையரான குமார் மூலம் அறிந்ததாக கூறியுள்ளனர். குமாரின் வழிகாட்டலின் பேரில் அவர்கள் பணப்பரிமாற்ற இயந்திரத்திலிருந்து பணம் பெற்றுள்ளனர்.

கடந்த டிசம்பர் மாதம் இரண்டாவது தடவையாக சென்னைக்கு வந்த நந்தீபன் அங்கு குமாரை சந்தித்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இலங்கையில் வசிக்கும் தனது மனைவி, மகனை சந்திப்பதற்காக நந்தீபன் கடந்த 12 ஆம் திகதி இலங்கைக்கு திரும்பவிருந்தார். எனினும் மேலும் சில இலட்சம் ரூபா பணத்தை பெற்றுக்கொள்வதற்காக அவரை இந்தியாவில் இருக்கும்படி குமார் கோரியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அதன்பின் வேளச்சேரி பாபி நகரில் வங்கியொன்றின் பணப்பரிமாற்ற இயந்திரத்திலிருந்து பணம் பெறும்போது பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

தான் பிரான்ஸுக்கு செல்வதற்கும் பின்னர் குடும்பத்தினரை அழைப்பதற்கும் திட்டமிட்டிருந்ததாக பொலிஸாரிடம் நந்தீபன் தெரிவித்துள்ளார்.

இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான யுத்தத்தின்போது குண்டு வெடிப்பில் சிக்கி, சிறுநீரகமொன்றையும் ஏனைய சில உடல் அங்கங்களையும் இழந்ததாகவும் ஒருவருட காலத்திற்கு மேல் வைத்தியசாலையில் இருந்ததாகவும் பொலிஸாரிடம் அவர் கூறியுள்ளார்.

# இனப்பிரச்சினைக்கான தீர்வு சமஷ்டியாக அமையக் கூடாது

## என்கிறார் அமைச்சர் விமல்

(கொழும்பு)

இனப்பிரச்சினைக்கு எப்படியான தீர்வு வழங்கப்பட்டாலும் அது சமஷ்டி அரசாங்கம் ஒன்று உருவாக காரணமாக அமைந்து விடக் கூடாது. ஒற்றையாட்சியின் கீழாகவே அனைத்து தீர்மானங்களும் எடுக்கப்பட வேண்டும் என அமைச்சர் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது, 13ஆவது அரசியல் அமைப்புத் திருத்திற்கு அப்பால் சென்ற தீர்வாக செனட் சபை ஒன்று ஸ்தாபிக்கப்படுமானால், அதில் உள்ளடக்கப்படும் விடயங்கள் தொடர்பில் பகிரங்கமாக அறிவித்து, பின்னர், அதனை செயற்படுத்துவது பொருத்தமானதா? இல்லையா? என்பது பற்றிய முடிவுக்கு வர முடியும்.

13 ஆவது அரசியல் அமைப்புத் திருத்திற்கு அப்பால் சென்ற திருத்தம் எனக் கூறப்பட்டாலும் அது எப்படியான தீர்வு என்பது குறித்து, இதுவரை தெளிவுப்படுத்தப்படவில்லை என்பதால், அது பற்றி தெளிவுப்படுத்தும் அவசியமில்லை எனவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

# கைக்குண்டு மீட்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு தொழில்நுட்பக் கல்லூரிக்கு அண்மையில், வீதியில் கிடந்த கைக்குண்டு மீட்கப்பட்டு இராணுவத்தினரால் செயலிக்கச் செய்யப்பட்டதாக முல்லைத்தீவு பொலிஸார் தெரிவித்தனர்.

வீதி திருத்தப் பணிகளில் ஈடுபடும் பணியாளர்கள் குறித்த குண்டைக் கண்டு, அது குறித்து பொலிஸாருக்கு தெரிவித்ததை அடுத்து, இராணுவத்தின் உதவியுடன் அக்குண்டு செயலிழக்கச் செய்யப்பட்டது. இக் குண்டு மிகவும் பழமைவாய்ந்தது எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

(04)

# கப்பம் பெற முயற்சித்த சிறை அதிகாரிகள் கைது

(கொழும்பு)

மாத்தறை பிரதேச நிதி நிறுவனம் ஒன்றின் முகாமையாளரை அச்சுறுத்தி கப்பம் பெற முயன்ற வெலிக்கடை சிறைச்சாலையின் இரண்டு அதிகாரிகள் உள்ளிட்ட ஐந்து சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்கள் குறித்த நிதி நிறுவன முகாமையாளரை தொலைபேசி மூலம் அச்சுறுத்தி கப்பம் கோரியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

வெலிக்கடை சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதியொருவரை பயன்படுத்தி இவ்வாறு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளமையும் தெரியவந்துள்ளது.

இந்த அச்சுறுத்தல் காரணமாக பணம் வைப்பிலிடப்பட்ட வங்கிக் கணக்கு தொடர்பிலும் பொலிஸார் பல்வேறு தகவல்களை உறுதிப்படுத்திக் கொண்டுள்ளனர்.

இதற்கமைய குறித்த வங்கிக் கணக்கின் உரிமையாளர் மற்றும் பணத்தை சிறைச்சாலை அதிகாரிகளிடம் கையளித்த பெண் ஆகியோரும் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

# தந்தை செல்வா பாடசாலையில் அறை உடைத்து பணம் திருட்டு

(தெல்லிப்பளை)

தெல்லிப்பளை தந்தை செல்வா தொடக்கநிலைப் பாடசாலையின் அதிபர் அலுவலகத்தை உடைத்து, உட்புகுந்த திருடர்கள் அங்கிருந்த 35 ஆயிரம் ரூபா பணத்தை திருடிச் சென்றுள்ளதாக அதிபர் தெல்லிப்பளை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

தற்போது தரம் ஒன்றுக்கான மாணவர் அனுமதி நடைபெற்றுள்ள நிலையில் மாணவர்களுக்கான கழுத்துப்பட்டி விற்பனை மூலம் பெறப்பட்ட பணம் மற்றும் பாடசாலைக்குரிய பணம் என்பன அதிபர் தனது அலுவலகத்தில் வைத்துவிட்டுச் சென்றுள்ளார்.

இந்த நிலையில் நேற்று முன்தினம் இரவு குறித்த பாடசாலைகளுக்குள் புகுந்த திருடர்கள் அதிபரின் அலுவலகக் கதவை உடைத்து, உட்புகுந்து அங்கிருந்த பணத்தை எடுத்துச் சென்றுள்ளனர்.

நேற்றுக்காலை பாடசாலைக்குச் சென்ற அதிபர் அலுவலகக் கதவு உடைக்கப்பட்டதனையும், பணம் களவாடப்பட்டதையும் அறிந்து, தெல்லிப்பளை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார். இது தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (17)

# வீதியில் சென்ற இளைஞனுக்கு தலையில் வாள்வெட்டு

(ஏழாலை)

ஏழாலைப் பகுதியில் வீதியால் சென்று கொண்டிருந்த இளைஞனுக்குத் தலையில் வாளால் வெட்டிவிட்டு மர்ம நபர் தப்பியோடிய சம்பவம் ஒன்று ஏழாலைப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

மேற்படி சம்பவத்தில் காயமுற்ற அதே இடத்தைச் சேர்ந்த அரவிந்தன் (வயது-21) தெல்லிப்பளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத் தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். தன்னுடைய மகனை என்ன காரணத்திற்காக தாக்கினார்கள் என்று அறியாது பெற்றோர் அதிர்ச்சியடைந்துள்ளனர். (எஸ்)

# காணாமற் போனவரைக் கண்டறிய மெழுகுவர்த்திப் போராட்டம்

(கொழும்பு)

காணாமல் போனோரைத் தேடியறியும் குழுவினால், கோட்டை ரயில் நிலையத்திற்கு முன்பாக மெழுகுவர்த்தி ஏந்தி நிற்கும் போராட்டம் எதிர்வரும் 24ஆம் திகதி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பாக மேற்படி குழு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

ஊடக வியலாளர் பிரகீத் எக்னெலிகொட கடத்தப்பட்டு இரண்டு வருட பூர்த்தியை முன்னிட்டும் ஏனைய காணாமல் போனவர்கள், கடத்தப்பட்டவர்கள், அரசியல் கைதிகள் போன்றோரின். விடுதலை குறித்தும் இப்போராட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

கோட்டை ரயில் நிலையத்திற்கு முன்பாக காணாமற் போனவர்களின் புகைப்படங்களுடன் மெழுகுவர்த்தி ஏந்திய போராட்டம் ஆரம்பமாகி செக்கடித் தெரு அன்னை வேளாங்கண்ணி ஆலயம் வரை அமைதி ஊர்வலம் செல்லும்.

எனவே, காணாமற் போனவர்களின் மற்றும் அரசியல் கைதிகளின் உறவினர்கள் தமது உறவுகளின் விடுதலை வேண்டி இந்த அமைதி ஆர்ப்பாட்டத்தில் காணாமற் போனவர்களின் புகைப்படங்களுடன் கலந்து கொண்டு, தமது உறவுகளை மீட்டெடுப்பதற்கான அழுத்தத்தைக் கொடுக்க கைகோர்க்குமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2012 ஜனவரி 22 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.